# கல்வித் திட்டமிடல்

## கோட்பாடுகளும் புதிய வளர்ச்சியும்

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்
பேராசிரியர் மா. சின்னத்தம்பி

EDUCATIONAL PLANNING
THEORY AND NEW DEVELOPMENTS

*Prof S Chandrasekaran & Prof M. Sinnathambi*



# கல்வித் திட்டமிடல்

## கோட்பாடுகளும் புதிய வளர்ச்சியும்

# Educational Planning

## Theory and New Development

**பேராசிரியர் சோ. சந்திரசேகரன்** BEd. Hons., M.A. (Hirosima)

**மா. சின்னத்தம்பி** M.A. (Econ.); M.Phil (Ed.)

*"………. ஒரு கல்வி முறையானது பிழையானவற்றை வினைத் திறனுடன் செய்யலாம் அல்லது சரியானவற்றை வினைத் திறனின்றிச் செய்யலாம். ஏனெனில்……….''*

- யுனஸ்கோ

**நூல் விபரம்**

தலைப்பு
**கல்வித் திட்டமிடல் : கோட்பாடுகளும் புதிய வளர்ச்சியும்**

ஆசிரியர்கள்
**பேராசிரியர் சோ. சந்திரசேகரன்**
**மா. சின்னத்தம்பி**

உரிமை
**ஆசிரியர்களுக்கு**

இரண்டாம் பதிப்பு
**ஜனவரி 2006**

முதற்பதிப்பு
**டிசெம்பர் 2000**

பொருள்
**கல்வியியல் - கல்வித் திட்டமிடல்**

## Publication Data

Title
**Educational Planning**
Theory and New Development

Authors
**Prof. S. Sandarasegaran**
**M. Sinnathamby**

Rights
**To Authors**

**ISBN 955-1013-73-5**

Second Edition
**January 2006**

First Edition
**December 2000**

# முன்னுரை

புத்தாயிரம் ஆண்டில் சமூக மற்றும் தேசிய ரீதியான முன்னேற்றங்கள் விரைவுபடுத்தப்படுவதற்கு உதவுகின்ற மையநிலை விசைச்சக்கரமாக கல்வி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கல்வி ஒரு சமூகத்துறையாக மாத்திரம் முன்பு நோக்கப்பட்டது. தனிமனிதன், குடும்பம், சமூகம், தேசம் என்பன ஒழுக்கமாகவும் ஒழுங்காகவும் இயக்குவதற்குத் துணைசெய்தது. ஆனால் இன்று அதற்கும் மேலாகக்கல்வி பொருளாதார வல்லாண்மையை உருவாக்கும், மேம்படுத்தும் சக்திமிக்க துறையாகவும் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இதனால் கல்வி, பொருளாதார திசை நோக்கி கூடுதலாக இழுபட்டுச் செல்வதாகவும் கருத்துண்டு.

இன்று 'கல்வியின் பொருளியல்' என்பது அதிக முக்கியத்துவம் பெற்று விட்டது. யுனெஸ்கோ, உலகவங்கி போன்ற சர்வதேச நிறுவனங்கள் தமது பொருளாதார தீர்மானங்களுக்கு அடிப்படையாகக் கல்வியை நோக்கு கின்றன. தேசிய ரீதியாகவும் திட்டமிடல் அமைச்சு கல்விசார் வள ஒதுக்கீடு களை தேசத்தின் உற்பத்தியோடும், தொழில் வாய்ப்போடும் தொடர்பு படுத்துகின்றது. மனிதவள விருத்தி தொடர்பாக கல்வியை ஒழுங்கு படுத்துவது அவசியமாகிவிட்டது. இந்தப் பின்னணியில் கல்வித் திட்ட மிடல் அதீத முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தமிழ் மொழியில் கல்வித்திட்டமிடல் பற்றிய இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் ஒரு சிலவே வெளிவந்துள்ளன. அண்மைக்காலத்தில் புதிதாகச் சேர்ந்த கல்வித்திட்டமிடல் தொடர்பான சிந்தனைகள், கருத்துக்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவருகிறது.

ஆசிரியர்கள், கல்வியியல் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் போன்றவற்றின் மாணவர்களுக்கு இது பெரிதும் உதவும். கல்வித் திட்டங்களை வரைவோர், கல்வி நிர்வாகிகள் ஆகியோருக்கும் இது உதவும். கல்வியியல் ஆய்வாளருக்கும் கூட இது பயன்படும் என நம்புகிறோம்.

வழமைபோல் எமது வெளியீடுகளை நாடுமுழுவதும் விநியோகம் செய்து வரும் கொழும்பு 12 இல் அமைந்த லங்கா புத்தகசாலை நிறுவனத் தாருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

**சோ. சந்திரசேகரன்**
**மா. சின்னத்தம்பி**
***01. 12. 2005***

## உள்ளடக்கம்


1. கல்வித் திட்டமிடல் : பண்புகள் ............. 7
2. கல்வித் திட்டமிடல் : வரலாறும் வளர்ச்சியும் ............. 12
3. கல்வித் திட்டமிடல் : அணுகுமுறைகள் ............. 24
4. கல்வித் திட்டமிடல் : செயன்முறைகள் ............. 43
5. இலங்கையில் கல்வித் திட்டமிடல் ............. 56
6. மக்கள் திட்டம் : கிராமியமட்டக் கல்வித் திட்டங்கள் ............. 65
7. சுயதொழில் வாய்ப்புக்கான கல்வித் திட்டம் ............. 75
8. கல்விச் செலவும் நிதியிடலும் ............. 86

# அத்தியாயம் 1

## கல்வித்திட்டமிடல் : பண்புகள்

கல்வித்திட்டமிடல் ஒரு நாட்டில் உள்ள மாணவர், ஆசிரியர், பெற்றோர், நிர்வாகிகள், அரசியல் தலைவர்கள் போன்ற பலரும் கவனத்திற் கொள்ளும் பிரதான விடயமாகும். 1950களின் முன்பு கல்வித்திட்டமிடல் என்ற பதம் நன்கு அறியப்பட்டிருக்கவில்லை. ஆனால் தற்போது உலகின் கல்வித்துறை தலைவர்கள், அரசாங்கங்கள், சமூகவிஞ்ஞானிகள் போன்றோரும் இதில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர். சர்வதேச முகவர் நிலையங்கள் எல்லாம் உலகநாடுகள் எல்லாவற்றிலும் ஏதோ ஒரு வகையான கல்விச் செயற் திட்டங்களை அதற்குட்பட்ட பயிற்சிகளை தொடர்ந்து நடாத்தி வருகின்றன. ஏராளமான கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் கல்வித் திட்டமிடல் தொடர்பாக நடாத்தி வருகின்றன. 1990களிலிருந்து உலக வங்கியின் கவன ஈர்ப்புக்கு உரிய முதன்மையான விடயமாகி வருகின்றது.

### திட்டமிடல் அறிமுகம்

திட்டமிடல் என்ற விஞ்ஞான ரீதியான ஒழுங்குமுறையிலமைந்த செயன் முறையை கல்வி அபிவிருத்தியுடன் பிணைக்கும் போது கல்வித் திட்டமிடல் என விளக்கப்படுகின்றது.

ஒரு நாட்டு மக்கள், சமூகம் என்றோருக்கு சில தேவைகளும் குறிக்கோள்களும் உள்ளன. அத்தேவைகளை நிறைவேற்றும் போது கூடுதலாக வினைத்திறனும், பயனுறுதித்தன்மையும் விரும்பப்படுகிறது. அத்தகைய தன்மைகளை அடையும் முறையில் கல்வி அபிவிருத்தியை அதற்கான செய்முறையை ஒழுங்காகத் தீர்மானிக்க வேண்டும். அத்தகைய தீர்மானம் பற்றிய விஞ்ஞான ரீதியான பொறிமுறையே கல்வித்திட்டமிடல் ஆகும்.

அதாவது ஒரு நாட்டு மக்கள் தமது வாழ்வின் தேவைகளையும் குறிக்கோள் களையும் கிடைக்கும் வளங்களினடிப்படையில் ஆகக்கூடிய வினைத்திறன்

மற்றும் பயனுறுதித்தன்மையுடன் அடைதற்கான விஞ்ஞான ரீதியிலமைந்த ஒழுங்கான செயன்முறையே கல்வித்திட்டமிடல் ஆகும்.

கொள்கை ரீதியாக கல்வித்திட்டமிடல் எல்லா நாடுகளுக்கும் பொதுவானது. அதன் முறையில் போதியளவு நெகிழ்ச்சியுடையது. எல்லா நிலைமைகளுக்கும் பொருந்தக்கூடியது. வெவ்வேறு ஆட்சிமுறைகளுக்கும் ஏற்றதாக விட்டுக் கொடுக்கக்கூடிய பொறிமுறை கொண்டதாகும். இதனால் கல்வித்திட்டமிடல் எண்ணக்கரு, கோட்பாடு என்பன உலகின் எல்லா நாடுகளுக்கும் பொருந்தக் கூடியது.

திட்டமிடல் நடைமுறைகள் வேண்டுமானால் அவை பயன்படுத்தப்படுகின்ற சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளுக்கேற்ப எளிமையானதாகவோ, சிக்கலானதாகவோ அமைவதுண்டு.

கல்வித் திட்டமிடல் ஒரு நாட்டின் தொகை ரீதியான கல்வி விரிவாக்கத்தை (Quantitative Expansion) நோக்காகக் கொண்டது என்று கருதுவது தவறானது. திட்டமிடல் ஏராளமான புள்ளி விபரங்களைப் பயன்படுத்துகிறது. ஆனாலும் வெறுமனே தொகை ரீதியான பெருக்கம் பற்றி திட்டமிடல் கவனம் செலுத்துவதில்லை. பதிலாக பண்பு ரீதியான முன்னேற்றமும் (Qualitative Expansion) விரும்பப்படுகின்றது.

கல்வித்திட்டமிடல் ஒரு நாட்டின் கல்வி முறைச் செயற்பாட்டின் கடந்தகால புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொள்கிறது. நிகழ்கால மக்கள் வளங்கள் என்போரைப் பயன்படுத்துகிறது. எதிர்கால கல்வி முன்னேற்றங்களை இலக்காகக் கொள்கிறது. இவ்வாறு மூன்று காலப் பகுதியையும் தொடர்புப்படுத்துகின்ற தொடர்ச்சியான செய்முறையே கல்வித் திட்டமிடல் என்பதும் முக்கியமானது.

கல்வி தொடர்பாக கற்றல் கற்பித்தல் தொடர்பாக எதை எந்தளவில் எப்போது எப்படி, யாருக்கு வழங்கவேண்டும் எத்தகைய விளைவுகள் ஏற்படவேண்டும் என்ற தீர்மானங்களை எடுப்பதற்குரிய அடிச்சட்டங்களை வழங்குவதே கல்வித் திட்டமிடலாகும்.

சமுதாய இயல்புகளையும், நம்பிக்கைகளையும், நடத்தைகளையும் எல்லோருக்கும் வளர்ச்சியும் மகிழ்ச்சியும் பாதுகாப்பும் தரும் வகையில் மாற்றுவதற்கான அடிப்படைச் சிந்தனைகளையும், செயல்முறைகளையுமே கல்வித் திட்டமிடல் வெளிப்படுத்துகின்றது.

கல்வித் திட்டமிடல் கல்வி முகாமைத்துவ செயல் முறையாக செயற்படுகின்றது. கல்விமுறையின் பல்வேறு மட்டங்களில் செயலாற்றுவோர் முடிவுகளை மேற்கொள்வதற்கு திட்டமிடல் வழிகாட்டுகிறது.



கல்வி முறையின் எல்லா உபபகுதிகளையும் தனித்தனியாக செயற்படுத்தவும், அவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடவும் இதனடிப்படையில் கல்விமுறை முழுவதுமே செயற்படவும் கல்வித் திட்டமிடல் உதவுகின்றது.

ஒரு சமுதாயத்தின் தேவைகள் என்ன, அவை அடைய வேண்டிய இலக்குப் புள்ளி யாது, எதிர்ப்படும் தடைகள் யாவை என்பவற்றைத் தெளிவாக விளங்கிக் கொண்டு உயர்ந்த பெறுபேறுகளை அடைவதற்கு புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டுமென்று கல்வித் திட்டமிடல் வலியுறுத்துகின்றது.

கல்விமுறையின் உள்ளார்ந்த மற்றும் வெளிவாரியான தொடர்புகளிடையே எவ்வாறு ஒரு சமநிலையைப் பேணுவது என்பதையும் மாறும் சூழ்நிலைகளின் கீழ் அவற்றை எவ்வாறு தக்கவைத்துக் கொள்வது என்பதையும் திட்டமிடல் விளக்குகிறது.

### மாறும் வரைவிலக்கணங்கள்

ஒரு நாடு தனது வாய்ப்புக்கள் மற்றும் அபிலாஷைகளுக்குட்பட்ட கல்விசார் நோக்கங்களை அடைவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் பற்றிய ஒழுங்கு முறையான வரைபே திட்டமிடலாகும். இது யுனெஸ்கோ நிறுவனத்தின் வரைவிலக்கணமாகும்.

நியூசிலாந்து கல்வியாளர் சிறில் பீவ்லி (Cyril Beefly) மாணவர்கள் சமுதாயத்தின் கல்விசார் தேவைகள் மற்றும் குறிக்கோள்களைப் பயனுறுதியும் வினைத்திறனும் கொண்டதாக நிறைவேற்றும் செய்முறை பற்றிய விஞ்ஞான ரீதியான வரைபே திட்டமிடல் என்கிறார்.

கல்வித்திட்டமிடல் வரைவிலக்கணங்கள் தேவைக்கேற்பவும் முதன்மைப்படுத்த விரும்பும் அம்சங்களுக்கேற்பவும் மாற்றியமைக்கப்படுவதுண்டு.

இவற்றிலிருந்து கல்வித்திட்டமிடல் தொடர்பாக பின்வரும் அம்சங்கள் முக்கியத்துவம் பெறுவதை அறிந்து கொள்ளலாம்.

- நோக்கங்கள் அபிலாஷைகளை அடைதல்.
- வளங்கள் எல்லாவற்றையும் வினைத்திறன் மற்றும் பயனுறுதியுடைய முறையில் பயன்படுத்தல்.
- விஞ்ஞான ரீதியான செய்முறை
- கோட்பாடுகள், தொழில்நுட்பம், நிதி, நிர்வாகம், பொருளாதாரம், சமூக ஆராய்ச்சி முறைகள் போன்ற பலவும் இணைந்த செயல்முறை

எதிர்காலத்தில் வாழ்வின் இலட்சியங்களும், வாழ்வின் தேவைகளும், வாழ்வின் சூழலும் வேறுபடும்போது திட்டமிடல் பற்றிய வரைவிலக்கணங்களும் நிச்சயமாக வேறுபடும்.

### கல்வித்திட்டமிடலின் அடிப்படை அம்சங்கள்

1960களிலிருந்து கல்வித் தலைவர்களும் பொருளியலாளரும் ஒன்றிணைந்த வகையில் கல்வித்திட்டமிடலுக்கான அடிப்படை அம்சங்களாகப் பின்வருவன வற்றைக் குறிப்பிட்டுள்ளனர்.

**1. தொலை நோக்கு** - Longer range view

கல்வித்திட்டம் பொதுவாக மூன்று தவணைக்குரியதாக கணிக்கப்படுகிறது.

- குறுந்தவணை 12 வருடங்கள்
- நடுத்தவணை 45 வருடங்கள்
- நீண்டதவணை 1015 வருடங்கள்

எக்காலப்பகுதிக்கு திட்டமிடுவதனாலும் முன்னோக்கிய பார்வை தொலை நோக்கு இருத்தல் வேண்டும். எதிர்காலத் தேவைகளை மிகவும் சரியாக கணிப்பதற்கு சிறந்த தொலைநோக்கு அடிப்படையாக இருத்தல் வேண்டும்.

**2. அகல் விரிவுப்பண்பு** - Comprehensive

கல்வி முறையின் பல்வேறு உப அலகுகளுக்கிடையே நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்துவதாயின் கல்வி முறை முழுவதையும் ஒரே நோக்கில் கொண்டுவருதல் வேண்டும். சமுதாய தேவைகளை முன்னுரிமையடிப்படையில் நிறைவேற்றுவதற்கு முறைசாராக் கல்வியையும் முறைசார் கல்வியையும் ஒருங்கிணைத்தல் வேண்டும். சமூகம் பற்றிய முழுமையான பார்வையொன்றைத் திட்டமிடுவோர் பெற்றுக் கொள்வது அவசியம்.

**3. ஒருங்கிணைப்புத் தன்மை** - Integrated

பரந்த வகையிலான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பான திட்டங்களுடன் நெருக்கமாக இணைந்ததாக கல்வித் திட்டமிடல் அமைதல் வேண்டும். உலகின் நடைமுறைப் போக்கு மற்றும் மாற்றங்களிலிருந்து கல்வித் திட்டமிடல் விலகிச் செல்லுதல் கூடாது. அவ்வாறு அமைந்திருந்தாற்றான் கல்வி தனிநபர் முன்னேற்றத்திற்கும் தேசிய அபிவிருத்திக்கும் உதவ முடியும். பற்றாக் குறையான வளங்களைக் கொண்டு உச்சப்பயன்பாட்டை ஏற்படுத்த முடியும்.

**4. கல்வி முகாமைத்துவத்துடன் இணைந்த பண்பு**

Integral part of Educational management

கல்வித் திட்டமிடல் பயனுறுதிமிக்கதாக அமைய வேண்டுமானால் கல்வித் திட்டமிடற் செயன்முறையானது தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் நடவடிக்கை பற்றிய செயல் முறைகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். திட்டமிடல் தனியானதாக்கப்பட்டால் தூய கல்விசார் பயிற்சியாக மாத்திரம் அமையுமேயன்றி எல்லோருக்கும் பயன் ஏற்படமாட்டாது. அதற்குப் பதிலாக ஏமாற்றமும் விரக்தியுமே எஞ்சும்.



**5. பண்பு நிலை அம்சங்கள்** - Qualitative Aspects

கல்வித்திட்டமிடல் தனியே தொகை ரீதியில் அமைந்த விரிவாக்கமாக இருத்தல் கூடாது. கல்வி அபிவிருத்தி தராதர அடிப்படையிலும் ஏற்படுதல் வேண்டும். அவ்வாறு நிகழும் போதுதான் கல்வி பொருத்தமானதாகவும், வினைத் திறனுடையதாகவும், பயனுறுதிமிக்கதாகவும் விளங்கும்.

இவை உலகளாவிய ரீதியில் இன்று கல்வித்திட்டமிடல் பற்றிய கட்டாய நிபந்தனைகள் போன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

உண்மையில் 1960களில் திட்டமிடல் ஒப்பீட்டு கல்வியாகவே நோக்கப்பட்டது. வட அமெரிக்காவின் கல்வி நிறுவனங்கள் அவ்வாறுதான் திட்டமிடலை நோக்கின. ஆனால் பின்பு பிரயோக ஒப்பீட்டுக் கல்வியாக நோக்கப்பட்டது.

அறிஞர்களுக்கும் திட்டமிடல் பணியில் ஈடுபடும் நிர்வாகிகளுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. திட்டமிடல் அரசியல் ரீதியான பணி என்ற கருத்து பெருமளவில் நிலவியது. எத்தகைய பணிகள் அரசியல் ரீதியானவை, எத்தகைய பணிகள் திட்டமிடுவோர்க்குரியன என்பதில் தெளிவான கருத்துக்களை ஏற்படுத்துவது கடினமாகவேயிருந்தது. வேறு சிலர் தொழில்நுட்ப செயல் முறையாகவும் திட்டமிடலை விளக்க முயன்றனர். ஆனால் கல்வியலாளர் தரும் எண்ணக்கருக்கள் திட்டமிடற் செய்முறை திட்டமிடல் மாதிரி என்பவற்றை ஒழுங்குபடுத்துவனவாயிருந்தாலும் திட்ட நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வள ஒதுக்கீடு செய்வதும், தேசிய ரீதியான நிறுவனங்களைப் பயன்படுத்துவதும் அரசியல் அங்கீகாரத்தைப் பொறுத்ததாகவே தற்போதும் இருந்துவருவதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

# அத்தியாயம்

## 2

# கல்வித் திட்டமிடல் : வரலாறும் வளர்ச்சியும்

ஏறக்குறைய 2500 வருடங்களுக்கு முன்பே ஸ்பாடன்ஸ் (Spartans) தமது இராணுவ, சமூக, பொருளாதார நோக்கங்களுக்கு ஏற்றதாக தமது கல்வியைத் திட்டமிட்டனர் என்று அறிய முடிகின்றது. சிந்தனையாளர் பிளேற்றோ (Plato) வும் தமது "குடியரசு" என்ற நூலில் ஏதென்ஸின் அப்போதைய அரசியல் தலைவர் களுக்கு வேண்டிய கல்வித்திட்டத்தை வழங்கியிருந்தார்.

பிற்காலத்தில் புதிய இலட்சியங்களுக்கு ஏற்றதாக சமூக மாற்றங்களை மேற்கொள் வதற்கு கல்வித்திட்டமிடல் கையாளப்பட்டபோது சமூக சிந்தனையாளர் பலர் கல்வி மாற்றங்களை உருவாக்கக்கூடிய சிறந்த கருவி என அதனை விளக்கினர். 16ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஜோன் நொக்ஸ் (John knox) ஆன்மீக ஈடேற்றம், பொருளாதார நலன் என்பவற்றை ஏற்படுத்தும் வகையில் பாடசாலை களையும் கல்லூரிகளையும் திட்டமிடுவது பற்றி விளக்கியிருந்தார். இவ்வாறே போலந்து நாட்டு மக்களுக்கு ஏற்ற கல்வியை வழங்குவது பற்றிய திட்டத்தை ரூஸோ (Rousseau) விளக்கினார்.

### நவீன திட்டமிடல் வரலாறு

நவீன திட்டமிடல் என்பது சோவியத் யூனியனின் திட்டமிடலுடனேயே தொடங்கு கிறது. புதிய சமுதாயம் ஒன்றைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற நோக்கத்துடன் முதலாவது ஐந்தாண்டுத்திட்டம் 1923ல் தொடங்கியது. அதன் திட்டமிடல் முறைமை கடுமையானதாக இருந்தபோதிலும் தொடர்ச்சியும் எல்லாவற்றையும் உள்ளடக்கும் பண்பும் அதில் காணப்பட்டது. இத்திட்டம் மூன்றில் இரண்டு பங்கு எழுத்தறிவற்ற மக்களைக் கொண்ட நாட்டினை உலகில் மிகவும் கல்வி முன்னேற்றம் கொண்ட நாடாக மாற்றுவதற்கு வழிகோலியிருந்தது.

எவ்வாறாயினும் இரண்டாம் உலக யுத்தத்தின் முன்புவரை வெவ்வேறு மட்டங்களில் வெவ்வேறு மாதிரிகளில் கல்வித்திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு



வந்துள்ளது. அவற்றில் காணப்படும் பொதுவான [redacted] குறிப்பிட முடியும்.

**1. குறுங்காலத் திட்டமிடல்**

பொதுவாக அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் அம்சமாக ஒரு வருட காலத்திற்கு உரியதாகக் காணப்பட்டது. பிரதான நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்தால் மாத்திரம் அக்காலப்பகுதி நீடிக்கப்பட்டது.

**2. பல துண்டுகளாயிருத்தல்**

கல்விமுறை முழுவதும் பல சிறிய துண்டுகளாக வகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் தனித்தனியாகத் திட்டமிடப்பட்டிருந்தன.

**3. ஒருங்கிணைக்கப்படாதிருத்தல்**

சமுதாயத்தினதும் பொருளாதாரத்தினதும் தேவைகள் மற்றும் போக்கு என்பவற் றுடன் தொடர்புபடாது கல்வி நிறுவனங்கள் சுயாதீனமாகத் திட்டமிட்டு செயற் பட்டன.

**4. இயங்கியலற்ற தன்மை**

திட்டமிடல் நிலையியல் (Static) கல்வி மாதிரியைப் பின்பற்றியதாயிருந்தது திட்டத்தின் பிரதான அம்சங்கள் எல்லாம் ஒரு வருடத்துள் தொடங்கி அதே வருடத்துள் முடிவடையும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன.

இத்தகைய பொதுவான பண்புகளுடன் திட்டமிடல் காணப்பட்ட போதும் கல்வி நிறுவனங்கள் தமக்கேயுரியதான நிர்வாக அளவுக்கேற்ப நெருக்கடிகளையும், பிரச்சனைகளையும் எதிர்கொண்டன. பெரும்பாலும் முழுமையான திட்டமிடல் என்று நோக்கும் போது இந்த எளிமையான திட்டமிடல் சுமுகமாகவே செயற்பட்டு வந்தது.

அதாவது ஒரு நாட்டு மக்கள் தமது வாழ்வின் தேவைகளையும் குறிக்கோள்களை யும் கிடைக்கும் வளங்களினடிப்படையில் ஆகக்கூடிய வினைத்திறன் மற்றும் பயனுறுதித்தன்மையுடன் அடைதற்கான விஞ்ஞான ரீதியிலமைந்த ஒழுங்கான செயன்முறையே கல்வித்திட்டமிடல் ஆகும்.

### சோசலிச திட்டமிடல்

சோவியத் யூனியனில் "திட்டமிடுவோர்" என்ற பெயரில் பலர் முதன் முதலாக நியமிக்கப்பட்டு "எல்லோருக்கும் கட்டாயக்கல்வி" என்ற இலட்சியத்தை அடையும் வகையில் திட்டமிடற் பொறிமுறை 1923ல் உருவாக்கப்பட்டது.

புதிய கொள்கையின்படியான சோசலிச பொருளாதார முறையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய மனித வளத்தை விருத்தி செய்யக்கூடிய கல்வித்திட்டமிடல் கவனம் செலுத்தப்பட்டது. திட்டமிட்ட பொருளாதாரத்தினால் கல்வித்திட்டமிடலை முன்னேற்றலாமென்றும் மறுபுறம் திட்டமிட்ட கல்வியினால் திட்டமிட்ட

பொருளாதார அபிவிருத்திக்கான அடிப்படைகளை உருவாக்கலாம் என்றும் கருதப்பட்டது. பாடசாலை முறைக்கல்வியும், பாடசாலைக்கு வெளியேயுள்ள கல்வியையும் இணைக்க வேண்டும்; பிள்ளைகளின் கல்வியையும் வளர்ந்தோரின் கல்வியையும் இணைக்க வேண்டும் என்று கருதப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் சோவியத் யூனியனில் விருத்திபெற்ற கல்வித் திட்டமிடலின் கோட்பாடுகள், திட்டமிடல் முறைமை என்பன மத்திய ஐரோப்பாவின் புதிய சோசலிச உலகின் ஏனைய நாடுகளிலும் அறிமுகம் செய்யப்பட்டது.

சோசலிச மாதிரியிலான இத்திட்டமிடல் பின்வரும் தன்மைகளைக் கொண்டிருந்தது.

- மையப்படுத்தப்படல்
- கட்டளையிடுமியல்பு
- கலைத்திட்டத்தில் கொள்கைசார் கட்டுப்பாடுகளை விதித்தல்
- கல்வி அபிவிருத்தி பொருளாதார அபிவிருத்தியுடன் ஒருங்கிணைக்கப்படல்
- முறைசார் கல்வியுடன் முறைசாராக்கல்வி இணைக்கப்பட்டமை

இத்தகைய தன்மைகளுடன் செயற்பட்டுவந்த போதிலும் 1980களில் சோசலிச நாடுகளில் மாற்றங்கள் தென்பட்டன. சீனாவில் 1990களில் கல்வி மீது கட்டுப்பாடு விதிக்கும் அதிகாரங்கள் பெருமளவில் மத்திய திட்டமிடுவோரிடமிருந்து உள்ளூர் அதிகாரிகளுக்கு மாற்றப்பட்டன.

சோவியத் யூனியன் சிதைவடையும் காலம் வரை அதன் கல்வித் திட்டமிடல் சடுதியான பன்முகப்படுத்தலுக்கு உட்பட்டதாயிருந்த உலகின் எல்லா நாடுகள் மீதும் அதனைப்பரவலாக்கியுமிருந்தது.

## முதலாளித்துவ திட்டமிடல்

கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட சந்தைப் பொருளாதார செயன்முறைகள் பழம்பொருளியலாளரின் கருத்துக்களிலிருந்து மாறுபடலாயின. பொருளாதாரங்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் எல்லா நாடுகளின் அரசாங்கங்களும் கல்வியை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் விருப்பமாயிருந்தன. கல்விச் செயற்பாடு தொடர்பாக தூய போட்டிச் செய்முறையைக் காணமுடியவில்லை.

முதலாளித்துவ ஆட்சியாளர் திட்டமிடல் பற்றி அதிக ஆர்வமுடையோராயில்லாத போதிலும் கல்வித்திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டே வந்தது. இந்நாடுகளின் திட்டமிடலில் பின்வரும் தன்மைகள் காணப்பட்டன.

- பெருமளவு பன்முகப்படுத்தல்
- நெகிழ்வுள்ள கலைத்திட்டம்
- கட்டளையிடுவதை விட ஊக்கமளிப்பதில் ஆர்வம்



இந்நாடுகளின் திட்டங்களும், திட்டமிடும் முகவர்களும் 1950 1960 காலப் பகுதியில் வளர்ச்சியடைந்தனர்.

எனினும் உலக யுத்தத்தின் பின்னான புனர்நிர்மாண முயற்சிகளைத் தொடர்ந்து கல்வி பற்றிய புதிய சிந்தனை வளர்ச்சி பெற்றது. தேசிய பொருளாதார அபிவிருத்திக்கான சடுதியான பன்முகப்படுத்தலுக்கு உட்பட்டதாயிருந்ததுடன் உலகின் எல்லா நாடுகள் மீதும் அதனைப் பரவலாக்கியுமிருந்தது. முதலீடுகளாக கல்வி மீதான செலவுகள் நோக்கப்பட்டன. மனித மூலதனக் கோட்பாடு திட்டமிடல் தொடர்பாக கல்வியில் முதன்மை பெறலாயிற்று. இத்தகைய மாற்றுச் சிந்தனையைப் பின்வரும் நிலைமைகளே ஊக்குவித்திருந்தன.

1. குடித்தொகை அசாதாரணமாக பெருகியமை.
2. சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு பற்றிய எதிர்பார்ப்புகள் அதிகரித்தமை.
3. சோசலிச முகாமுடனான பொருளாதார மற்றும் இராணுவ போட்டி நிலைமை அதிகரித்தமை.
4. புதிய பொருளாதார புனரமைப்புக்கு கல்விசார் முதலீடு முக்கியமென உணர்ந்தமை.

முதலாளித்துவ நாடுகள் பலவற்றிலும் பரவலாக இந்த மாற்றங்கள் ஏற்படலாயின. பிரான்ஸ் அறிஞர்களுக்கான உதவிகள் மற்றும் விளையாட்டுத்துறைக்கான ஊக்குவிப்புக்கள் அதிகரித்தன. ஜேர்மன் சமஷ்டித் திட்டமொன்றைக் கல்விக் கெனத் தயாரித்தது. ஐக்கிய அமெரிக்கா ஸ்புட்னிக் நெருக்கடி (Sputnik Crisis) யைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்புக் கல்விச் சட்டத்தைக் கொண்டு வந்தது. கனடாவின் ஒன்றாரியோ மாகாணம் கல்விமுறையைப் புனரமைப்புச் செய்வதற்கு றொபாட்ஸ் திட்ட (Robarts plan) த்தைக் கையாண்டது.

தனிப்பட்ட ரீதியில் நாடுகள் மாத்திரம் இத்தகைய கல்வித்திட்டமிடல் முயற்சிகளில் ஈடுபடவில்லை. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம் (OECD) மத்திய தரைக்கடற் பிரதேச நாடுகளுக்கான பாரிய மனித வலுத்திட்டமிடலை தயாரித்திருந்தது.

ஆனாலும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை பல ஆய்வாளர் இத்திட்டமிடல் பற்றி அதிருப்தி கொண்டிருந்தனர். மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்ட நன்கு நிதியிடப்பட்ட திட்டங்கள் கூட அதிக பயன்களைத் தரவில்லை. மாறாக அவை பல எதிரான விளைவுகளையும் ஏற்படுத்தியிருந்தன.

இதே காலத்தில் வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளில் கல்வித் திட்டமிடலின் கவனம் தொகை ரீதியானவற்றிலிருந்து தராதர அம்சங்களுக்கும் தொழில்நுட்பத்திலிருந்து பங்கேற்பு அணுகுமுறைக்கும் மாறத் தொடங்கின. இத்தகைய மாற்றங்கள் தொடர்ந்து ஏற்பட்டுவருகின்றன.

## வளர்முக நாடுகளின் திட்டமிடல்

1950களிலும் 1960களிலும் சுதந்திரம் பெற்ற பெரும்பாலான வளர்முக நாடுகள் சோசலிச மாதிரியிலமைந்த மத்திய திட்டமிடலினால் கவரப்பட்டிருந்தன. கல்வித்திட்டமிடல் பொருளாதாரத்தைச் செயற்படுத்தும் முக்கிய பொறிமுறையாக நோக்கப்பட்டது.

சர்வதேச நிறுவனங்களும் இப்பிரதேசங்களில் கல்வித்திட்டமிடலை ஊக்குவிக்கலாயின. 1960 62 காலப்பகுதியில் யுனெஸ்கோ (UNESCO) நிறுவனம் தொடர்ச்சியாகப் பல கூட்டங்களை ஒழுங்கு செய்தது. ஆசியா, அரபு நாடுகள், ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் தேசிய கல்வித்திட்டங்களைத் தயாரிப்பதற்கான சட்டகங்களை உருவாக்குவதற்கு உதவக்கூடிய தொகை ரீதியிலான கல்வி விரிவாக்கத்திற்கான இலக்குகளைத் தீர்மானிக்க அக்கூட்டங்கள் உதவின.

1964இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. வளர்முக நாடுகளில் நிபுணத்துவம் மற்றும் பயிற்சி என்பவற்றை மேம்படுத்தக்கூடிய வழிமுறைகளை முன்னேற்றுவதற்கான நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதுவே கல்வித் திட்டமிடலுக்கான சர்தேச நிறுவனம் (International Institute for Educational planning - IIEP) ஆகும். இது யுனெஸ்கோ நிறுவனத்துடன் இணைந்த வகையில் உருவாக்கப்பட்டது. உலகின் பிரதான உதவி வழங்கும் முகவர்களும் இந்தக் காலப் பகுதியில் கல்வி மீது அக்கறை காட்டத்தொடங்கின. உலக வங்கி 1970இல் தனது வெளிவாரியான உதவிகளை வழங்குவதற்கு கல்வித்திட்டமிடலையும் ஒரு நிபந்தனையாக விதித்தது. பெரும்பாலான வளர்முக நாடுகள் தம் அபிவிருத்திக்குரிய உதவிகளை உலக வங்கியிடம் எதிர்பார்ப்பதால் கல்வித்திட்டமிடல் தொடர்பாக நாட்டம் செலுத்தத்தொடங்கின.

சுதந்திரம் அடைந்த புதிய நாடுகளைக் கட்டியெழுப்ப சோசலிச மாதிரியைக் கையாண்டு கல்வித்திட்டமிடலையும், பொருளாதார திட்டமிடலையும் கூட மேற்கொண்டனர். போட்டியிடுகின்ற தேசிய தேவைகளை பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு நிறைவேற்ற முயலும்போது திறமையான வள ஒதுக்கீட்டு உபாயங்கள் தேவை. அத்துடன் தேசிய கல்வித்திட்டமிடல் முகவர்கள், ஆணைக் குழுக்கள், திணைக்களங்கள் போன்ற பலவற்றை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தப்பட்டது.

1970 மற்றும் 1980 காலப்பகுதி அனுபவங்கள் கல்வித்திட்டமிடல் தொடர்பாக ஏமாற்றத்தையே அளித்திருந்தன. கல்வியில் தொகை ரீதியான விரிவாக்கம் பெரிய அளவில் இடம்பெற்ற போதிலும் பல குறைபாடுகள் வெளிப்படையாகத் தெரிந்தன. எழுத்தறிவற்றோர் தொகை அதிகரித்ததோடு, கல்வி வாய்ப்புகளில் சமமின்மையும் அதிகரித்திருந்தது. தராதர ரீதியில் கல்வி பல பின்னடைவுகளை எதிர்கொண்டிருந்தது. 1970களில் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடி மற்றும் 1980களில் ஏற்பட்ட வெளிநாட்டுக்கடன் நெருக்கடி போன்றவற்றினால் வளர்முக



நாடுகள் கல்விக்கென அதிக வளங்களை ஒதுக்க முடியவில்லை. இதன் அடிப்படையிலேயே கல்வித்திட்டமிடல் ஊடாகவும் பெரிய முன்னேற்றங்களை இந்நாடுகள் சாதிக்க முடியவில்லை.

இக்காலப்பகுதியில் வளர்முக நாடுகளில் பல்வேறுவகைப்பட்ட கோட்பாட்டு விளக்கங்களும் நடைமுறை ரீதியில் பொருந்தக்கூடிய தீர்வுகள் பற்றிய நாட்டங்களும் காணப்பட்டன. அறிஞர்களுக்கும் நடைமுறைப்படுத்தும் பணித்துறையினருக்குமிடையில் முரண்பாடுகள் காணப்பட்டன. எண்ணக்கரு ரீதியிலான குழப்பங்களும், பொருத்தமான திட்டமிடல் பற்றிய தெளிவின்மையும் அதிகளவிற் காணப்பட்டன. எனினும் மாக்ஸிஸ சிந்தனையை அடியொற்றிய கல்வித்திட்டமிடல் மாதிரியில் ஆர்வம் காட்டப்பட்டே வந்தது. இதுவரைகால செயன்முறைகளினூடாக வளர்முக நாடுகளின் கல்வித்திட்டமிடல் தொடர்பாக சில புதிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடக்கூடியன பின்வருவன :

1. தொகை ரீதியிலான விரிவாக்கம் என்பதை விட தராதர ரீதியான கல்வி அபிவிருத்தி முக்கியமானது.
2. மத்திய நிலைப்படுத்தப்பட்ட திட்டமிடலிலும் பார்க்க மக்கள் பங்கேற்கக் கூடியதும், பன்முகப்படுத்தப்பட்டதுமான திட்டமிடல் பயன்மிக்கது.
3. தூண்டல்கள், சந்தைசக்திகள், கல்வி வழங்குவதில் தனியார் பொறுப்பேற்றல், பாடசாலைவிட்டு விலகியோருக்கான முறைசாராக் கல்வி என்பவற்றை கல்வித்திட்டமிடலில் கூடியளவு கவனத்திற் கொள்ளல் அவசியம்.
4. பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் வேலையுடன் தொடர்புடைய பயிற்சி என்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும்.
5. கல்வியைத் திட்டமிடல் மற்றும் வழங்குதல் போன்ற பணிகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் தம் பங்களிப்பை அதிகரித்தல் வேண்டும்.
6. வளர்ந்தோர் கல்வி என்பதற்கு அரசாங்கம் மிக உயர்ந்த முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

இவ்வாறு பல மாற்றங்கள் தென்பட்ட போதிலும் இந்த நாடுகள் எல்லாவற்றிலும் அரசாங்கம், தனியார் மற்றும் சமூகம் எவ்வாறான உரிமை மற்றும் தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது தொடர்பாக தொடர்ந்து கருத்தியல் ரீதியில் இணக்கப்பாடு காணப்படவில்லை.

பெரெல் (JOSEPH P. FERRELL 1997) என்ற கல்வியியலாளரின் கருத்துப்படி 1964ல் யுனெஸ்கோவினால் உருவாக்கப்பட்ட கல்வித் திட்டமிடலுக்கான சர்வதேச நிறுவனத்தின் வழிகாட்டல் முறையிலான கல்வித்திட்டமிடல் பற்றிய சிந்தனையை நிறைவு செய்யும் நடவடிக்கை போன்று யுனெஸ்கோ, உலகவங்கி, யுனிசெவ், யுஎன்டிபி போன்ற பல நிறுவனங்களினால் 1990ல் தாய்லாந்தில்

கூட்டப்பட்ட ''எல்லோருக்கும் கல்வி'' என்பது பற்றி உலக மாநாடு (World conference on Education for all - 1990) அமைந்தது. இதன் பின்னர் தேசிய அபிவிருத்திக்கான அடிப்படை அம்சங்களை உருவாக்கக்கூடிய மிகக்கூடிய பயனுறுதியை ஏற்படுத்தக்கூடிய கல்வித்திட்டமிடலுக்கான புதிய சுற்றொழுங்கு ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### எண்ணக்கரு ரீதியான விருத்தி

உலகரீதியான கல்வித்திட்டமிடல் ஒழுங்கு முறையாக 1960களிலிருந்தே வளர்ச்சியடைந்துள்ளது. எனினும் கடந்த நான்கு தசாப்த காலப்பகுதியில் திட்டமிடல் எண்ணக்கரு குறிப்பிடத்தக்களவில் விருத்தியடைந்துள்ளது. புதிய மாற்றங்கள், தேவைகள், நெருக்கடிகள், அணுகுமுறைகள் என்பவற்றிற்கேற்றதாக திட்டமிடல் எண்ணக்கரு படிப்படியாக விருத்திபெற்று வளர்ந்துள்ளது.

1. 1960களில் எல்லா மாணவரும் சிறந்த கல்வியைப் பெறுவதற்கு பயனுறுதி மிக்க உள்ளீடுகளை அதிகரிக்க வேண்டும் என்றும் அதற்காக கல்விச் செலவுகளை அதிகரிக்க வேண்டுமென்றும் கருதப்பட்டது. ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக்கல்வியில் பங்கு கொள்ளாதோர் விகிதத்தை அதிகரிக்க வேண்டுமென்று கருதியதோடு மாணவர் பாடசாலையில் சேரும் விகிதத்தை அதிகரிப்பதிலும் அக்கறை காட்டப்பட்டது.

   வளர்ச்சிபெற்ற கைத்தொழிற் துறைகளின் தேவைகளை நிறைவு செய்வதற்கு வேண்டிய பட்டதாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் அதற்கேற்றதாக கல்வி உள்ளீடுகளை உயர்த்த வேண்டுமென்றும் நம்பப்பட்டது. இத்தகைய உள்ளீடுகளை போதியளவில் அதிகரிப்பதன் மூலமாக வெளியீடுகளில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்று திட்டமிடலாளர் கருதினர்.

2. 1966ல் அடுத்த குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. கல்வி வாய்ப்புக்களை சமமாக வழங்க வேண்டும், அதில் சமத்துவத்தைப் பேணவேண்டும் என்று கருதப்பட்டது. அமெரிக்காவில் செல்வம்மிக்க வடபகுதி அரசுகளுக்கும் வறிய தென்பகுதி அரசுகளுக்குமிடையே வேறுபாடுகள் நிலவின. இதனடிப்படையில் சமத்துவம் பற்றிய கருத்து வளர்ச்சிபெற்றது.

   கொல்மன் அறிக்கை (COLEMAN'S REPORT) யின் பின் மாணவரின் சாதனை என்பதை விடவும் கல்வியில் பிள்ளைகளின் குடும்பப் பின்னணி என்பது முக்கியமானதாகியது. மாணவரின் கல்விச் சாதனை என்பது குடும்பப் பின்னணியுடனும் கல்வி ஏற்பாடுகளும் தொடர்புபடுத்தி நோக்கப்பட்டது. பாடசாலையின் விளைவுகளை உயர்த்த வேண்டுமாயின் குடும்பப்பின்னணி பற்றிக் கவனம் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. உண்மையான கல்வி மட்டத்தை ஏற்படுத்துவதாயின் மனிதவலு மற்றும் பாடசாலை வசதிகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தவேண்டும் என்ற கருத்தும் வலிமை பெற்றது.



3. 1970களில் மேலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. வகை கூறுதல் (Accountability) என்ற எண்ணக்கரு கல்வித்திட்டமிடலில் முக்கியமானதாயிற்று. கல்விப்பெறுபேறுகள் தொடர்பாக பொதுமக்கள் அக்கறை காட்டத் தொடங்கியிருந்தனர். தேசிய ரீதியாக கல்வியை மதிப்பீடு செய்யும் முயற்சிகள் கூடுதலாக மேற்கொள்ளப்படலாயின. கல்வியிலான பிரதான உள்ளீடுகளாக அரசாங்க முதலீடுகள் அமைந்தன. இதற்காக வெளியீடுகள் திருப்திகரமானதாக அமைய வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இவை மாணவர் சாதனைகளிலிருந்து அளவிடக்கூடியதாக இருத்தல் வேண்டும் என்று கூறப்பட்டது.

   வெகுசன ஊடகங்கள் இக்காலத்தில் கல்வி பற்றி விமர்சிக்கத் தொடங்கியிருந்தன. திட்டமிடுவோர் மற்றும் தொழில்நுட்பவியலாளர் ஆகியோரின் செல்வாக்கும் பலமும் குறையலாயின. திட்டமிடுவோர் தெரிவித்த உத்தரவாதங்களை அரசியல்வாதிகள் சந்தேகித்தனர்; விமர்சித்தனர்; எதிர்த்தனர்.

   இத்தகைய நெருக்கடிகளினால் திட்டமிடல் தொடர்பாக முடிவுகளை மேற்கொள்வோர் ஒரு பகுதியினராக இருத்தல் கூடாது, அது பன்முகப்படுத்தப்பட வேண்டும் என்றனர். இதனால் அதிகாரப் பரவலாக்கம் (Decentralisation) என்பன ஊக்குவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. குறிப்பாக வளர்முக நாடுகளில் மத்திய திட்டமிடலுக்குப் பதிலாக பிரதேசமட்டத் திட்டமிடல் கையாளப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் வலிமை பெற்றன.

4. 1976இல் கல்வித்திட்டமிடலுக்கான சர்வதேச நிறுவனத்தினால் ஒரு சர்வதே கருத்தரங்கு ஒழுங்குபடுத்தப்பட்டது. இது கல்வித்திட்டமிடலில் கற்பித்தல், கற்றல் உபாயங்கள் (Seminar on Teaching Learning in Educational Planning) பற்றியதாயமைந்தது.

   இக் கருத்தரங்கு கல்வித்திட்டமிடல் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் பற்றிய மீள் ஒழுங்கினை வலியுறுத்தியது.

   - கல்விசார் உள்ளீடுகளுக்கும் வெளியீடுகளுக்குமான தொடர்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.
   - திட்டமிடலில் பகுத்தறிவு சார்ந்த ஒரு அணுகுமுறை கையாளப்பட வேண்டும் என்று கருதப்பட்டது.
   - கல்வி விரிவாக்கத்திற்கும் சமூக அபிவிருத்திக்கும் நேரடித்தொடர்பு இருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.
   - ஊடகங்களை விட சான்றாதாரங்களில் அதிக நம்பிக்கை கொள்ள வேண்டும். இதற்கு உதவக்கூடியதாக கல்வித்திட்டமிடல் தொடர்பாக ஆலோசனை கூறுவதற்கு ஒரு "வலுவான ஆராய்ச்சி ஆதரவுத் திட்டம்" (Solid Research Support System) இருத்தல் வேண்டும்.

5. 1980களில் திட்டமிடல் தொடர்பாக நெருக்கடிகள் கூடின. பெரும்பாலான வளர்முக நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்தன. நிதி மற்றும் கடன் நெருக்கடிகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் கடுமையான கொள்கை களைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. கல்விக்கான செலவின ஒதுக்கீட்டைப் பெருமளவில் குறைக்கத் தீர்மானித்தது. இளம் பட்டதாரிகள் வினைத்திறன்மிக்க பங்களிப்பைச் செய்வதற்கு கல்வித் திட்டமிடல் வழிகாட்ட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இக்காலப்பகுதி கல்வித் திட்டமிடலை ஊக்குவித்ததாக குறிப்பிட முடியாது.

6. 1990களில் கல்வியின் தரத்தை முன்னேற்றுவது தொடர்பான ஆர்வம் அதிகரித் தது. கல்வியின் பெறுபேறுகள் மற்றும் விளைவுகளை மேம்படுத்துவது, மாணவர் ஓட்டத்தை (Student Flows) மேம்படுத்துவது தொடர்பாக அதிக அக்கறை காட்டப்பட்டது.

கல்வித்திட்டமிடல் தொடர்பாக இக்காலத்தில் புதிய வழிகாட்டல்கள் பல வலியுறுத்தப்பட்டன.

1. கல்வித் தகவல்களும் கல்வித்தராதரத்துக்குமிடையிலான தொடர்புகள் அவசியம்.
2. கல்விச் செலவுகளையும் பல்வேறு நிலைமைகளையும் அளவிடுதல், பரிசோதித்தல், மதிப்பிடுதல் அவசியம்.
3. கல்விமுறையை எதிர்காலத்தின் தேவைக்குரியதாக மாற்றவேண்டும். நடைமுறைக்குப் பொருத்தமானதாகவும், செயற்பாட்டுக்கு உரியதாகவும், பொருளாதார, சமூக, நிதி மற்றும் கலாசார மாற்றங்களுக்கு ஏற்பவும் நீண்ட காலத்திற்கான உபாயங்களை வடிவமைக்க வேண்டும்.
4. கல்வித்திட்டமிடுவோர் வரவு செலவுத்திட்டங்களை தயாரிப்போர் மற்றும் வளஒதுக்கீடு தொடர்பான முடிவுகளை எடுப்போர் ஆகியோருடன் இணைந்து செயற்படுவது அவசியம்.
5. முடிவுகளை மேற்கொள்ளும் தகுதி மற்றும் அதிகாரம் கொண்டிருப் போருடன் தொடர்பாடலை விருத்தி செய்தல் வேண்டும்.
6. கல்விக் கொள்கைகள் பற்றித் தீர்மானிக்கும் போது கல்விமுறையுடன் தகவல் முறையையும் தொடர்புபடுத்தி நோக்குதல் வேண்டும்.
7. உள்ளீடுகள் முக்கியமானவை என்ற கருத்துநிலையிலிருந்து திட்டமிடல் "உள்ளீட்டு வெளியீட்டு மாதிரி" (Input - Output Model) என்ற நிலைக்கு மாறுவது அவசியம்.
8. பாடசாலை மட்டத்திலான வளங்களை பயனுறுதிமிக்கதாக பயன்படுத்து வதானால் நேர முகாமைத்துவம், பெற்றோர் மனப்பான்மை போன்றவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பாடசாலை பற்றிய பரந்த கருத்தை விருத்தி செய்ய வேண்டும். அறிவு ஆட்சிமட்டுமன்றி உள இயக்க மற்றும் அழகியல் அம்சங்களும் பாடசாலை மட்டத்தில் முக்கியமானவை.



இத்தகைய பல்வேறு அம்சங்களிலும் திட்டமிடல் கவனம் செலுத்துவதன் மூலம் கல்வியின் தராதரத்தை முன்னேற்ற முடியுமென்று விளக்கப் பட்டது. இது திட்டமிடல் தொடர்பாக சிறப்பான முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.

7. இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கிய கல்விக்கான திட்டமிடல் பற்றி தற்போது வலியுறுத்தப்பட்டு வருகிறது. உலகில் உள்ள எல்லா நாடுகளும் ஒத்துச்செல்லும் வகையிலான கல்வி அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது.

கற்பதற்குக் கற்றல், செயற்படுத்துவதற்கு கற்றல், ஒன்றிணைந்து வாழக் கற்றல், வாழ்வதற்குக் கற்றல் என்ற குறிக்கோள்களை தியடோர் அறிக்கை வலியுறுத்துகிறது. எல்லா வளர்முக நாடுகளும் கல்வித்திட்டம் தயாரிக்கும் போது பின்வருவனவற்றில் கவனம் செலுத்தவேண்டிய தேவை வலியுறுத்தப் படுகிறது.

அ. கல்வி பாடசாலைகளுடனோ மாணவர்களுடனோ (இளம் பிள்ளை களுடனோ) மாத்திரம் தொடர்பட்டதல்ல. இன்று கல்வி கற்கும் காலம் கற்பிக்கும் முறை, கற்றல் முறை, கற்கும் வயது போன்ற எல்லாவற்றிலும் நெகிழ்வுத்தன்மை வலியுறுத்தப்படுகிறது. எல்லோரும் எப்போதும் நுகரும் அவசியப் பண்டம் போல் கல்வி நோக்கப்படுகின்றது. வாழ்நாள் முழுவதும் கல்வி எல்லோருக்கும் உயர் கல்வி, வளர்ந்தோர் கல்வி போன்ற புதிய சிந்தனைகள் மேலோங்கியுள்ளன.

ஆ. பன்மைக்கலாச்சார கல்வி (Multi - Cultural Education) பல நாடுகளில் சமூக இணக்கப்பாடு அமைதி, சமாதானம், முழுமையான சமூக நலன் என்பவற்றுக்கு அடிப்படையானதாக வற்புறுத்தப்படுகிறது.

இ. பால்வகை சமத்துவம் (Gender Equality) என்பது கல்வியில் முன்னொரு போதுமில்லாதவாறு வலியுறுத்தப்படுகிறது. பெண்களை வல்லமை (Empowerment for Women) யுடையோராக்குதல் தொடர்பாக பெண் கல்வி முதன்மைப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப் படுகிறது.

ஈ. பொதுமக்கள் பெறுமதியுடையவர்களாகவும், அபிவிருத்தியில் அக்கறை உடையவர்களாகவும் மாற்றும் வகையில் மனித உரிமைக் கல்வி (Human Right Education), சிறுவர் உரிமைக்கல்வி (Child Right Education), நுகர்வோர் கல்வி (Consumer Education), தொழிலாளர் கல்வி (Workers Education) போன்ற கற்கைகளுக்கு கல்விமுறையில் சிறப்பான இடம் வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகின்றது.

உ. கல்வி, பொருளாதார நெருக்கடிகளுக்குக் காரணமாயமைதல் கூடாது. பதிலாக அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கான ஊக்கல் சக்தியாக

தொழிற்பட வேண்டும் என்ற கருத்தியல் இன்று நன்கு வலுப்பெற்று விட்டது. இதன் காரணமாக முயற்சியாண்மைக் கல்வி (Entrepreneuir Education) என்பது அதிக கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளது.

தனியார் துறையினர் கல்வித்துறையின் எல்லா வகைப் பணிகளிலும் ஈடுபடுவதற்கு வாய்ப்பும் வசதியும் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது. பெரிய தொழில் நிறுவனங்கள் கல்வி நிறுவனங் களுடன் இணைந்து செயற்படுவதன் அவசியம் வலியுறுத்தப்படுகிறது.

தனியார் கல்வி நிறுவனங்கள் எல்லாக் கல்வி மட்டங்களிலும் செயற் படுவதன் மூலமாக மக்கள் சொந்த நிதிச்செலவில் கல்வி கற்கும் வாய்ப்பும் ஊக்கமும் அதிகரிக்கப்படும். இதனால் அரசாங்கத்தின் கல்விச் செலவு என்னும் சுமை நிச்சயமாகக் குறையும்.

கல்வித் திட்டமிடலின்போது தனியார் துறையுடன் கலந்துரை யாடுவதும், தனியார் கல்விச் செலவு பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள் வதும் மிகவும் அவசியமாகும்.

ஊ. உலக மயமாதல் (Globalisation) தொடர்பான மாற்றங்கள் எல்லா நாடுகளுக்கிடையிலும் ஒரு பொதுமைப் பண்பை விருத்தி செய்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பம் (Information Technology), மின்னியல் ஊடகக்கல்வி (Electronic Media Education) என்பன கல்வியை உலகமயப்படுத்துவதில் அதிகூடிய வலுவுடன் இயங்கி வருகின்றன. தொழில் வழங்குவோரை முன்பின் அறியாத நிலையிலும் அவரது நிறுவனத்தில் பல நாடுகளில் கல்வி கற்ற மனித வளம் உற்பத்திப் பணியில் ஈடுபட்டு வருகின்றது. கற்பித்தல் முறைகள், கற்பித்தற் துணைச் சாதனங்கள் என்பவற்றிலும் அசாதாரண மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் திட்டமிடுவோர் பொருத்தமான முறையிலும், மிகச் சரியாகவும் ஒருங்கிணைத்தல் வேண்டும்.

எ. சமூக ரீதியில் பின்தங்கிய மக்கட் குழுவினரை (Disadvantaged Groups) கல்வி ரீதியாக முன்னேற்றுவதன் அவசியம் தற்போது வலியுறுத்தப் பட்டு வருகிறது. பௌதீக, சமூக, உளவியல், பொருளாதார வாய்ப்புக்கள் மற்றும் வசதிகளிலிருந்து மிகவும் தொலைவில் தள்ளிவைக்கப்பட்டு அதன் காரணமாக ஒடுக்கப்பட்ட மக்களாக வாழ்வோரை முன்னேற்று வது பற்றிய உணர்வும் சிந்தனையும் சமூக விஞ்ஞானிகளிடையே முன்னொரு போதுமில்லாதவாறு வளர்ந்துள்ளது. இதனால் இத்தகைய பின்தங்கிய மக்கட் குழுவினருக்குரிய கல்விபற்றித் திட்டமிடலில் கவனம் செலுத்த வேண்டும்.

நடுத்தரவர்க்க, நகர்ப்புற கலாசாரப் (Middle Class Urban Culture) பின்னணியில் வளர்ந்தவர்கள் திட்டமிடலில் பிரதான பங்கேற்கும் போது பின்தங்கிய மக்கட்



குழுவினரை முன்னேற்றுவதற்கு திட்டமிடுவதில் பல கட்புலனாகாத்தடைகள் காணப்படுகின்றன. இவற்றைத் தெளிவாக அடையாளம் காண வேண்டும்.

பின்தங்கிய மக்கட் குழுவினரின் உளவியல் உளச்சார்பு, திறன்தள், நம்பிக்கைகள் என்பவற்றை தெளிவாக விளங்கிக் கொண்டு அவர்களுக் கான கற்றல் கற்பித்தல் நுட்பங்களை வடிவமைக்க வேண்டும். மீள வலியுறுத்தும் கல்வி (Re inforcing Education) இழப்பீட்டுக் கல்வி (Compensatory Education) என்பவற்றில் சிறப்பாகக் கவனம் செலுத்த வேண்டும். அத்தகைய மக்களின் உளவியல் வேறுபாடுகள், புலக்காட்சி, ஞாபகம், பாகுபடுத்தும் திறன் போன்றன பற்றி விளங்கி அதனடிப் படையில் திட்டமிட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கிச் செல்லும் சமுதாயத்திற்கு அவசியமான இப்புதிய தேவைகள், நெருக்கடிகள் என்பவற்றை தீர்த்து சமநிலை பேணும் சமூக பொருளாதார அரசியல் வாழ்வுக்குரியதாக கல்வி திட்டமிடப்பட வேண்டும்.

# அத்தியாயம் 3

## கல்வித் திட்டமிடல் : அணுகுமுறைகள்

Approaches to Educational Planning

உலகின் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு நோக்கங்களின் அடிப்படையில் கல்வித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வந்துள்ளன. சிலர் கல்வித்திட்டமிடலானது கோட்பாடு எதுவுமேயற்ற நடைமுறைதான் என்று விபரிக்கின்றனர்; வேறு சிலர் தவறான கோட்பாடுகளைக் கொண்ட நடைமுறை என்கின்றனர். மற்றும் சிலர் பல்வகைப்பட்ட கோட்பாடுகளைக் கொண்ட நடைமுறைதான் கல்வித்திட்டமிடல் என்று விளக்குகின்றனர்.

சமூக அமைப்பை தற்போதைய இடத்திலிருந்து மிகவும் விரும்பத்தக்க இலக்கு நோக்கி நகர்த்துவதற்கு உரிய கல்வியை குடிமக்களுக்கு வழங்குவதற்கு எத்தகைய ஏற்பாடுகள் விரும்பத்தக்கவனவாயிருக்கும் என்று தீர்மானிப்பதில் நாகரிக சமூகங்கள் நாட்டம் கொண்டுள்ளன.

சமுதாயத்தில் யாருக்கு, எப்படி, எப்போது, யாரால், என்ன நோக்கங்களுக்காக யாருடைய செலவில் கல்வி கற்பிக்கப்படல் வேண்டும்; நிறுவனங்கள் சிறியனவா அல்லது பெரியனவா; தனியாருடையனவா அரசாங்கத்தினுடையனவா என்பன போன்ற பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் திட்டமிடல் கிரமமாக முடிவுகளை வெளியிடல் வேண்டும். இந்த அடிப்படைகளில் திட்டமிடல் செய்முறையைத் தீர்மானிக்கும் போது அதன் அணுகுமுறை எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது.

### தொழில்நுட்பமும் அரசியலும்

திட்டமிடல் முழுதாகவே பல ஒழுங்கான ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய செயன்முறை என்ற முறையில் தொழில்நுட்பப் பணிதான். ஒரு குறிப்பிட்ட கல்விமுறைக்குள்ளே நிலைமைகளில் மாற்றங்கள் எதுவுமில்லாத சூழலில் தொழில்நுட்ப செய்முறை சரியாக இருப்பின் கல்வித்திட்டமிடல் வெற்றி யடையும். தொழில்நுட்பப் பகுப்பாய்வு திட்டமிடலில் முக்கியமானதாயுள்ள



போதிலும் எதிர்கால சமூகத்தை மாற்றியமைப்பது பற்றிய முடிவுகளைக் கல்வித்திட்டமிடல் மேற்கொள்ள முயலுமானால் அரசியல் பணியாகிவிடுகிறது. அத்தகைய ஒரு நிலைமையில் நோக்கங்களைத் தீர்மானிப்பதும், மாற்று வழிகளைக் கண்டறிவதும் மதிப்பீடு செய்வதும் அரசியல் முடிவு சார்ந்ததாகி விடுகிறது. வர்க்கம், பால்வகை, இனம், இனக்குழுமம், சமயம், புவியியல் அமைவிடம் போன்ற பல விடயங்களில் முரண்பட்ட அக்கறை, நாட்டம் காணப்பட இடமுண்டு. இன்றைய மக்கள் தங்கள் அடுத்த தலைமுறையினர் பற்றி அக்கறை கொள்வதுண்டு. முரண்பட்ட நாட்டங்களுக்கிடையே தீர்வு காண வேண்டியதாக இருப்பதால் கல்வித்திட்டமிடலில் அரசியல் அணுகுமுறைகளும் ஏற்பட வாய்ப்பு உருவாகிவிடுகிறது.

மிகவும் வெற்றிகரமாகத் திட்டமிடுவோர் எப்போதும் தொழில்நுட்ப மற்றும் அரசியல் செயற்பாடுகள் பற்றிய அறிவும், அவற்றைக் கையாள்வதில் சாதுரியமும் கொண்டவர்களாக இருப்பதுண்டு. நாட்டின் எல்லாப் பிரிவினரையும் கருத்திற் கொண்டு திட்டமிடும் போது பங்குகொள்ளும் (Participatory), கைமாற்றும் (Transactive) அல்லது இடைத்தொடர்புடைய (Interactive) திட்டமிடல் மாதிரியாகக் கொள்ளப்படுகின்றது. பாதிப்புடையக் கூடிய மக்கட் பிரிவினரின் நலன்களைப் பேணும் முறையிலும் திட்டமிடுவது தந்திரோபாய திட்டமிடல் (Strategic Planning) என்று விளக்கப்படுகின்றது. இது பெருமளவு அரசியல் தன்மைமிக்கது என்பது குறிப்பிடத்தக்கது.

### கீழ்நோக்கிய மற்றும் மேல்நோக்கிய திட்டமிடல்

"Top - Down" and "Bottom - up" Planning

கல்வித்திட்டமிடலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவையென வரையறை செய்து கொள்வது மிகவும் அடிப்படையான தேவையாகும். இதற்கு பிரச்சனைகளுடன் அன்றாடம் தொடர்புபடுகின்ற அப்பிரச்சினைகளினால் பாதிக்கப்படுகின்ற மக்களின் பங்களிப்பை திட்டமிடல் எவ்வாறு பயன்படுத்துவது, எந்த மட்டத்தில் பயன்படுத்துவதென்று தீர்மானிப்பது அவசியமாகின்றது. கீழ்மட்டத்தில் பணியாற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோரிடமிருந்து விபரங்களைத் திரட்டுவதும், கொள்கைகளை விருத்தி செய்யும் செயல் முறைகளில் அவர்களைப் பங்கேற்கச் செய்வதும் அவசியம். அவர்கள் தம்மளவில் தமது மட்டத்தில் திட்டத்தின் சில அம்சங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களையும் அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். உயர் மட்டத்தில் உள்ள அதிகாரத்தரப்பினர் இவ்வாறான அணுகு முறைகளைக் கையாள முடியும். இது "கீழிருந்து மேல் நோக்கிய அணுகு முறையாகும்." கல்வித் திட்டம் வெற்றிபெறுவதற்கு இவ்வாறான அணுகுமுறை அதிகம் பயன்படுவதாக ஆய்வாளர் தெரிவிக்கின்றனர். ஆனால் இதற்கு அரசியல் ரீதியிலான மற்றும் கொள்கை ரீதியிலான இணக்கப்பாடு அவசியமாகின்றது.

மாறாக கீழ் நோக்கிய அணுகு முறை (Top - Down) என்பது மத்திய நிலைப்படுத்தப் பட்ட திட்டமிடலாகும். இது அதிகார மேலாதிக்கத்தைக் காட்டும் அணுகுமுறை யாகும். இது கீழ்மட்ட பங்காளர் (Lower - Level Actors) களின் முக்கியத்துவத்தை அலட்சியப்படுத்தும் அணுகுமுறையாகும். குறுங்காலத்தில் வேண்டுமானால் இது வெற்றியளிக்க முடியும். பணித்துறை நிபுணர்கள் (Bureaucratic "Experts") மாத்திரமே மேலாண்மை நிலையில் இருப்பர். இதன்படி கல்விமுறை மிகவும் இறுக்கமானதாக்கப்பட்டுவிடும் இதனால் மாற்றங்களைக் கொண்டுவருதல் கடினமாகும். இந்நிலையில் திட்டமிடல் எந்த அணுகுமுறையை அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்பது பெரிதும் அரசியல் முடிபாகும்.

**மனித வலுத்திட்டமிடல்** - Man Power Planning

கல்வித்திட்டமிடல் தொடக்கத்தில் பொருளியலாளரின் கைப்பொருளாகவே இருந்தது. அடிப்படைப் பொருளாதார மாதிரிகள் அல்லது கோட்பாடுகளினூடாக எவ்வாறு கல்வித்திட்டமிடலை விளங்கிக் கொள்ளவும் கைக்கொள்ளவும் முடியும் என்ற முரண்பாடான கருத்துக்களும் நிலவின.

பொதுவாக பொருளியல் துறைகளிலிருந்து திட்டமிடல் நுட்பங்களும், திட்ட மிடல் மாதிரிகளும் மாத்திரமே பெறப்பட்டு கையாளப்படுவதாகவும் விளக்க மளிக்கப்பட்டு வருகிறது. பேராசிரியர் ஹாபிசன் (Prof. Fredrick Harbision) போன்றவர்களே முதலில் இம்முறையைத் தொடக்கினர்.

எனினும் பொருளியல் மாதிரியில் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு வளர்ச்சி யடைந்த கல்வித்திட்டமிடல் அணுகுமுறை மனித வலுத்திட்டமிடல் ஆகும்.

சோவியத் யூனியனால் பின்பற்றப்பட்டு பெரிதும் வெற்றியடைந்த அணுகுமுறை யாக இது இருந்ததால் இந்த அணுகுமுறை மிகவும் பிரபல்யம் பெற்றது. 1968ல் யுனெஸ்கோ நிறுவனம் 91 நாடுகளில் மேற்கொண்ட ஆய்வின்படி 73 நாடுகள் கல்வித்திட்டமிடலைப் பின்பற்றிய போது அவற்றுள் 60 நாடுகள் மனிதவலு எதிர்வு கூறல் தொடர்பான திட்டமிடலைக் கையாண்டிருந்தன.

**மனிதவலு எண்ணக்கரு**

பொருளாதார மற்றும் சமூக வாழ்வில் பயனுறுதிமிக்க மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாக ஆண்களும் பெண்களும் கொண்டிருக்கும் ஆற்றல் மனிதவலு என்று விளக்கப்பட்டது. தற்போது மனிதசக்தி என்பதற்காக மட்டுமன்றி மனிதர்கள் தம் சக்தியை உள்ளிடுவோராகவும் பயன்களை அனுபவிப்போராகவும் செயற்படு கின்றனர் என்ற கருத்தினடிப்படையில் மனிதவளம் (Human Resource) என்று அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. நாட்டின் உற்பத்திச் செயன்முறையில் பயன்மிக்க மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய அறிவையும், திறன்களையும் கல்வி வழங்குகின்றது என்ற அடிப்படையில் இந்த அணுகுமுறை திட்டமிடலில் கையாளப்படுகின்றது. அறிவும் ஆற்றலும் தேசத்தின் நன்மையான



விளைவுகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டால் மாத்திரமே மனிதவளமாக கருதமுடியும். இத்தகைய ஆக்கபூர்வமான சிந்தனையை வழங்கும் உளப்பாங் கினையும் கல்வி வழங்குகிறது.

நாட்டில் பொருளாதாரத்தில் தேவைப்படுகின்ற பல்வேறுமட்டங்களுக்கும் ஏற்ற பல்வேறு தொழில்நுட்ப மற்றும் உயர் தொழில் திறன்களும் அறிவும் கொண்ட ஆளணியை மதிப்பிடுவது இந்த அணுகுமுறையின் அடிப்படையாகும். அத்தகைய கணிப்பீட்டு அடிப்படையில் தேவையான ஆளணியை உரிய தகுதிகளுடன் உருவாக்கக்கூடியதாக கல்வியைத் திட்டமிட வேண்டும் என்று இந்த அணுகு முறை விளக்குகிறது.

பொருளாதார துறைகளின் தேவையை நுட்பமாக மதிப்பிட்டு அதற்கேற்ற மனிதவளத்தை கல்விமுறை உருவாக்க வேண்டும். தனிநபரின் இயல் அளவுக்கு சமனாக உண்மை வலுவை அதிகரிக்கச் செய்வதில் கல்வி பங்காற்ற வேண்டும்.

எண்ணக்கரு அடிப்படையில் மிகவும் எளியதாக விளக்கப்படுகின்ற இந்த அணுகுமுறை நடைமுறையில் கணிப்பீடுகளைச் செய்யும் போது மிகவும் சிக்கல் நிறைந்ததாகவே காணப்படுகின்றது.

**மனிதவலுக் கேள்வியும் நிரம்பலும்**

Man Power Demand and Supply

இத்திட்டமிடல் முறையின்படி குறிப்பிட்ட திட்டகாலப் பகுதியில் எத்தகைய துறைகளில் எவ்வகையான தொழில் வாய்ப்புக்கு எத்தகைய தகுதிகளுடன் ஊழியம் அவசியமாகின்றதெனக் கணிக்க வேண்டும். இது மனிதவலுக் கேள்வி யாகும்.

**மனிதவலுக்கேள்வி**

இலங்கை போன்ற நாடுகளில் பின்வரும் துறைகளில் ஏற்படக்கூடிய மனிதவலுக் கேள்வியை கணிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

1. பண்ணைத்துறை
2. பண்ணை சாராத்துறை
3. ஒழுங்குபடுத்திய கைத்தொழில் மற்றும் சேவைத்துறை
4. ஒழுங்குபடுத்தப்படாத கைத்தொழில் மற்றும் சேவைத்துறை
5. உயர் தொழில்கள் (வாண்மைத் தொழில்கள்)
6. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கள்
7. தகவல் தொழில்நுட்ப மற்றும் கணனிசார் துறைகள்.

இத்தகைய துறைகளில் பயிற்சியற்ற தொழிலாளர், ஓரளவு பயிற்சி பெற்ற தொழிலாளர், முழுமையான பயிற்சிபெற்ற தொழிலாளர் தேவைகள் எவ்வளவு

எனக்கணிக்க வேண்டும். இரண்டாம் நிலையில் சிற்றூழியர், எழுதுவினைஞர், ஆசிரியர், தாதியர் போன்றோருக்கான தேவைகளையும் கணிப்பீடு செய்தல் அவசியம். இவற்றை விட மிக உயர்ந்த முதலாம் மட்டத்தில் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், உயர்தொழில்நுட்ப நிபுணர்கள், பேராசிரியர்கள், முயற்சி யாண்மையாளர் போன்றவர்களுக்கான தேவைகளையும் இயன்றளவு சரியாகக் கணித்துக் கொள்ளுதல் அவசியம்.

**மனிதவலு நிரம்பல்**

நாட்டில் இயங்குகின்ற பல்வேறு கல்விநிறுவனங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும் எந்தளவு தொகையான மனிதவலுவை திட்டகாலத்தில் நாட்டிற்குத் தயார் செய்து வழங்கும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முன்பள்ளி நிறுவனங்கள், பொதுக்கல்வி நிறுவனங்கள், உயர்கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர் ஆராய்ச்சி நிறுவனங்கள் என்பன எந்தளவு தொகை யினரை தகுதிப்படுத்தி வழங்கும் என்ற கணிப்பீடு அவசியமாகிறது.

அவ்வாறே தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, உயர் நுட்பக்கல்வி நிறுவனங் கள் எவ்வளவுபேரைத் தகுதிப்படுத்தும் நிலையில் செயற்படுகின்றன என்றும் கணிக்க வேண்டும்.

இவற்றுக்கு மேலாக தொலைக்கல்வி திறந்த பாடசாலைகள், சமூக மட்ட எழுத்தறி வியக்கம், தொழிலாளர் கல்வி, கிராமிய மகளிர் விவசாய மற்றும் சுயதொழிற்பயிற்சி போன்ற செயற்திட்டங்கள் எந்தளவு தொகுதியினரை தகுதிப்படுத்துகின்றன என்பது பற்றிய கணிப்பீடுகளும் தேவை. தயார்ப்படுத்தும் பயிற்சி, சேவைக்காலப் பயிற்சி, புத்தூக்கல் பயிற்சி தொடர்பாக தகைமைப்படுத்தப்படுவோர் பற்றிய கணிப்பீடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய மனிதவலுக் கேள்வி, மனித நிரம்பல் என்பவற்றிடையிலான இணக்கப் பாடு தொடர்பான கணிப்பீடுகள் சிக்கலானவையாகவும் கடினமானவையாகவும் இருந்தாலும் அவற்றில் வினைத்திறனுடன் செயற்படுதல் அவசியமாகும்.

**விமர்சனம்**

தொடக்கத்திலிருந்தே இந்த திட்டமிடல் மாதிரி விமர்சிக்கப்பட்டு வந்தது. இது நடைமுறை உலகுக்குப் பொருந்தாத எடுகோள்களில் தங்கியிருப்பதாகவும் நீண்டகாலத்தில் பொருளாதார மாற்றங்களின் அடிப்படையில் உருவாகும் தொழில் வாய்ப்புக்களைச் சரியாகக் கணிப்பது இலகுவான காரியமன்று என்றும் விமர்சிக்கப் படுகின்றது.

இந்த அணுகுமுறை ஊழியர்க்கு கல்வி வழங்குவதற்கு ஏற்படும் செலவைப் புறக்கணித்து விடுகிறது.



மிகவும் நன்கு திட்டமிட்ட பொருளாதாரங்களிற்கூட இத்தகைய மனிதவளத் தேவை பற்றிய கணிப்பீட்டை சரியாகச் செய்வது நடைமுறைச் சாத்தியமற்றது. பெரிய நாடுகளில் புள்ளி விபரங்களைச் சரியான முறையில் திரட்டுவது என்பது சாத்தியமானதொன்றல்ல. இதனால் எதிர்காலத்திற்கான மனிதவள மதிப்பீடு பிழையானதாயும், பயனற்றதாயுமே காணப்படும். மனிதவலுத்திட்டமிடலை கவனமாக மேற்கொண்ட நாடுகளிற்கூட மிகவும் சரியாக நடைமுறைப் படுத்தப் படவில்லை. முடிவுகளை மேற்கொள்பவர்கள் நடைமுறையில் திட்டமிடு வோரின் நம்பகமற்ற கணிப்புகளை விட மக்களின் அரசியல் கோரிக்கை களையே முக்கியமானதாகக் கொள்கின்றனர்.

இத்தகைய விமர்சனங்களினால் மனிதவலு அணுகுமுறை செல்வாக்கிழந்தது. ஆனால் முற்றாகவே கல்வித்திட்டமிடலில் இந்த அணுகுமுறை கைவிடப்பட்டு விடவில்லை.

இன்றும்கூட பின்வரும் நிலைமைகளில் மாத்திரம் இந்த அணுகுமுறை கையாளப் பட்டு வருகின்றது.

1. பொருளாதாரத்தில் உபதுறைகளில் தெளிவாக வரையறை செய்யப்பட்ட வற்றுடன் தொடர்புடைய விஷேட நிகழ்ச்சித்திட்டங்களில் மாத்திரம் இத்திட்டமிடல் வெற்றியளிப்பதற்கு வாய்ப்புண்டு. உதாரணமாக தேவைப் படும் வைத்தியர்கள், ஆசிரியர்களைக் கணித்தல்.
2. ஒரு குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தில் காணப்படும் உண்மையான ஊழியர் தேவைகளை மதிப்பிட்டு அதனடிப்படையில் குறுங்கால தொழில்நுட்ப பயிற்சிக்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுவதும் ஓரளவு சாத்திய மாவதுண்டு.

இந்த அணுகுமுறை செல்வாக்கிழந்ததாகக் கருதப்பட்ட போதிலும், 1980களின் பிற்பகுதியில் வேறு சில திட்டமிடல் அணுகுமுறைகளுடன் தொடர்புபட்ட முறையிலும் அரசியல் ரீதியான சில தேவைகளின் அடிப்படையிலும் ஆங்காங்கே கையாளப்பட்டு வருவதையும் மறுப்பதற்கில்லை.

## சமுதாயக் கேள்வி அணுகுமுறை

Social Demand Approach

அரசியல் ரீதியிலான கோரிக்கைகளுக்கு மதிப்பு அளிக்கும் வகையில் திட்டமிடல் மற்றும் கொள்கை உருவாக்குவோர் செயல்படுவதை இந்த திட்டமிடல் குறிப்பிடு கின்றது. நாட்டு மக்கள் வெளிப்படுத்துகின்ற அவர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்கள் என்பவற்றுக்கு நடைமுறையிலுள்ள அரசியல் முறைமை முன்னுரிமை வழங்கிச் செயற்படுவதை இந்த அணுகுமுறை விளக்கும். சில சந்தர்ப்பங்களில் ஏற்கனவே சமூகத்தில் செல்வாக்குடனிருந்த வர்க்கத்தினரின் அல்லது அக்கறை கொண்ட குழுக்களின் விருப்பங்களை நிறைவு செய்வதே

சமுதாயக் கேள்வியாக அமைந்தது. இவை பெரிதும் கல்விகற்ற உயர் பதவிகளிலுள்ள மேட்டுக் குடியினரின் உயர்கல்விக்கான அபிலாஷைகளாகக் காணப்படுவதுண்டு. மறுபுறம் உயர் குடியினர் அல்லாத சாதாரண பெரும்பான்மை மக்களிடமிருந்தும் இவ்வாறான கோரிக்கைகள் ஏற்படுவதுமுண்டு. ஆனால் அது ஆரம்பக் கல்வி அல்லது ஆகக்குறைந்த கல்வி மட்டம் பற்றியதாகவே அமையும்.

சமுதாயக் கேள்வி என்பது எல்லா இடத்தும் மிகவும் குறுகியதாக அமைய வேண்டும் என்பதில்லை. பதிலாக தேசிய ரீதியான கொள்கைகளை வடிவமைப்பது பற்றியதாகவும் அமைய முடியும். சிலர் பொருளாதார அம்சங்களுக்கு அப்பால் அரசியல் குறிக்கோள் சார்ந்தனவாக சமுதாய மக்களின் கோரிக்கைகள் அமைய வேண்டுமென்று வற்புறுத்துகின்றனர்.

### சமுதாயக் கேள்வி எண்ணக்கரு

குறிப்பிட்ட பிரதேசத்தில் குறிப்பிட்ட காலத்தில் காணப்படுகின்ற கலாச்சார, அரசியல், பொருளாதார நிலைமைகளின் அடிப்படையில் தனிநபர்களின் கூட்டான மக்கள் தொகுதியினால் கல்வி தொடர்பாக முன்வைக்கப்படும் விருப்புடனான வற்புறுத்தல் சமுதாயக் கேள்வியாகும். அத்தகைய முன்னுரிமை விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடுவது சமுதாயக் கேள்வித் திட்டமிடலாகும்.

கல்வி மீதான சமுதாயக் கேள்வி பின்வரும் காரணங்களினால் அதிகரித்து வருகிறது.

1. கல்வி மக்களின் உரிமை என்பதை ஐக்கிய நாடுகள் தாபனம் வலியுறுத்தி வருதல். நாடுகளின் அரசாங்கங்களும் இலவசக்கல்வி, கட்டாயக் கல்வி பற்றிய சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருதல்.
2. நாட்டின் குடித்தொகை இயற்கையாக அதிகரித்துச் செல்வதால் அதற்கேற்ப கற்போர் தொகையும் கல்வி மீதான நாட்டமும் உயர்ந்து செல்லுதல்.
3. கல்வியினால் கிடைக்கும் நலன்கள் சமுதாய மட்டத்தில் அதிகரிக்கு மிடத்தும், அதனை மக்கள் நன்கு உணர்ந்து கொள்ளும் நிலையிலும், கல்வியின் சாதனைகள் சிறப்பானவை என உண்மையாக மக்கள் நம்பும் சந்தர்ப்பங்களிலும் கல்விக்கான சமுதாயக் கேள்வி கூடிச்செல்வது முண்டு.
4. கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியைவிட கல்வி கற்போர் தொகை அதிகரித்துச் செல்லும் நிலையில் கல்விக்கான போட்டி உயர்ந்து விடுகிறது. போட்டிச் சூழல் செயற்கையாக கல்விக்கான கேள்வியைத் தூண்டி விடுவதையும் அவதானிக்க முடியும்.

### சமுதாயக் கேள்வியைக் கணித்தல்

குறித்த காலப்பகுதியில் சமுதாயக் கேள்வி எத்தகைய கற்கை நெறிக்கு அல்லது எத்தகைய நிறுவனத்திற்கு எந்தளவில் காணப்படுகின்றதென மதிப்பீடு செய்தல் வேண்டும்.



யுனெஸ்கோ நிறுவனம் இதனைக் கணிப்பதற்கு பின்வரும் முறையை விபரிக்கின்றது.

அ. முதலில் கல்வியில் பங்குகொள்வோரின் நடைமுறை விகிதங்களைக் (Current Participation Rates) கணித்தல் வேண்டும்.

இதன்படி ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தில் கல்வி கற்கும் வயதிலுள்ளோர் தொகையைக் கணிக்க வேண்டும். (உதாரணம் 514 வயதெல்லையினர்)

அத்துடன் ஒவ்வொரு கல்வி மட்டத்திலும் (ஆரம்ப மற்றும் இடை நிலை) ஏற்கனவே சேர்ந்து கல்வி கற்றோர் தொகையும் கணித்தல் வேண்டும்.

ஆ. எதிர்கால இளைஞர் தொகை பற்றிய எதிர்வு கூறலை மேற்கொள்ளுதல் (Projection of the future youth Population)

எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட வருடகாலத்தில் எந்தளவு இளம்வயதினர் அதிகரிப்பர் என்பதைக் கணித்தல் வேண்டும்.

இ. சில வகையான பங்குகொள்விகித இலக்குகளைத் தெரிந்தெடுத்தல் வேண்டும்.

உதாரணமாக இலங்கையில் 2000 ஆண்டில் ஐந்து வயதில் எவ்வளவு பேர் இருப்பார்கள்? 2020ஆம் ஆண்டில் எவ்வளவு பேர் இருப்பார்கள்?

பாடசாலைகளிலும் ஏனைய கல்வி நிறுவனங்களிலும் சேரக்கூடியவர் தொகையைச் சரியாகக் கணிப்பதற்கு உரிய வகையில் குடித்தொகை எறியங்களை (Population Projections) பயன்படுத்த வேண்டும்.

ஈ. சாத்தியமாகக் கூடிய பலகாரணிகளின் அடிப்படையில் தீர்வுக்கான இணக்கப்பாடுகளை உருவாக்குதல்.

உ ம்: மக்களுக்கு எந்தளவு கல்வி தேவை? எவ்வளவு செலவு ஏற்படும்? நாடு எவ்வளவைத் தாங்கிக் கொள்ளும்? தேசிய ரீதியில் எவ்வளவு பேர் தேவை?

இத்தகைய படிமுறையில் ஒவ்வொரு நாடும் கல்விக்கான சமுதாயக் கேள்வியை கணித்துக்கொள்ள முடியும்.

### பிரச்சினைகள்

இத்தகைய அணுகுமுறையின்படி திட்டமிடுவதால் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.

1. சமுதாயத்தில் சக்திமிக்கவர்களே தமது விருப்பங்களை முழுச் சமுதாயத்தின் விருப்பம் போன்று பிரபல்யப்படுத்துவர். வெகுசன ஊடகங்கள் மற்றும் அரசியல் நிறுவனங்களில் அவர்களுக்குள்ள செல்வாக்கை இதற்குப் பயன்படுத்துவர். இவை உண்மையில் சிலசிறு தொகுதியினரின் விருப்பங்களேயாகும்.

2. வளங்களை ஒதுக்குவது சுலபமாயிருப்பதில்லை. சமுதாய விருப்பங்கள் உயர்வாயிப்பது சுலபம். ஆனால் அவற்றை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வளங்களைத் திரட்டுவது சுலபமல்ல. அரசாங்க வரவு செலவுத் திட்டத்துடன் சமுதாயக் கேள்வியை இணங்கச் செய்வதில் பல பிரச்சினைகள் உள்ளன.

3. பொருளாதார முறையில் பல்வேறு துறையினரும் கல்வி தொடர்பாக வெவ்வேறு எதிர்பார்க்கைகளைக் கொண்டுள்ளனர். எந்தத் துறைக்காக எந்தத் துறையின் வளங்களைக் குறைப்பது என்பது நெருக்கடியை ஏற்படுத்து கின்றது.

   பெற்றோர், தொழிற்துறையினர், சமூக மற்றும் கலாச்சார நிறுவனங்கள் வெவ்வேறு இலக்குகளுடன் கேள்வியை ஏற்படுத்துமிடத்து இந்த நெருக்கடி ஏற்படுகிறது.

4. சமுதாயக் கேள்வியை நிறைவு செய்ய முயலும்போது தொகை ரீதியிலான விரிவாக்கம் மாத்திரம் போதுமானதா? தராதர ரீதியிலான முன்னேற்றத்திலும் கவனம் செலுத்த வேண்டுமா? என்ற பிரச்சினை எழுகின்றது. தொகை விரிவாக்கம், தராதர முன்னேற்றம் என்ற இரண்டும் சமகாலத்தில் சாத்திய மாவதில் பிரச்சினைகள் உள்ளன.

   கல்விச் செலவுகளுடன் தொடர்புடையதாக இந்த அணுகுமுறையைப் பலப்படுத்தலாமென்ற கருத்து பரவலாகக் காணப்படுகின்றது.

## செலவு நன்மை அணுகுமுறை

Cost - Benefit Approach

மனிதவலு அணுகுமுறை மற்றும் சமுதாயக் கேள்வி அணுகுமுறை என்பவற்றை விமர்சித்தவர்கள் இச் செலவு நன்மை அணுகுமுறையை ஏற்றுக்கொண்டனர்.

எவ்வாறான பொதுவான கொள்கை வினைத்திறனுடையது என்பதைத் தீர்மானிப் பதற்கு பல்வேறு மாற்றுக்கொள்கைகளின் செலவு மற்றும் நன்மைகளை மதிப்பீடு செய்வது பயனுடையது என இந்த அணுகுமுறையை ஆதரித்தோர் தெரிவித்தனர்.

பேராசிரியர் பிகு (Prof. Pigou) என்பவரால் பொருளாதாரத்திட்டமிடலில் கையாளப் பட்ட செலவுகளை அதன் நன்மைகளுடன் ஒப்பிட்டு சிறந்ததை தெரிவு செய்யும் இந்த அணுகுமுறையே கல்வித்திட்டமிடலிலும் பிரயோகிக்கப்படலாயிற்று. இது வருமான விகித (Rate of Return) அணுகுமுறை என்றும் கூறப்படும். இதன்படி எந்தவொரு கல்விச் செயற்திட்டமும் தெளிவாக வரையறை செய்யப்பட்டு அதனடிப்படையில் செலவுகள் பெறப்படும். நலன்கள் பற்றிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும். வருடாந்த அடிப்படையில் அல்லது முழுமையான செயற்திட்டம் என்ற அடிப்படையில் செலவு நன்மைகளை தேறிய பெறுமதியிலும் கணிக்க முடியும். ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளில் பொருளாதாரத்திட்டமிடலில் பரவலாகக் கையாளப்பட்டிருந்ததால் இது பிரபல்யம் பெற்று இருந்தது.



## கல்விச் செலவு நன்மை எண்ணக்கரு

கல்விக்கான செலவு வெறுமனே நுகர்வுச்செலவாகக் கருதப்படுவதில்லை. தனிநபருக்கும் முழுமையாக சமுதாயத்திற்கும் வருவாய்களைத் தரக்கூடிய செலவாக கல்விச் செலவு நோக்கப்படுவதால் அது முதலீட்டுச் செலவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கல்வியினால் கிடைக்கக்கூடிய பயன்கள் பற்றிய காலப்பகுதி தொடர்பான முன்நோக்குத்திட்டம் தேவைப்படுகிறது. உழைக்கக்கூடிய காலப்பகுதியை மதிப்பிட வேண்டியுள்ளது. ஒவ்வொரு தனிநபரும் பெற்ற வெவ்வேறு மட்டத்தி லான, வெவ்வேறு வகையான கல்வியின் அடிப்படையில் உழைத்த அல்லது உழைக்கக்கூடிய வருமானம் கணிக்கப்படும். அத்தகைய வருமானம் அவ்வாறான கல்வியைப் பெறுவதற்கு ஏற்பட்ட பொதுத்துறைச் செலவுகள் மற்றும் தனிநபர் செலவுகளுடன் ஒப்பிட்டு நோக்கப்படும். உழைப்பு என்பதை எதிர்பார்ப்பது பொருத்தமற்றதாக உணரப்படும் நிலைமைகளில் செலவின் பயனுறுதித்தன்மை (Cost - effectiveness) பற்றிப் பகுப்பாய்வு செய்யப்படும். உழைப்பு தவிர்ந்த பிற நோக்கங்களை கவனத்திற் கொள்வதாயின் அதற்கு மிகவும் பொருத்தமான கொள்கையை அல்லது கொள்கைத் தொகுதிகளைத் தீர்மானிக்க வேண்டியது அவசியமாகும்.

நேரடியாகப் பெறப்படும் நலன்கள் தவிர வேறு நலன்களும் உள்ள போது அதாவது மறைமுக பொருளாதார நலன்கள் உள்ளபோது அவற்றை திட்டமிடலில் எந்தளவுக்குச் சேர்த்துக் கொள்வது என்பதில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

## செலவுகள் - Costs

பிறபொருளாதாரச் செயற்திட்டங்களுக்குக் கணிப்பது போல் கல்விச் செலவு களைக் கணிக்கமுடியாது. கல்விச் செலவுக் கணிப்பீடு பல சிக்கலான அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

பொதுவாக படிப்புச் செலவு, படிப்புச் சாராத செலவு சந்தர்ப்பச் செலவு என்பன தனிப்பட்டவர்களைப் பொறுத்த முக்கியமான செலவுகளாகும். (விபரங்களுக்கு அத்தியாயம் 5ஐப் பார்க்கவும்) தனிப்பட்டவர்களுக்கு இத்தகைய செலவுகள் ஏற்படுவது போல் நாட்டின் கல்விமுறைமை முழுவதற்கும் உரிய செலவுகளும் காணப்படுகின்றன. எல்லாவகையான கல்வியிலும் கல்வி மட்டங்களிலும் எல்லாக் கல்வி நிறுவன மட்டத்திலும் ஏற்படும் செலவுகளைக் கணித்தல் வேண்டும். நிறுவனமட்டத்தில் மீண்டெழும் செலவுகள், மூலதனச் செலவுகள் மற்றும் சந்தர்ப்பச் செலவுகள் கணிக்கப்பட வேண்டியனவாகக் காணப்படு கின்றன.

இவ்வகைச் செலவினங்களை நாடு முழுவதிலும் தொடர்ச்சியாகவும், மிகவும் சரியாகவும் கணிப்பது கடினமானது. அவ்வாறே தனிப்பட்டவர் தொடர்பாகவும் நிறுவனங்கள் தொடர்பாகவும் அமையச் செலவைக் கணிப்பதும் கடினமாகும்.

### விளைவுகள் அல்லது பயன்கள் - Returns

பொருளாதார முதலீடுகளுக்கு கிடைக்கின்ற வெளியீடுகள் கட்புலனாகக் கூடியனவாகவும் பணத்தினால் சுலபமாக அளவிடக்கூடியனவாகவும் காணப் படுகின்றன. ஆனால் கல்வியின் பயன்களை அவ்வாறு அளவிட முடியாது. அவ்வாறு அளவிடுவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன.

கல்வியினால் கிடைக்கும் விளைவுகளை எளிமையாக பின்வருமாறு பாகுபடுத்த முடியும்.

#### அ. கட்புலனாகும் விளைவுகள்

இதில் கல்விகற்றோர் தம் தொழில் வாய்ப்பு மூலம் பெறுகின்ற வருமானங்கள் முக்கியமானவை. கல்வி மட்டம் உயர்வதற்கேற்ப சம்பளங்களும் அதிகரிப்ப துண்டு. அவ்வாறே தொழிலாளர்களுக்குரிய கல்வி, பயிற்சி என்பன அதிகரிக்கும் போது அவர்களால் ஆக்கப்படும் உற்பத்தியின் அளவு அதிகரிப்பதோடு பண்டங் களின் தரமும் உயர்ந்து விடுகின்றது. இதனால் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவ துடன் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து விடுகிறது. ஊழியர் அனைவரினதும் கல்வித்தரம் உயரும் போது தேசிய உற்பத்தியின் அளவும் தரமும் அதிகரிக்கும்.

#### ஆ. கட்புலனாகா விளைவுகள்

கல்வியில் முதலீடுகளை தேசிய ரீதியில் அதிகரிக்கும் போது நீண்டகால பரவல் விளைவுகள் ஏராளமாக ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட வகையில் ஏற்படு கின்றன. இவை தொழில்நுட்ப, உயர் தொழில்நுட்ப, விஞ்ஞான முன்னேற்றங் களாக காணப்படலாம். இதற்கும் மேலாக புதிய ஆராய்ச்சிகள் மூலம் புதிய மாற்றங்கள் எல்லாத்துறைகளிலும் ஏற்படலாம். இவை எல்லா மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை சமகாலத்தில் முன்னேற்றக் கூடியவை.

இவ்வாறே சிறந்த கல்வி மானிடப் பண்பை விருத்தி செய்வதால் அமைதி, நல்லிணக்கம், சமாதானம், இன ஒற்றுமை ஏற்படமுடியும். சிறந்த பண்பாட்டு வளர்ச்சியும் ஏற்பட முடியும். இவற்றைத் துல்லியமாக அளவிட முடியாதெனினும் இதன் பரவல் விளைவுகளை நீண்ட காலத்தில் தெளிவாக உணர முடியும். இவை மிகவும் முக்கியமானவை.

### குறிகாட்டிகளும் ஒப்பீடும்

பொதுவாக கல்வி மீதான செலவுகள் நாட்டின் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதை மதிப்பிடுவதற்கு பல குறிகாட்டிகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். பல்வேறு வகையான கல்விச் செலவுகளுடன் பல பொருளாதார மற்றும் சமூகக் குறிகாட்டிகளை ஒப்பீடுகளில் பின்வருவன குறிப்பிடத்தக்கவை.



- ஆள்வீத (தலா) கல்விச் செலவு எதிர் தலாவருமானம்
- மாணவர்கள் பாடசாலையில் சேரும் விகிதம் எதிர் பொருளாதார வளர்ச்சி வீதம்
- ஊழியரின் கல்விச் செலவு அதிகரிப்பு வீதம் எதிர் விவசாய உற்பத்திப் பெருக்கம்
- ஊழியரின் கல்விச் செலவு எதிர் கைத்தொழில் உற்பத்திப் பெருக்கம்
- தலா கல்விச் செலவு எதிர் ஆயுள் எதிர்பார்க்கை
- பெண் கல்விச் செலவு எதிர் சிசுமரண வீதம்
- மொத்தக் கல்விச் செலவு எதிர் நூல்களின் வெளியீடு

இத்தகைய பல்வேறு வகை ஒப்பீடுகளையும் தனி ஆள், மாவட்டம், மாகாணம், நாடு, பிராந்தியம் என்ற பல மட்டங்களில் மேற்கொள்ள முடியும்.

### பிரச்சினைகள்

செலவு நன்மைப் பகுப்பாய்வு முறையானது நீண்டகால ஆராய்ச்சிக்குரிய சிக்கலான பல பிரச்சினைகளைக் கொண்டுள்ளதாகப் பல ஆய்வாளர் தெரிவித்துள் ளனர். அவற்றைப் பின்வருமாறு குறிப்பிட முடியும்.

1. பல்வேறு பல்கலைக்கழக ஆய்வாளர், தனிப்பட்ட மற்றும் அரச ஆராய்ச்சி முகவர்கள், சர்வதேச நிறுவனங்கள் போன்ற பலரும் கொள்கைகள் தொடர்பாக மறைமுகமான பாதிப்புக்களை ஏற்படுத்தி வந்துள்ளனர். இதனடிப்படையில் பல்கலைக்கழக கல்வியில் செலவிடுவதை விட ஆரம்பக்கல்வியில் அதிக செலவிடுவதன் மூலமாகவே கூடுதலான சமூக விளைவுகளை ஏற்படுத்த முடியும் என்று வற்புறுத்துகின்றனர். அவ்வாறாயின் விஞ்ஞான ஆராய்வைத் தூண்டும் உயர் கல்வியை வளர்முக நாடுகள் கைவிட்டு விடுவது நல்லதா என்ற பிரச்சினை எழுகின்றது.
2. கல்வியின் தரத்தை அதிகரிப்பதாயின் பாடநூல் வசதிகளை அதிகரிக்க வேண்டும். ஆசிரியர் பயிற்சியை தரமுயர்த்த வேண்டும் என்று குறிப்பிடப் படுகின்றது. பெற்றோர் மாணவர் தொடர்பான செலவுகளை அதிகரிக்க வேண்டியதில்லையா என்ற பிரச்சினை இங்கு ஏற்படுகின்றது.
3. கல்வியினால் கிடைக்கும் பயன்களை அளவிட வாழ்நாள் முழுவதும் உழைக்கும் வருமானத்தையே கவனத்திற் கொள்ளவேண்டும் என்று ஆராய் வாளர் கூறுகின்றனர். அவ்வாறு வாழ்நாள் முழுவதற்குமான உழைப்பை மிகவும் சரியாக கணிப்பதென்பது நிச்சயமற்றதும் குழப்பம் தருவதுமாகும் என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.
4. தேசிய ரீதியில் திட்டமிடுவோர் அரசாங்கக் கருத்தை ஒரே வகையான கருத்தை முழு நாட்டுக்கும் பொதுமைப்படுத்த முனைகின்றனர். இது

நாட்டின் உள்ளே காணப்படும் மாறுபாடான பல்லினத் தன்மையை நிராகரிப்ப தாகும். உண்மையை நிராகரிக்கும் கற்பிதமான அணுகுமுறையாக இது அமை கின்றது.

5. இலங்கை, இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் பெறக்கூடிய புள்ளி விபரங் களில் நம்பகத்தன்மை பெறமுடியாது. இந்த நிலையில் புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு கல்வியின் செலவு நன்மை பற்றிய முடிவுகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் உள்ளன.

6. வேலையின்மை, கீழ் உழைப்பு என்பன உயர்கல்விகற்றோர் மட்டத்தில் அதிகமாகக் காணப்படுகின்ற வளர்முக நாடுகளில் சந்தர்ப்பச் செலவினைக் கணிப்பது எவ்வகையில் பொருத்தமானது என்ற பிரச்சினையுண்டு.

   அவ்வாறு கல்வி கற்காது இளம் வயதில் தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர் கள் தொழில் புரியும் வாழ்நாள் நீட்சி மிக அதிகம் என்பதால் அவர்கள் கல்வி கற்றோரைவிட பல சந்தர்ப்பங்களில் அதிக வருமானம் பெறுகின்றனர். தொழில்முயற்சியாளராக அவ்வாறு முன்னேறிய பலரின் மிக உயர்ந்த வருமானத்தை கல்வியுடன் தொடர்புபடுத்தி நோக்குவதிலும் பிரச்சினைகள் உள்ளன.

7. வளர்முக நாடுகளில் சில துறைகளில் குறைந்த தொகையினருக்குக் கல்வி வாய்ப்புக்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக செயற்கைப் பற்றாக்குறை நிலை நிறுத்தப்படுகின்றது. இதனால் சந்தை முறையில் உயர்ந்த வருமானங் களையும் உறுதிப்படுத்த முடிகிறது. இதனை செலவு நன்மை அணுகுமுறை யில் விளக்குவதில் சிக்கல்கள் உள்ளன.

8. பல வளர்முக நாடுகளில் சம்பளங்கள் கல்வியின் அளவு, தரம், பயிற்சிக் காலம் என்பவற்றுடன் நேரடியான தொடர்பு எதையும் கொண்டிருப்பதில்லை.

   சில நாடுகள் நிபுணத்துவ அறிவுடையோர் வெளிநாடுகளுக்குப் புலம் பெயராது தடுப்பதற்காகவே மேலதிக சம்பளங்கள் வழங்கப்படுகின்றன. சிலர் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் போது சர்வதேச வேதன மட்டத்தைப் பெறுகின்றனர். இது உள்நாட்டில் ஒப்பீட்டு ரீதியில் உயர்வானது. இதனை இந்த அணுகுமுறை விளக்க முடிவதில்லை.

9. கல்வியினால் உழைக்கும் மேலதிக வருமானங்கள் வளர்முக நாடுகளில் கல்வி சாராத காரணிகளினாலும் பெறப்படுவதுண்டு. ஒருவனின் அதிஉயர் மதிநுட்பம் (பிறப்பு வழியானது), விடாமுயற்சி, உயர்ந்த மதிப்புமிக்க குடும்பப் பின்னணி, உயர்வர்க்கத் தொடர்புகள் போன்ற காரணிகளினாலும் ஏற்படுவது அவதானிக்கப்படுகின்றது. இத்தகைய அசாதாரண நிலைமைகளை இந்த அணுகுமுறை மூலமாக விளக்குவது கடினமாகும்.



10. இத்தகைய அணுகுமுறை சிறந்த விளைவைப் பெறுவதற்கு எங்கு அதிக வளங்களை ஒதுக்கீடு செய்யலாமென விளக்குகின்றது. ஆனால் எந்தளவுக்கு இவ்வாறு வளங்களை ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று இது விபரிக்க வில்லை. இதனால் முழுமையற்ற அணுகுமுறையாக இது விளக்கப்பட்டு வருகின்றது.

11. இந்த ஆய்வானது கடந்தகால நிலைமைகளைப் பற்றி அதிகம் விளக்கு கிறதேயன்றி எதிர்காலம் பற்றி விளக்கக் கூடியமுறையில் வடிவமைக்கப் பட்டிருக்கவில்லை.

இவ்வாறு குறைபாடுகளும், பிரச்சனைகளும் இருந்தாலும் தொடர்ச்சியாக செலவுகளையும் நலன்களையும் பற்றி கவனமாகப் பரிசீலனை செய்யுமிடத்து சிறந்த முடிவுகளை மேற்கொள்ளும்படி திட்டமிடுவோரை வழிகாட்ட முடியும்.

**தொகுப்பு அணுகுமுறை** - Synthesis Approach

மனிதவலு அணுகுமுறை சமுதாயக் கேள்வி அணுகுமுறை மற்றும் செலவு நன்மை அணுகுமுறை என்ற மூன்றும் திட்டமிடலுக்கான போதுமான அடிப் படையை வழங்கியுள்ளது. இவை மூன்றையும் ஒருங்கிணைத்து புதிய அணுகு முறையை உருவாக்கி அதனடிப்படையில் கல்வித்திட்டத்தைத் தயாரிக்க முடியும். மூன்று அணுகுமுறைகளையும் தனித்தனியாக நோக்கும் போது சில அம்சங்கள் விடுபட்டுள்ளதுபோல் தோன்றுகிறது. அவற்றை குறை நிரப்புச்செய்து முழுமைப் படுத்துகின்ற ஒன்றிணைக்கப்பட்ட அணுகுமுறை இதுவாகும். இந்த முறையில் பல்வேறு முறைமையியல் பற்றியும் நோக்கி அவற்றை ஒன்றிணைக்கும்போது அவை மேலும் தூயதாக்கப்பட்டு வலிமையுடையதாக்கப்படல் அவசியம் அத்துடன் எத்தகைய கல்வி முறை நிலவினாலும் பயனுறுதிமிக்க திட்டமிடலுக்கு ஏற்றவகையில் தகவல்கள் கிடைப்பதற்கு வகை செய்யப்படுதலும் அவசியம்.

திட்டமிடல் செய்முறையில் ஈடுபடவிரும்புகின்ற ஏராளமான பணியாளர் மற்றும் அலுவலர்களை பரந்த வகையிலான தொழில்நுட்ப திறன்களைப் பெறக்கூடியதாக பயிற்சியளித்தல் வேண்டும்.

திட்டமிடல் பயனுறுதிமிக்கதாக அமைய வேண்டுமாயின் நிறுவனமட்ட, நிர்வாக மட்ட ஏற்பாடுகள், உளப்பாங்குகள் மற்றும் நடத்தைகள் என்பவற்றை முழுமை யாகவே மாற்றியமைத்தல் வேண்டும்.

இவை எல்லாவற்றிலும் கவனம் செலுத்துவதால் மாத்திரமே இத்தொகுப்பு முறை யினால் நன்மைகளை அதிகரிக்க முடியும். முன்னைய மூன்று அணுகுமுறை களுமே வெளிப்படையாக பல விடயங்களில் நுட்பமாக கவனம் செலுத்திய போதிலும் கல்வி முறைக்குள்ளே காணப்படும் பலவீனங்களை கருத்திற் கொள்ளத்தவறியிருந்தன. இதனாற்றான் தொகுப்பு அணுகுமுறையைப்

பின்பற்றுவதாயின் மேலே விபரித்த வகையிலான மாற்றங்களைக் கட்டாயம் ஏற்படுத்த வேண்டும்.

தொகுப்பு அணுகுமுறையைப் பின்பற்றி மாணவர்களும், சமுதாயமும் உரிய பயன்களைப் பெற வேண்டுமானால் பின்வருவன தொடர்பாக மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

1. குறிப்பான நோக்கங்கள் மற்றும் முன்னுரிமைகள்.
2. உள்ளார்ந்த கட்டமைப்பு.
3. உள்ளடக்கம் மற்றும் முறைமைகள்.
4. பயிற்சியும் ஆசிரியர் பயன்பாடும்.
5. கற்பித்தல் மற்றும் கற்றல் செயன்முறைகள்.
6. நிர்வாக மற்றும் முகாமைத்துவ பாணி மற்றும் முறைமைகள்.

முறைசார்கல்வி முறைமைக்கு வெளியே உள்ளோரின் பிரச்சினைகளுக்கும் அவசரமாக தீர்வுகாண வேண்டியுள்ளது. இதற்கு மரபுரீதியாக நிறுவன மட்டத்திலும் மற்றும் உளவியல் ரீதியாகவும் காணப்படும் தடைகளை அகற்றவும் வேண்டும். முறைசாராக் கல்வியையும் முறைசார் கல்வியையும் கல்வித் திட்டமிடல் ஒருங்கிணைக்க வேண்டும். எதிர்காலத் தலைமுறையினருக்கு எழக்கூடிய துன்பங்களையும் தடைகளையும் தவிர்க்கவும், விளவிரயத்தைக் கட்டுப்படுத்தவும் புதிய மாற்றுச் சிந்தனைகளை திட்டமிடல் ஊடாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

முன்னேற்றமான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமானால் வேறுபட்ட வேலைகளை வேறுபட்ட மாதிரியில் திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டும். வெறுமனே கல்விச் செயற்பாடுகளை விரிவுபடுத்துதல் கூடாது. பதிலாக மாற்றங்களையும் பொருத்தமானவற்றை பின்பற்றுவதையும் திட்டமிடல் ஊக்குவிக்க வேண்டும்.

சமுதாயத்திற்கும் பொருளாதாரத்திற்கும் தொடர்புகள் மற்றும் பரந்தளவிலான பரிமாணம் என்பவற்றில் கவனம் செலுத்தும் பேரின திட்டமிடல் (Macro - planning) கையாளப்பட வேண்டும். இதற்கும் மேலாக கல்வி முறைமைக்கு உள்ளே காணப்படுகின்ற பல்வேறு உபதுறைகள் மற்றும் உள்ளார்ந்த செயல்முறைகள் என்பவற்றுக்கு பிரயோகிக்கக்கூடிய புதிய வடிவிலான நுண்பாகத் திட்டமிடலையும் (Micro - planning) கையாள வேண்டும்.

தொகுப்பு அணுகுமுறை இவை எல்லாவற்றையும் கவனத்திற் கொள்ளுமானால் எதிர்கால மக்களுக்கு பயனுறுதிமிக்க கல்வித்திட்டத்தை வழங்குவது சாத்தியமாகும்.



## முறைமைகள் அணுகுமுறை

The Systems Approach

ஒரு நாட்டின் கல்விமுறையை பல உப ஒழுங்குமுறைகளின் ஒன்றிணைந்த அமைப்பாக நோக்குவதே இந்த அணுகுமுறையாகும். தெளிவான நோக்கங்களுடன் செயற்படுகின்ற பல உபபகுதிகள் ஒன்றிணைக்கப்பட்ட அமைப்பே ஒரு முழுமையான முறைமை அல்லது செயலமைப்பு என்று கருதுவதே இந்த அணுகுமுறையாகும்.

முறைமை என்றால் என்ன என்பது பற்றி காப்மன் (Kaufman 1987), ஹேக் (Haag 1985) போன்ற பலர் முகாமைத்துவ நோக்கில் விளக்கமளித்துள்ளனர். அதனை கல்விமுறைக்குள் பிரயோகித்து திட்டமிடுவது பற்றியே இந்த அணுகுமுறை விளக்குகிறது.

பல பகுதிகள் அல்லது உறுப்புக்கள் மிகவும் ஒழுங்குமுறையிலான தொடர்புகளின் அடிப்படையில் செயற்படுவதனையே இந்த அணுகுமுறை விளக்கும் பல சிறிய பகுதிகள் தனித்தனியாகவும் செயற்பட வேண்டும்; அவை மற்றைய பகுதிகளுடன் தேவையான அள்வுக்குத் தொடர்புபடவும் வேண்டும்; இத்தகைய தொடர்புகள் முழுமையான தொழிற்பாட்டை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறான தொழிற்பாட்டு அமைப்பையே முறைமை அணுகுமுறை விளக்குகிறது.

தொழில் நிறுவனங்கள் எல்லாம் இவ்வாறு சுயமாக இயங்கும் பல உப முறைமைகளை உருவாக்கி பொருத்தமான வகையில் அவற்றை ஒருங்கிணைத்து தம் இலக்குகளை முழுமையாக நிறைவேற்றி வருகின்றன.

கல்வி முறையும் இவ்வாறு தொழிற்பட்டு வருகிறது. இதனை அடிப்படையாக வைத்து கல்வி முறைகள் திட்டமிடப்படல் வேண்டும்.

## கல்வி முறைமை ஒரு திறந்த முறைமை

கல்வி முறை தான் செயற்படுகின்ற சுற்றுப்புற பின்னணிச் சூழலுடன் தொடர்பு பட்டதாக இயங்கி வருவதால் திறந்த முறைமை (Open System) என்று குறிப்பிடப் படுகின்றது. பாடசாலை தனது சூழலுடன் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். கோட்டம், வலயம் மற்றும் மாகாண கல்வித்தொகுதிகளும் சூழலுடன் தொடர்பு பட்டே செயற்பட முடியும். ஆனால் ஒவ்வொன்றும் தம் சூழலுடன் எந்தளவுக்குத் தொடர்புபட்டுள்ளன என்பது வேறுபட முடியும். அவ்வாறு சூழலுடன் எவ்வித தொடர்புமின்றி இயங்குமாயின் அது மூடப்பட்ட முறைமை என்றழைக்கப்படும். அவ்வாறு செயற்படுவது நடைமுறைச் சாத்தியமற்றது.

முழுமையான கல்விமுறை நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல், கலாசார சூழலுடன் தொடர்புபட்ட வகையில் அதே சமயம் சுயமாக தொழிற்பட்டு

வருவதாகும். எனினும் கல்வி முறை தனக்குரிய எல்லைக் கோடுகளையும் தெளிவான வரையறைகளையும் கொண்டிருக்க வேண்டும். இந்த வரையறை நெகிழ்ச்சியுடையதாக தேவைக்கேற்ப மாற்றமடைவதாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் தனது செயல்திறன்களை அதிகரிக்க முடியும்.

கல்வி முறைமையின் பல்வேறு உபமுறைமை (Sub - Systems) களான கலைத் திட்டம், கற்பித்தல், கற்றல், தொடர்பாடல், முடிவுகள் எடுத்தல், மதிப்பிடல் போன்றவற்றுக்கிடையில் ஒழுங்குமுறையான ஓட்டம் (Flows) காணப்பட வேண்டும். தகவல்கள், பொருட்கள், சக்தி, நிதி போன்ற பலவும் ஒழுங்காக இவற்றிடையே நகரும் வகையில் ஓட்டம் நன்கு பேணப்பட வேண்டும்.

இவ்வாறு கல்விமுறை பல உப முறைமைகளையும் கொண்டு செயற்படுமிடத்து காலத்துக்குக் காலம் அவை செயற்படும் முறைகளைப் பற்றிய விபரங்களைத் திரட்டுவதும், அவ்விபரங்களைப் பகுப்பாய்வு செய்வதும், அதனடிப்படையில் உபமுறைமைகள் ஒவ்வொன்றும் எந்தளவுக்கு சரியாகவும், திறமையாகவும் செயற்படுகின்றன என மதிப்பிடுவதும், தவறுகள் காணப்படின் அவற்றைத் திருத்துவதும் அவசியம். இத்தகைய செயற்பாடு பின்னூட்டல் (Feed back) என்று விளக்கப்படுகிறது.

கல்வி முறையில் கல்வி நிறுவனங்கள் மைய அம்சமாகச் செயற்படுகின்றன. மாணவர், ஆசிரியர், நிதி, கட்டிடம் போன்ற பலவற்றையும் இக்கல்வி நிறுவனங் களில் நாடும் சமூகமும் உள்ளீடு (Input) செய்கின்றது.

இதனடிப்படையில் கல்வி நிறுவனங்கள் செயற்படுகின்றன. இதில் பல உபமுறை கள் தனித்தனியாகவும், தொடர்புபட்டும் இயங்குகின்றன. கலைத் திட்டம், கற்பித்தல், கற்றல், தொடர்பாடல் முடிவுகள் எடுத்தல், மதிப்பீடு போன்ற பலவும் செயற்படுகின்றன.

இத்தகைய செயற்பாடுகளினால் விளைவாக ஏற்படும் நலன்கள் வெளியீடாகப் (Output) பெறப்படுகின்றன. மாணவர்களிடம் அறிவு, திறன், நடத்தை, உளப் பாங்கு மாற்றமடைகின்றன. பிரச்சினைகளை எதிர்கொள்ளும் ஆற்றல், சுயமாகச் செயற்படும் துணிவு, முடிவு காணும் திறன் என்பன விருத்தியடைகின்றன. இதனால் கல்வி முறையின் நோக்கங்கள் நிறைவேறுகின்றன. இவை வெளியீடாகக் கொள்ளப்படுகின்றன.

முறைமைகள் அணுகுமுறையில் இவற்றை அடிப்படையாகக் கொண்டு கல்வித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். அவ்வாறு திட்டமிடும் போது உபமுறைகள், தொடர்புகள், திறந்த தன்மை, முறைமைகளின் எல்லைகள், ஓட்டம், பின்னூட்டல் போன்ற பிரதான அம்சங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அப்போது தான் வினைத்திறனும், பயனுறுதியும்மிக்க விளைவுகளை சமூகத்திற்கும் நாட்டிற்கும் கல்வித்திட்டமிடல் வழங்க முடியும்.



## நிலைமைசார் அணுகுமுறை

The contingency Approach

1980களில் கல்வித்திட்டமிடல் தொடர்பான நெருக்கடிகளைத் தீர்க்கும் வகையில் புதிய அணுகுமுறையொன்றும் உருவாயிற்று. கற்பதற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கான புதிய அணுகுமுறைகளைத் தேடும் ஆர்வமும் வளர்ச்சி பெற்றது. இதன் காரணமாக மாற்றமடைந்து செல்கின்ற பல்வேறு சூழ்நிலை களுக்கு பொருந்தக்கூடிய ஒரேயொரு அணுகுமுறை மாதிரி அல்லது கோட் பாட்டை தேடுவது சாத்தியமற்றதென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. இதனால் எத்தகைய சூழ்நிலை மற்றும் நெருக்கடிகள் காணப்படுகின்றனவோ அதற்கு ஏற்றதாகக் கிடைக்கின்ற வளங்கள், இயங்குகின்ற கல்வி நிறுவனங்கள், நிலவு கின்ற அரசியல் நிலைமை என்பவற்றுடன் இசைந்து செல்லக்கூடிய தீர்வுகளைத் தரக்கூடிய அணுகுமுறையே பொருத்தமானதென்று கருதப்படலாயிற்று.

கல்வித்திட்டமிடல் பயனுறுதிமிக்கதாக அமையுமா இல்லையா என்பது சூழ்நிலை, பின்னணி என்பவற்றை எந்தளவு மிகச்சரியாக மதிப்பிட்டுக் கொள்கிறோம் என்பதிலும் அதற்கு மிகவும் பொருத்தமான அணுகுமுறையை எவ்வாறு தெரிந்தெடுத்து கையாள்கின்றோம் என்பதிலுமே தங்கியுள்ளதென ஆய்வாளர் கருதினர். எல்லாவிதமான மாற்றங்களினாலும் உருவாகின்ற பல்வேறு வகையின தான தேவைகளை நிறைவு செய்யக்கூடிய தனியொரு உபாயத்தைப் பரிந்துரைப் பது ஒரு போதும் சாத்தியமாகாது.

இத்தகைய சிந்தனையின் பின்னணியிலேயே அணுகுமுறை தோற்றம் பெற்றது. நிலைமைகள் செயல்கள் மற்றும் வெளிப்பாடுகள் என்பவற்றுக் கிடையிலான தொடர்பு முறையை அடிப்படையாகக் கொண்டே முடிவுகளை எடுப்பது சிறந்த தென முகாமைத்துறையினர் விளக்குவதுண்டு. நிலைமைக் கேற்ற அணுகு முறையைத் தீர்மானிப்பது சிறந்ததென்பது இப்புதிய திட்டமிடலின் அடிப்படை யாகும்.

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மிகவும் பயனுறுதிமிக்க விளைவுகளைத் தந்த ஒரு முறை மாறுபட்ட பிறிதொரு சூழ்நிலையில் பொருத்தமற்றதாகிவிடும். ஒரு கல்வி நிறுவனத்துக்கான அபிவிருத்தித் திட்டமிடல்கூட ஒரு நிலையில் வெற்றி பெறலாம். ஆனால் அதுவே பிறிதொரு சூழலில் செயற்படுகின்ற தோல்வியடைய முடியும். ஒரு குறிப்பிட்ட சூழலில் செயற்படுகின்ற நிறுவனத்தில் தொழில்நுட்பம் மற்றொரு நிலைமையில் செயற்படாது தடைப்பட்டு விடமுடியும். அதன் அடிப்படையிலேயே இப்புதிய அணுகுமுறை விரும்பப்படலாயிற்று.

அணுகுமுறையானது குறிப்பிட்ட கல்விமுறையின் உயர் அலுவலர், அதிகாரி அல்லது அமைச்சர் குறிப்பிட்ட நிலைமையில் சிறப்பான சூழலைப் பொறுத்து குறித்த நேரத்தில் அடிப்படை நோக்கங்களை அடைவதற்கு மிகவும் பொருத்த மான தொழில்நுட்பத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று விளக்குகின்றது.

ஒவ்வொரு இயலாமைக்கும் ஒவ்வொரு முறையை நுட்பத்தைக் கையாளலாம். திட்டவட்டமான முறையைத்தான் பின்பற்ற வேண்டுமென்று முன்னரே தீர்மானிக்க வேண்டிய தேவை எதுவும் கிடையாது.

கல்வியின் ஒவ்வொரு மட்டத்திலும், ஒவ்வொரு உபதுறையிலும், ஒவ்வொரு நிறுவனத்திலும் வெவ்வேறு சூழ்நிலைகள் உருவாகும் வாய்ப்புக்கள் உண்டு. சமூக, கலாசார, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப நிலைமைகளின் மாற்றங்கள் அத்தகைய உறுதியற்ற சூழலை உருவாக்கும் போது முன்னரே தீர்மானித்த முறையைப் பயன்படுத்துவது வெற்றியளிக்காதென இந்த திட்டமிடல் அணுகுமுறை விளக்கமளிக்கின்றது.

இதில் முடிவுகளை மேற்கொள்ளும் உயர் மட்டத்திட்டமிடுவோரின் சூழலுக்கு உகந்த முடிவுகளை எடுக்கும் ஆற்றலே முக்கியமானது. இலங்கை போன்ற நாடுகளில் திட்டமிடுவோர் இத்தகைய உபாயத்தில் போதிய அறிவும், தேர்ச்சியும் பெற்றிருப்பது விரும்பத்தக்கது.



# அத்தியாயம் 4

# கல்வித்திட்டமிடல் செயன் முறைகள்

## (Processes of Education Planning)

ஒரு நாட்டிற்கான கல்வித்திட்டமிடலைத் தயாரித்தல் என்பது ஒழுங்கு முறையிலான பல நடவடிக்கைகளை கவனமாக வடிவமைத்தலும், அவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய வகையில் நடைமுறைப்படுத்துதலும், சீராக மதிப்பீடு செய்தலும் ஆகிய எல்லாச் செய்முறைகளையும் உள்ளடக்குகிறது.

திட்டமிடல் புள்ளிவிபரங்களையும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்ட செயன்முறையாக உள்ள போதிலும் அது வெறுமனே புள்ளிவிபரம் சார்ந்த தொழில்நுட்ப பணியல்ல. சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்த பகுப்பாய்வாகவும் தெளிவான முடிவுகளாகவும் கூட அமைகின்றன.

திட்டமிடல் ஒரு சுற்று ஒழுங்கு (Planning Cycle) பணியாக மேற்கொள்ளப்படக் கூடியது. எனினும் கட்டாயமாக ஒரே முறையில் பின்பற்றப்பட வேண்டுமென்பதில்லை. பல்வேறு நிலைமைகள், பிரச்சினைகள் என்பவற்றுக்கேற்ப திருத்தியமைக்கக் கூடியவையாகும்.

பொதுவாக திட்டமிடல் சுற்று ஒழுங்கு பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.

1. முன் திட்டமிடல் (Pre Planning)
2. திட்ட தயார் நிலை (Plan Preperation)
3. திட்ட உருவாக்கம் (Plan Formulation)
4. திட்ட விளக்கம் (Plan Elaboration)
5. திட்ட நடைமுறைப்படுத்தல் (Plan Implementation)
6. திட்ட மதிப்பீடு (Plan Evaluation)

18441

**முன் திட்டமிடல்** - Pre Planning

கல்வித்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு முந்திய செயற்பாடுகளை இக்கட்டம் விளக்குகின்றது. திட்டம் ஒன்றைத் தயாரிக்கக் கூடிய பயிற்சி பெற்ற ஆளணியைத் தெரிவு செய்தல் வேண்டும். திட்டப்பணிகளில் ஈடுபடக்கூடிய பொருத்தமான நிறுவன அமைப்புக்களையும் தெரிவுசெய்து அவற்றிடையே சரியான தொடர்பையும் பேணுதல் வேண்டும். திட்டமிடலுக்கு வேண்டிய தகவல்களையும், தரவுகளையும் திரட்டிக்கொள்ள வேண்டும். புள்ளிவிபரத் தரவுகளை பகுப்பாய்வு செய்துகொள்வதும் அவசியமாகும்.

இத்தகைய விபரங்களினடிப்படையில் தேசிய ரீதியில் தேசியக்கல்வி தொடர்பாக கொள்கை முன்மொழிவுகளை (Plocy Proposals) தீர்மானித்தல் வேண்டும். கல்வித் திட்டமிடற் பணியில் ஈடுபடுவோர் திட்ட அமுலாக்கம் தொடர்பாக பூரண அதிகாரம் பெற்றுள்ள கல்வி அமைச்சர், மந்திரி சபை ஆகியோரின் தீர்மானங் களுக்கு அமைவாக கல்வித்திட்டத்திற்கு அடிப்படையான கொள்கைகளை வகுத்தல் வேண்டும். இலங்கையில் தேசிய கல்வி ஆணைக்குழுவினருடனும் கலந்தாலோசித்து இதனை தீர்மானிக்க வேண்டும்.

**திட்ட தயார் நிலை** - Plan Preperation

தற்போதைய கல்வி முறையிற் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் சிறப்பான அம்சங்கள் அடையாளம் காணப்படும். கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்திற்குப் பொருத்தமானவை எனக் கருதப்படும் எதிர் பார்க்கைகளை நிர்ணயம் செய்தல்வேண்டும். நிலவுகின்ற குறைபாடுகளை அகற்றுவதற்கு உதவக்கூடிய விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றி பரிசீலிக் கப்படும்.

இதனடிப்படையில் நாட்டிற்குரிய கல்விசார் தேவைகள் பற்றி மதிப்பிடப்படும். தேவையான நிறுவனங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். தேவைப்படுகின்ற பௌதிக மற்றும் மனித வளங்களின் தேவைகள் பற்றி மதிப்பீடு செய்யப்படும். பல்வேறு தீர்மானங்களும் முன்னுரிமைப்படி மேற் கொள்ளப்படும். திட்டத்தை உருவாக்குவதற்கு அடிப்படையான சட்டங்களும் இயற்றப்படும்.

இத்தகைய பல்வேறு செயல்களையும் மேற்கொள்வது தொடர்பாக அரசாங்க நிறுவனங்கள், தனியார் துறையினர், நிதிப்பகுதியினர், தொழில்நுட்பத் துறையினர் ஆகியோருடன் கலந்துரையாடுவதும் அவசியமாகும்.

**திட்ட உருவாக்கம்** - Plan Formulation

உத்தியோகபூர்வமான அங்கீகாரத்தைப் பெறும் வகையில் திட்டத்தைத் தயாரிக்கும் நிலை இதுவாகும். செயற்படுத்தவுள்ள திட்டத்தின் கொள்கை, நோக்கங்கள், இலக்குகள் என்பவற்றிடையே இணக்கப்பாடு ஏற்படுத்தப்படும்.



நடைமுறைப்படுத்த வேண்டிய நோக்கங்களை தொகைகள், தரம், ஏற்படக்கூடிய சமூக விளைவுகள் என்ற வகையில் குறிப்பிடல் வேண்டும். நாட்டின் தேசிய ரீதியிலான கல்வி முன்னுரிமைகள் ஏற்படுத்த வேண்டிய முன்னேற்ற மாதிரிகள் என்பன பற்றி பரவலான நோக்கங்கள் குறிப்பிட வேண்டும்.

கல்வியின் தரத்தை உயர்த்தக்கூடிய வகையில் கலைத்திட்டங்களை மீள் மதிப்பீடு செய்தல், கல்வியில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், தேசிய பொருளாதார அபிவிருத்தி, சமூக, கலாசார முன்னேற்றங்கள் சர்வதேச தரத்திற்குச் சமனான தொழில்நுட்ப விருத்தி போன்ற பிரதான நோக்கங்களுடன் கல்விச் செயன் முறையை இணைத்தல் போன்றன பற்றி தெளிவாக நிர்ணயிக்கப்பட்டுவிடும்.

தகுதியுடையதான நோக்கங்கள் திட்ட இலக்குகளாக நிர்ணயிக்கப்படும். செயல்திறன்மிக்க கொள்கை சார் கருவிகளை உருவாக்குவதற்கு திட்ட இலக்குகள் (Targets) உதவுகின்றன. இத்தகைய இலக்குகள் விபரமான முறையில் முழுமை யான இலக்குகள், பௌதிக இலக்குகள், பிரதேச இலக்குகள் என பலவகையாக நிர்ணயிக்கப்படலாம்.

இலக்குகளை நடைமுறைப்படுத்தக்கூடிய சட்டகங்களாக்கும் போது செயற் திட்டங்கள் (Projects) உருவாக்கப்படுகின்றன. இதற்குச் சாத்தியமாகின்ற பல மாற்று வாய்ப்புக்கள் பரிசீலிக்கப்படும். தொழில்நுட்ப அம்சம், செலவு வேறுபாடு கள், காலநீட்சி, சாத்தியப்பாடுகள், பயனுறுதித் தன்மை, வளம் திரட்டல், துறைசார் ஒதுக்கீடுகள் போன்ற பல்வேறு தகுதிகளினடிப்படையில் திட்டமானது நடைமுறைப்படுத்தக்கூடிய செயற்திட்டங்களாக வரையப்பட்டுவிடும்.

**திட்ட விளக்கம்** - Plan Elaboration

திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தேவையான சாத்தியமாகும் சூழ்நிலை களை விருத்தியடையச் செய்வது இந்தச் செயன்முறையாகும். திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பல்வேறு பணிகளில் ஈடுபடவுள்ள பிரிவினருக்கு நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் திட்டம் பற்றி விளக்கமளிப்பது அவசிய மாகின்றது. இதற்கு வசதியாக திட்டமானது செயற்படுத்தக்கூடிய பல உபபிரிவு களாக வகுக்கப்படும். பின்னர் ஒவ்வொரு உபபிரிவு தொழிற்பாடுகளிலும் ஈடுபடவுள்ள நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு நிறுவனத்தின் உள்ளார்ந்த மட்டத்தில் விளக்கமளிக்கப்படும். இதனால் நிறுவனங்களின் உள்ளே செயல் படும் எல்லோரும் திட்டம் பற்றி தெளிவாக விளங்கிக் கொள்வர்.

அவ்வாறே திட்டம் எந்த பிரதேசத்தில் எத்தகைய சூழலில் நடைமுறைப்படுத்த உள்ளதோ அங்கு இயங்குகின்ற சமூகத்தினருக்கும், சமூக நிறுவனங்களுக்கும் திட்டம் பற்றி விரிவாக விளக்கமளிக்கப்படும். இதன் மூலம் தடைகள் எதுவுமின்றி, தாமதம் எதுவுமின்றி பூரணவெளிவாரி ஒத்துழைப்பு மற்றும் உதவிகளுடன் இணக்கமாகத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

இவ்வாறு நிறுவனமட்டத்திலான உள்ளார்ந்த நிலையிலும், நிறுவனங்களுக்கு வெளியே சமூக மட்டத்திலும் திட்டம் பற்றி விளக்கமளிக்கப் படும்.

பொதுவாக திட்டம் விளக்கமளிக்கும் வகையில் பின்வருமாறு பல உபபிரிவுகளாக நோக்கப்படுவதுண்டு.

**1. திட்டம் முழுமையான வரைபு**

**2. நிகழ்ச்சித்திட்டங்கள் - Programmes**

திட்டம் பற்றிய கொள்கைகளும் முதலீடு பற்றிய தீர்மானங்களும் இணைக்கப் பட்ட வரைபு நிலை, இது திட்டத்தின் பெரும் பகுதிகளாகக் காணப்படும்.

உதாரணமாக : கலைத்திட்ட அபிவிருத்தி

ஆசிரியர் அபிவிருத்தி

மாணவர் அபிவிருத்தி

இத்தகைய ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டமும் மேலும் பல செயற்திட்டங்களாக வகுக்கப்பட்டிருக்கும்.

**3. செயற்திட்டங்கள் - Projects**

நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியான மாதிரியில் பல செயற்திட்டங்களாக வகுத்துக் கொள்ள முடியும். நிர்வாகம், நிதித் தேவை, நிதி ஒதுக்கீடு போன்ற தேவைகள் கருதியே நிகழ்ச்சித் திட்டங்கள் எல்லாம் பல செயற்திட்டங்களாக தயாரிக்கப்படுகின்றன.

உதாரணமாக : மாணவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பின்வருமாறு பல செயற் திட்டங்களாக வகுக்கப்படலாம்.

செயற்திட்டம் 1 : பாடசாலையில் சேர்தலை ஊக்குவித்தல்.

செயற்திட்டம் 2 : மாணவர் இடைவிலகலை குறைத்தல்.

செயற்திட்டம் 3 : மாணவர் தேர்ச்சி மட்டங்களை அதிகரித்தல்.

செயற்திட்டம் 4 : மாணவர் ஆளுமையை விருத்தி செய்தல்.

இவை பற்றித் தெளிவாக விளக்கமளிக்கப்படும்.

**4. தொழிற்பாடுகள் - Activities**

ஒவ்வொரு செயற்திட்டமும் பல தொழிற்பாடுகளையும் அவற்றிடையிலான தொடர்புகளையும் கொண்டதாக வடிவமைக்கப்பட்டிருக்கும்.

உதாரணம் : பாடசாலையில் சேர்தலை ஊக்குவித்தல் என்ற செயற்திட்டம் பின்வருமாறு பல தொழிற்பாடுகளாக வகுக்கப்படலாம்.

தொழிற்பாடு 1 : மாணவர் சேர்தல் தொடர்பான புள்ளி விபரங் களைத் திரட்டல், பகுப்பாய்வு செய்தல்.



தொழிற்பாடு 2 : மிகவும் கூடுதலாக பாடசாலையில் சேராமல் உள்ள பிரதேசத்தை அல்லது இனக் குழுமத் தைக் கண்டறிதலும் அதற்கான காரணங்களை அடையாளம் காணலும்.

தொழிற்பாடு 3 : அவர்களது அல்லது அப்பிரதேச பிள்ளைகளை முன்னரிலும் அதிகமாக சேர்ப்பதற்கான தூண்டல் உதவி, ஊக்குவிப்புக்களை இனங் காணல்.

தொழிற்பாடு 4 : அதை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவை யான நிறுவன ஏற்பாடுகள், நிதி ஒழுங்குகள், வழிகாட்டல், கண்காணிப்பு, ஒருங்கிணைப்பு, ஆளணி நியமனம் போன்றவற்றை நிர்ணயம் செய்து கொள்ளல்.

இத்தகைய எல்லா விடயங்கள் பற்றியும் தொடர்புடைய பகுதியினருக்கு தெளிவாக விளக்கமளிக்கப்படும். இதன் மூலம் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உகந்த பின்னணியை உருவாக்கிவிட முடியும்.

## திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்
(Plan Implementation)

செயற்திட்டங்கள் ஒவ்வொன்றையும் நடைமுறைப்படுத்துவதன் மூலமாக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். எல்லா நிகழ்ச்சித் திட்டங் களும் நிறைவேறுமிடத்து கல்வித்திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப் பட்டுவிடும் எனபதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.,

கல்வித்திட்டம் நிதிவளம் பெறுவதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படுகின்றது; அங்கு அதன் சாதக, பாதக நிலைமைகள் பற்றி அலசி ஆராயப் படுகின்றது; பின்னர் சில திருத்தங்களுடனோ, திருத்தங்கள் எதுவுமின்றியோ ஏற்றுக்கொள்ளப்படும்; அப்போது சட்டமாக ஏற்கப்பட்டுவிடும்.

அதன் பின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான மேலாண்மை அமைப்பு அல்லது நிறுவனத்திடம் திட்டம் ஒப்படைக்கப்படும். திட்டமிடலுக்குப் பொறுப்பான குழு ஆலோசனைகளை வழங்கும். நடைமுறைப்படுத்தலுக்கு அவசியமான ஏனைய உதவிகளையும் வழங்கும்.

இலங்கையில் கல்வித்திட்டத்தின் அமுலாக்கம் கல்வியமைச்சின் கண்காணிப்பி லேயே நடைபெறுகின்றது.

கல்வித்திட்டம் ஒன்றை திருப்திகரமாக நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அம்சங்கள் முக்கியமானவை.

1. **கல்வி நிர்வாகம்** - Administration

நிறுவனங்களில் செயற்படும் கல்வி நிர்வாகிகளின் ஒத்துழைப்பு திட்டம் பற்றிய விளக்கம். நடைமுறைப்படுத்து வதிலான அவர்களின் ஈடுபாடு, ஊக்கம் என்பன திட்ட நடைமுறைப்படுத்தலுக்கு மிகவும் அடிப்படை யானவை.

கல்வி நிர்வாகிகளின் தகைமை, தரம் அவர்கள் பெற்றுள்ள பயிற்சிகள், அவர்களிடமுள்ள ஆக்கத்திறன் என்பன மிகவும் முக்கியமான தேவைகளா யுள்ளன. நிர்வாகிகளிடம் திறமையைப் போலவே மனச்சாட்சியுடனான நடத்தையும் முக்கியமாக வேண்டப்படுகின்றது.

நிர்வாகிகள் திட்டத்தயாரிப்பு நிலைகளில் கலந்துரையாடி இருப்பின் நடைமுறைப்படுத்தலில் அவர்களது பங்களிப்பு சிறப்பானதாக அமையும். அவர்களுக்கு வேண்டிய பௌதிக மற்றும் ஆளணி வசதிகளும் வழங்கப்படல் வேண்டும். அர்ப்பணிப்பு உணர்வும், மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் உளப்பாங்கும் நிர்வாக அணியினரிடம் விருத்தி செய்யப்படுதல் அவசியம்.

2. **தொடர்பாடல்** - Communication

மேலிருந்து கீழாகவும் கீழிருந்து மேல் நோக்கியும் பக்கவாட்டிலும் சிறந்த தொடர்பாடல் விருத்தி செய்யப்படல் வேண்டும்.

தகவலை வழங்குதல், தகவலைப் பேணுதல், தகவலைப் பெறுதல், பின்னூட்டல் போன்ற எல்லாப்படி நிலைகளிலும் சரியான தன்மை, நேரச்சிக் கனம், பயனுறுதித்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

தற்போதைய தகவலில் (Informatics) வளர்ச்சியின் எல்லா அம்சங்களையும் பொருத்தமாக மின்தபால் (E-mail), மின்மடல் (Fax) போன்றவற்றையும் கணினிகளையும் தொடர்பாடலின் வினைத்திறனையும், பயனுறுதித் தன்மை யையும் அதிகரிக்கும் வகையில் திட்டமிட்டுக் கையாள வேண்டும்.

தொடர்பாடலில் தாமதம், தவறுகள், திறமையின்மை ஏற்படாமல் தவிர்ப்பதன் மூலமாக திட்டத்தை திறமையாக நடைமுறைப்படுத்த முடியும்.

3. **நிறுவன ஏற்பாடுகள்** - Institutional Arrangements

திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபோது பல்வேறு படிநிலைகளிலும் பொறுப்புடன் செயலாற்றக்கூடிய துணை நிறுவனங்கள் பல தேவைப் படுகின்றன.

ஏற்கனவே தொழிற்பாடுகளையும் நிறுவனங்களுக்குப் புதிய வளங்களையும் வழங்கி அதிகாரங்களையும் வழங்கி அவற்றின் வல்லாண்மையை உயர்த்திக் கொள்ளலாம். அல்லது அவசியமான பணி நிலைகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பக்கூடியதாக புதிய நிறுவனங்களை உருவாக்குதல் வேண்டும். இத்தகைய நடைமுறைகளில் எது சிறந்ததென தீர்மானிக்க வேண்டும். அவசியமெனில் இருவகை முயற்சிகளிலும் ஈடுபட முடியும்.



4. **நிதி பெறல்** - Obtaining Finance

திட்டத்தின் அமுலாக்க படிமுறைக்கேற்பவும், அதன் வேகத்திற்கு ஏற்பவும், திட்டகால நீட்சிக்கு அமைவாகவும் நிதி பெறப்படுதல் வேண்டும். நிதி கிடைக்காவிடில் போதியளவு இல்லாவிடில் உரியகாலத்துள் பெறப்படா விடில் திட்டம் தோல்வியடையும். இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் வெளிநாட்டு நிதி உதவி அதிகம் எதிர்பார்க்கப்படும் நிலையில் தாமதங்களினால் திட்ட நடைமுறைப்படுத்தல் தடைப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

நிதிவழங்குதலில் “சிவப்பு நாடா” (Red Tapism) முறையை தவிர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். போதுமான வழிகாட்டல்கள் தேவை; சீரான வரவு செலவுத்திட்டங்கள் தேவை; கவனம் மிக்க நிதிக்கட்டுப்பாடுகள் தேவை; போதுமான வழிகாட்டலும் கண்காணிப்பும் தேவை. இவற்றை யெல்லாம் நன்கு நிர்வகிக்க முடிந்தால் திட்டம் தங்குதடையின்றி நடை முறைப் படுத்தப்படும்.

5. **செய்து முடித்தலும் பராமரித்தலும்** - Completion and Maintenance

தயாரிக்கப்பட்ட அதே வகையில், அதே அளவான வளங்களைக் கொண்டு நோக்கங்களை நிறைவேற்றும்; வகையில் திட்டத்தின் எல்லா படிநிலை களும் நிறைவேற்றப்படுதல் அவசியம். அதில் முழுமையான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஆனால் அது மாத்திரம் போதமானதல்ல. திட்டம் என்ன இலக்குகளுடன் தயாரிக்கப்பட்டதோ அந்த நோக்கங்கள் தொடர்ச்சியாக நிறைவேறும் வகை யில் திட்ட செயற்பாடுகள் நாளாந்தம் பராமரிப்பதற்கான உட்கட்டமைப்பு ஏற்பாடுகளையும் உறுதிப்படுத்த வேண்டும். உதாரணமாக பாடசாலைகளில் ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டு விட்டாலும் தொடர்ந்து கற்பித்தலில் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அவற்றை பயன்படுத்துவதற்கான அடிப்படை வசதிகளையும் உறுதிப்படுத்த வேண்டும். ஆய்வுகூடத்திற்கான இரசாயனங்கள் தொடர்பான செலவு நீர் வழங்கல், மின்சார விநியோகம் தொடர்பான செலவு ஆய்வுகூட பணியாளர் சம்பளம் போன்றவற்றை ஈடுசெய்யக் கூடிய தொடர்ச்சியான ஏற்பாட்டையும் திட்ட நடைமுறைப் படுத்தலில் உறுதிப்படுத்த வேண்டும்.

6. காலமும் கட்டங்களும் - Time and Phases

திட்டத்தை நிறைவேற்றுவற்குரிய காலம் என்பதில் மிகவும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் திட்டம் உரிய காலத்துள் நிறைவேற்றப்படாது நீடிக்கப்படுமாயின் செலவுகள் அதிகரித்துவிடும். தேவைகள் மாறிவிடும். பயிற்சிகள் பொருத்தமற்றதாகிவிடும். இது திட்டத்தின் பயனுறுதித் தன்மையை அழித்துவிடும்.

திட்டங்கள் நடைமுறைப்படுத்தலுக்கு வசதியாக பல கட்டங்களாக வகுக்கப் படுவதுண்டு. எனினும் அவற்றிடையிலான இணைப்புக்களும் வற்புறுத்தப் படுவதுண்டு.

ஒவ்வொரு கட்டமும் உரிய காலத்துள் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றதாக தொழிற்பாடுகளின் முன்னுரிமைகளில் மாற்றங்கள் செய்வதும், பின்னணி நிலைமைகளை முன்னேற்றுதலும் வேண்டும்.

சோசலிச நாடுகளின் திட்ட நடைமுறைப்படுத்தலில் இத்தகைய திட்டகாலம் கட்டங்கள் என்பதில் அதீத கவனம் செலுத்தப்படுவதால் அதிகம் வெற்றி யடைவதுண்டு.

இவ்வாறு விபரிக்கப்பட்ட பல்வேறு அம்சங்களிலும், நடவடிக்கைகளிலும் தனித்தனியாகவும், கூட்டாகவும் கவனம் செலுத்தப்படுமானால் கல்வித் திட்டங்கள் வெற்றியடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துச் செல்லும்.

## திட்ட மதிப்பீடு

Plan Evaluation

கல்வித்திட்டமிடல் சுற்று ஒழுங்கின் இறுதிச் செயற்பாடாக திட்ட மதிப்பீடு அமைகிறது. தீர்மானிக்கப்பட்ட திட்டத்தின் நோக்கங்களுடன், நிறைவேற்றப் பட்ட திட்ட செயற்பாடுகளை ஒப்பிடுவதாகவும், அதனடிப்படையான பெறுபேறு களை அளவிடுவதாகவும், அதனடிப்படையில் வெற்றி அல்லது தோல்வியை மதிப்பீடு செய்வதாகவும் அமைகின்ற செயன்முறையே திட்டமதிப்பீடு எனப் படும். திட்ட நடைமுறைப்படுத்தல் தொடர்பாக திரட்டப்பட்ட தகவல்கள், புள்ளி விபரங்கள் இச்செயற்பாட்டிற்கு அடிப்படையாக அமைகின்றன.

### மதிப்பீட்டு இலக்குகள்

பொதுவாக திட்டமதிப்பீடுகள் பல இலக்குகளுடன் மேற்கொள்ளப் படுவதுண்டு.

**1. சாதனைகளை அளவிடுதல்**

கல்வித்திட்டமிடலில் குறிப்பிடப்பட்ட எல்லா நோக்கங்களும் நிறைவேறி யுள்ளனவா? எந்தளவுக்கு நிறைவேறியுள்ளன? என மதிப்பீடு செய்யும் முறை இதுவாகும்.

**2. கருதுகோள் பரிசோதனை**

திட்டத்திற்கு ஆதாரமாக மேற்கொள்ளப்பட்ட அடிப்படைக்கொள்கை தொடர்பான எடுகோள்கள் எந்தளவுக்குச் சரியானவை என பரிசோதனை செய்யும் மதிப்பீடு இதுவாகும்.

**3. மாற்றுக் கருதுகோள்களின் பரிசோதனை**

திட்டம் தொடர்பாக ஏற்கனவே திட்டமிட்ட காரணிகளினால் ஏதேனும் எதிர்பாராத விளைவுகள் ஏற்பட்டுள்ளனவா என மதிப்பீடு செய்யப்படும். அவ்வாறே



திட்டத்தில் கூடியளவு கவனத்திற் கொள்ளப்படாத காரணிகளினால் ஒழுங்கான, வலுவான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளனவா என ஆராய்வதும் அவற்றை ஒப்பீடு செய்வதும் இதிலடங்கும்.

**4. செலவு நன்மை மற்றும் செலவு பயனுறுதித்தன்மை பற்றிய ஆய்வு**

திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மூலதன முதலீடுகளின் அடிப் படையில் திட்ட விளைவுகளை ஒப்பிடும் போது திருப்திகரமாக அமைந்துள்ளதா என ஆராயப்படும். பொருளாதார வளங்கள் அனைத்தும் எந்தளவுக்கு முழுமை யாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன ஆளணியின் வினைத்திறன் உயர்ந்ததா என்பன போன்ற வினாக்களுக்கு விடை தருவதாக இந்த மதிப்பீடு அமையும்.

### மதிப்பீட்டு வகைகள்

Types of Evaluation

திட்டத்தின் செயற்பாடு பற்றிய பரிசோதனை உண்மையில் திட்ட செயற்பாடு தொடர்பாக இரு நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

திட்டம் தயாரிக்கப்பட்ட பின் நடைமுறைப்படுத்த முன் அதன் சாத்தியப்பாடுகள் பற்றி தர்க்க ரீதியில் மதிப்பீடு செய்யப்படுவதுண்டு. இது உண்மையில் (Appraisal) ஆய்வு நிலைச் செயற்பாடேயாகும்.

இரண்டாவது நிலை என்பதே திட்டம் நடைமுறைப்படுத்த ஆரம்பித்த பின் மேற்கொள்ளப்படுவதாகும். இதுவே உண்மையில் மதிப்பீடு (Evaluation) என்று விபரிக்கப்படுகின்றது. முன்பு குறிப்பிட்ட ஆய்வு நிலை என்பதிலிருந்து மதிப்பீடு வேறுபட்டது என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

மதிப்பீடு இரு கட்டங்களில் (Stages) மேற்கொள்ளப்படுவதுண்டு.

**1. நடைமுறை மதிப்பீடு** - Con current Evaluation

திட்டம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இடைக்காலத்தில் செயற்பாடுகளை மூல திட்ட வரைபு நிலையுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யப் படுகின்றது. திட்டம் முழுமையாக நிறைவேற்றுவதற்கு முன்பாகவே மேற்கொள்ளப்படும் மதிப்பீடு இதுவாகும்.

நிறைவேற்றப்படுகின்ற நிலையிலேயே தவறுகள் ஏதேனும் ஏற்படுகின்றனவா எனக் கண்டறியவும் அதே தவறுகள் திட்ட நீட்சி முழுவதிலும் பரவாமல் தடுக்கவும் இந்த மதிப்பீடு உதவுகின்றது. அல்லது எவ்வாறான (பௌதிக அல்லது மனித) வளங்களில் இயலுமை குறைபாடுடையதாயுள்ளது என்பதையும், தந்திரோபாயங்களிலா, தொழில்நுட்ப ஏற்பாடுகளிலா தவறுகள் மிகுந்துள்ளன என்பதைக் கண்டறியவும் இத்தகைய மதிப்பீடு பெரிதும் உதவுகின்றது.

## 2. **இறுதி நிலை மதிப்பீடு** - Post Facto Evaluation or Expost Evaluation

கல்வித்திட்டம் முழுமையாக நிறைவேறிய பின்பு மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீடு இதுவாகும். இந்த மதிப்பீட்டு முடிவுகள் ஒரு திட்ட படிமுறையின் இறுதி அம்சமாக மாத்திரமன்றி எதிர்காலத்தில் தயாரிக்க விரும்புகின்ற திட்டத்திற்கான முன்னோடி வழிகாட்டியாகவும் அமையும்.

இதன்படி திட்டம் வெற்றி பெற்ற விடயங்கள் அவற்றுக்கு உதவிய காரணிகள் என்பவற்றை சரியாக அடையாளம் காணமுடியும். அவ்வாறே திட்டத்தின் எப்பகுதிகள் தோல்வியடைந்தன என்றும் அதற்குப் பொறுப்பாயிருந்த காரணிகள் அவற்றின் பலவீனங்கள் பற்றியும் இந்த மதிப்பீடு விபரிக்கின்றது. இத்தகைய மதிப்பீடு இரண்டு வகைப்பட்டதாகும்.

### 2.1. **விவரண மதிப்பீடு** - Describe Evaluation

திட்டத்தில் விபரிக்கப்பட்ட அதே முறையில் எல்லாம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளனவா என மதிப்பீடு செய்யும் முறை இதுவாகும். திட்டத்தின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காக இது அமைவதால் தொகை ரீதியாக அளவிடப்படும் முன்னேற்றங்கள் பற்றியதாகவே இந்த மதிப்பீட்டுச் செயன்முறை அமைகிறது. திட்ட வரம்புக்குள் அடங்கும் விடயங்களைப்பற்றியதாக இருப்பதால் இலகுவான முறையாக அமைகிறது.

### 2.2. **விளக்கமளிக்கும் மதிப்பீடு** - Explanatory Evaluation

எதிர்பார்த்த விளைவுகளை திட்டம் எந்தளவுக்கு நிறைவேற்றியுள்ளதென மதிப்பீடு செய்வது இந்த முறையாகும். கட்புலனாகாதனவாகவும் நீண்டகாலத் தாக்கங்களை உருவாக்குவனவாகவும் உள்ள விளைவுகள் பற்றிய மதிப்பீட்டு செயன்முறையாக இது அமைகிறது.

செயற்படுத்திய முறையின் தவறுகள் மற்றும் குறைபாடுகளினால் எதிர்பார்த்த விளைவுகள் ஏற்படாமற்போயிருக்க முடியும். திட்டத்தின் சில அம்சங்கள் தோல்வியடைந்தமைக்கு திட்டம் தொடர்பாக கையாளப்பட்ட எடுகோள்கள் காரணமாக இருத்தல் கூடும். இத்தகைய தவறைக் கண்டறிய இம் மதிப்பீடு உதவுகின்றது. அவ்வாறே திட்டத்திற்கு பின்னணியாக கையாளப்பட்ட கல்விசார் கோட்பாடுகள் எந்தளவுக்கு சரியானவை என்று மதிப்பீடு செய்வதற்காகவும் இது அமைகிறது. திட்டத்தை ஆதாரமாகக் கொண்ட ஆனால் நீட்சி நோக்கிலான மதிப்பீடாக இது அமைவதால் முக்கியத்துவம் உடையது.

## **மதிப்பீட்டுச் செயன்முறை**

Evaluation Process

திட்டமதிப்பீடு என்பது பல ஒழுங்கானதும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது மான பல நடவடிக்கைகளை கொண்டதாகவும் இந்த ஒவ்வொரு



நடவடிக்கைகளையும் தனித்தனியாகவும், தொடர்புடைய தாகவும் கவனமாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அத்தகைய நடவடிக்கை ஒழுங்கு முறையினைப் பின்வருமாறு குறிப்பிட முடியும்.

1. மதிப்பீட்டிற்கான நோக்கங்களை தெளிவாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.
2. மதிப்பீட்டு பணியில் ஈடுபடக்கூடிய சரியான நிறுவன அமைப்புக்களை போதுமான வளங்கள் மற்றும் அதிகாரங்களுடன் உருவாக்குதல்.
3. மதிப்பீட்டு பணியில் ஈடுபடக்கூடிய ஆளணியினரை தெரிவுசெய்து போதிய விளக்கமும் பயிற்சியுமளிக்க வேண்டும்.
4. தரவுகள், தகவல்கள் திரட்டுவதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும் ஏற்ற பொருத்தமான நவீன கருவிகள், உபகரணங்கள் (கணினி, மின்மடல், ஒலிப்பேழை போன்றன) வழங்கப்படல் வேண்டும்.
5. திட்டம் செயற்படுத்தப்படுகின்ற களத்தில் ஆய்வுகளை மேற்கொள்வ தற்கான உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.
6. தரவுகள் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், விசாரணை, கள ஆய்வு போன்ற பல்வேறு கணிப்பீடு தொடர்பாக குழுநிலைத் தொழிற்பாடு களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
7. குறிப்பிட்ட பிரதேசத்தின் பொருளாதார, சமூக, அபிவிருத்தியுடன் தொடர்புடையதாக கல்வித் திட்ட மதிப்பீட்டுப் பகுப்பாய்வுகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். அதாவது கல்வித்திட்ட பெறுபேறுகள் ஏனைய முன்னேற்றங்கள் மற்றும் மாற்றங்களுடன் தொடர்புபட்ட முறையிலும் மதிப்பீடு செய்வதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
8. மதிப்பீட்டின்படி பின்வரும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.
   - வெற்றி பெற்ற உபதுறைகள் அதற்கு உதவிய காரணிகள் என்பவற்றை அடையாளம் கண்டு பட்டியற்படுத்த வேண்டும்.
   - தோல்வியடைந்த மற்றும் பாதிக்கப்பட்ட துறைகள் அவ்வாறு தடை ஏற்படுத்திய அக மற்றும் புறக்காரணிகளை அடையாளம் கண்டு பட்டியற்படுத்த வேண்டும்.
   - தோல்வியைத் தவிர்த்திருக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதற்கு மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தெளிவாக விளக்கி அத்தகைய முன்மொழிகளை நிரற்படுத்த வேண்டும்.
9. திட்ட மதிப்பீட்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு அறிக்கை (Evaluation Report) ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

இதில் திட்டத்தில் ஏற்பட்ட தோல்விகள், வெற்றிகள் என்பன உரிய காரணிகளுடன் விளக்கப்படுவதோடு எதிர்காலத்தில் புதிதாக கல்வித் திட்டம் தயாரிப்போருக்கு உரிய வழிகாட்டு நெறிகளையும் (Guidelines) வழங்குதல் வேண்டும். அதற்கேற்ற தான ஆலோசனைகளின் தொகுப்பாகவும் இவ்வறிக்கை அமைதல் வேண்டும்.

**முக்கியத்துவம்**

கல்வித்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளும் பணி திட்டத்தில் பயன் படுத்தப்பட்ட மனித நாட்கள் (Mandays) நிதிவளம், பௌதிக மூலதனம், இயற்கை வளம் போன்றவற்றில் சிக்கனப் பண்பு, வினைத்திறன், பயனுறுதித்தன்மை என்பவற்றைக் கண்டறிவதற்கு பெரிதும் பயன்படுகின்றது.

திட்ட மதிப்பீடு என்பது பின்வரும் அடிப்படைகளில் முக்கியத்துவமுடைய தாக விளங்குகிறது.

1. திட்ட தயாரிப்பு நடைமுறைப்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் காணப் பட்ட தவறுகளை அடையாளம் காணமுடிகிறது. இதனடிப்படையில் குறிப் பிட்ட நாட்டின் கல்வி நிர்வாக பொறிமுறை ஆளணி, பௌதீக உட்கட்டமைப்புகள் என்பன தொடர்பாக தென்படாலிருந்த குறைபாடுகள் நலிவுத்தன்மைகள் என்பவற்றை அடையாளம் காணமுடியும்.

2. தவறுகள் நலிவுத்தன்மைகளை திருத்துவதற்கு குறுங்காலத்திலும் நீண்ட காலத்திலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், வழிமுறைகள், அணுகு முறைகள், தந்திரோபாயங்கள், நுட்பங்கள் என்பவற்றைக் கவனமாகத் தீர்மானிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

3. திட்டத்தில் வெற்றியளித்த விடயங்களைச் சரியாக அடையாளம் காண முடியும். அத்தகைய வெற்றிக்கு சிறப்பாக உதவிய காரணிகளையும் அடை யாளம் காண வாய்ப்பு ஏற்படும். அவற்றை மேலும் முன்னேற்றுவதற்கு அல்லது வினைத்திறனுடையதாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள், செயற் திட்டங்கள் பற்றி சிந்திக்கவும் திட்ட மதிப்பீடு உதவுமென்பது குறிப்பிடத் தக்கது.

4. கடந்தகால திட்டமிடலின் பல்வேறு கட்டச் செயன்முறைகள் பற்றிய மதிப் பீட்டை செய்வதன் மூலமாக இதன் அனுபவங்களை விஞ்ஞான ரீதியில் பிரயோகிக்கக் கூடிய மாதிரிகளாக்க முடியும். இது நீண்ட காலத்திட்டமிடலின் வழிகாட்டிகளாக அமையும்.

5. இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகளும் திட்ட நடைமுறைப்படுத்தலை அதிகம் பாதிப்பதுண்டு. அத்தகைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகள் எந்தளவுக்கு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டனவாக மாற்ற முடியும் என்பது பற்றிச் சிந்திக்கவும் மதிப்பீடு பயன்படும்.



6. திட்ட மதிப்பீட்டினடிப்படையில் கல்வித்திட்டமிடல் தொடர்பான புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளமுடியும். கல்வித்திட்டமிடல் பற்றிய புதிய கோட்பாடுகளையும் (Theories) புதிய திட்டமிடல் மாதிரி (Planning Models) களையும் உருவாக்கமுடியும். இது கல்வித் திட்டமிடலுக்கு புதிய பரிமாணத்தை ஏற்படுத்திவிடும்.

இவ்வாறு கல்வித்திட்டமிடல் செயன் முறையின் எல்லாப் படிமுறைகளையும் கவனமாக மேற்கொள்வதன் மூலமாக கல்வித் திட்டமிடலின் உச்ச நலன்களை சமுதாயமும், நாடும் உறுதிப்படுத்திக்கொள்வது சாத்தியமாகும்.

# அத்தியாயம்

## 5

# இலங்கையின் கல்வித்திட்டமிடல்

ஒரு நாட்டு மக்களின் சிந்தனையை வலுவானதாக்கி கடந்த காலத்தை கவன மாக மதிப்பீடு செய்யும் நிகழ்காலத்தை துணிவுடன் எதிர்கொள்ளவும் தேவையான ஆற்றலை விருத்தி செய்வதே கல்விச் செயற்பாட்டின் நோக்கமாகும். இந்த அடிப்படையில் இலங்கையின் கல்வி முறையும் செயற்பட்டு வருகின்றது.

**கல்வி முறை**

இலங்கையின் முறைமையான கல்வி முறை என்பது பொதுக்கல்வி மற்றும் உயர் கல்வி என இரண்டாக பாகுபடுத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது. இலங்கையின் குடித்தொகையில் 518 வயது வரையிலானோர் பாடசாலை செல்லும் வயதினராக உள்ளனர். 13 வருடகால பாடசாலைக் கல்வியை வழங்குவதாக பொதுக்கல்வி காணப்படுகிறது. பொதுக்கல்வி முடிவடையும் நிலையிலான பரீட்சை கல்விப் பொதுத்தராதர (உயர்தரம்) பரீட்சை எனப்படுகின்றது.

உயர்கல்வி என்பது சிறப்பாக பல்கலைக்கழக கல்வியைக் குறிக்கின்றது. தற்போது 12 பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன. திறந்த பல்கலைக்கழகம் ஒன்று காணப்படுகின்றது. பல்கலைக்கழகங்களில் வருடாந்தம் 10, 000 புதிய மாணவர் கள் அனுமதிக்கப்படுகின்றனர். ஏறக்குறைய 32,000 மாணவர்கள் (1996ல்) இவற்றில் கல்விகற்கின்றனர். வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கும் சில பல்கலைக் கழகங்கள் அனுமதி வழங்கி வருகின்றன. சட்டக்கல்லூரி தானாக நுழைவுத் தேர்வு நடாத்தி அதனடிப்படையில் மாணவரைச் சேர்க்கின்றது. ஏறக்குறைய 30 உயர் தொழில்நுட்ப கல்லூரிகள் நாடளாவிய ரீதியில் ஏறக்குறைய 19, 000 மாணவர் களுக்கு பகுதிநேரமாகவும் முழுநேரமாகவும் 75 கற்கை நெறிகளை நடாத்தி வருகின்றன. க.பொ.த. (உயர்தரம்) தகுதியுடையோர் பட்டயக்கணக்காளர், கிரயக் கணக்காளர் போன்ற சர்வதேச தேர்வுகளுக்கும் தோற்றுகின்றனர்.

இலங்கையின் கல்விமுறை என்பது அரசினர் துறையாகவே தொடர்ந்தும் விளங்கு கின்றது. கல்வி தொடர்பான கொள்கைகள் அரசினால் தீர்மானிக்கப்பட்டு



வருகின்றன. அரச பொது நலன் பேணும் கொள்கையுடன் இணைந்ததாக இலாப நோக்கு எதுவுமின்றி அரசினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. பொதுக்கல்வி, தொழில் மற்றும் தொழில் நுட்பக்கல்வி, உயர்கல்வி என்பன அரச தீர்மானங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், செயற் திட்டங்கள் என்பவற்றின் அடிப்படையிலேயே செயற்படுகின்றன.

முறைசார் கல்வி ஏற்பாட்டுக்குப் புறம்பாக முறைசாரா நிகழ்ச்சித் திட்டங்களிலும் அரசாங்கம் பொறுப்புடன் ஈடுபட்டு வருகின்றது. கல்வி அமைச்சின் முறைசாராக் கல்விக்கிளை இவற்றை செயற்படுத்துகின்றது. பாடசாலை செல்லாதோர், இடைவிலகியோர் போன்றோருக்கான எழுத்தறிவு நிகழ்ச்சித்திட்டம், பாடசாலை விலகியோருக்கான திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம், வளர்ந்தோர் மற்றும் சமுதாயக் கல்வி நிகழ்ச்சித் திட்டம், வளர்ந்தோருக்கான ஆங்கிலக்கல்வி போன்ற பல நெறிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

விசேட கல்வி, ஆசிரியர் கல்வி போன்றவற்றிலும் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

பல்முனைப்பட்டதாக தேசிய கல்விமுறையை அரசாங்கமே திட்டமிட்டு நிர்வகித்து வருவதால் இலங்கையின் கல்விமுறை "அரசாங்கக் கல்விமுறை" என்றே அழைக்கப்படுகின்றது.

நாட்டின் தேசிய ரீதியான நலத்திட்டங்கள், பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் செயற்திட்டங்களை கல்விமுறையுடன் இணைக்கும் போக்கு தொடர்ந்து காணப் படுகின்றது. நலத்துறைச் செயற்திட்டங்கள், சத்தூட்ட செயற்திட்டங்கள், வறுமைத் தணிப்பு செயற்திட்டங்கள், நிவாரண செயற்திட்டங்கள் போன்ற பலவும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேசிய கல்விமுறையுடன் தொடர்பு படுத்துவதில் சுதந்திரத்திற்குப் பின்வந்த எல்லா அரசாங்கங்களும் அக்கறைகாட்டி வந்துள்ளன.

இத்தகைய கல்வி முறை அரசாங்கத் தொடர்பு காரணமாகவே கல்வித்திட்ட மிடலும் அரசின் பொறுப்பாகவும், கடமையாகவும் உணரப்பட்டுள்ளன.

**கல்வி நிர்வாகப் படிமுறை**

கல்விக்கொள்கை, திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு மத்திய அரசாங்க மட்டத்தில் கல்வி அமைச்சு பொறுப்புடையது. நாடளாவிய ரீதியில் பரீட்சைத் திணைக்களம், வெளியீட்டுத்திணைக்களம் என்பன ஆணையாளர் களின் கீழ் இயங்குகின்றன. கல்விச் சேவைகள் திணைக்களம் செயற்திட்ட அமைச்சாகவும் செயற்படுகின்றது. பாடசாலைக்கல்வி தொடர்பாக கட்டிடம், தளபாடம், உபகரணம், பாடநூல், மதியஉணவு போன்றவற்றில் கல்விச் சேவைகள் திணைக்களம் கவனம் செலுத்துகின்றது. பாடசாலைகளின் கலைத்திட்ட விருத்தி, ஆசிரிய பயிற்சி, பாடநூல் வடிவமைப்பு, பாடசாலை நிர்வாகப் பயிற்சி

போன்ற பல விடயங்களுக்குப் பொறுப்பாக மத்திய அரசாங்க மட்டத்தில் செயற்படும் பிரதான நிறுவனமாக தேசிய கல்வி நிறுவகம் (National Institute of Education) (1979 இலிருந்து) செயற்பட்டு வருகின்றது.

1992 இலிருந்து மாகாணக்கல்வி அமைச்சுக்கள் செயற்படத் தொடங்கிய பின் மாகாணமட்டத்தில் திட்டமிடவும், மாகாண மட்டத்தலான வலய, கோட்ட கல்வித் திணைக்களங்களூடாக திட்டங்களையும், செயற்திட்டங்களையும் நடைமுறைப் படுத்தவும் அதிகாரம் பெற்றனவாக மாகாணக் கல்வி அமைச்சுக்கள் விளங்கு கின்றன. எனினும் வலய, கோட்ட மட்டத்திலான திணைக்களங்களும் தமது மட்டத்தில் திட்டமிடுகின்றன.

## பொதுக்கல்வித் திட்டமிடல்

இலங்கையின் கல்விமுறை கட்டமைப்பில் மிகவும் பெரிதாகவும் முக்கிய மானதாகவும் விளங்குவது பொதுக்கல்வி முறையென்பதால் அதன் திட்டமிடலும் முக்கியத்துவமுடையது.

ஒவ்வொரு 68 கிலோ மீற்றருக்கிடையில் ஒரு பாடசாலை என்ற வகையில் இலங் கையின் 10, 963 (1996ல்) பாடசாலைகளும் கிராம நகர தோட்ட பிரதேசங்களுக் கிடையில் பரவிக் காணப்படுகின்றது. இவற்றில் 10, 312 அரச பாடசாலைகள் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் முழுநேரக் கல்விகற்கும் 4, 265, 076 (1996) மாணவர்கள் உள்ளனர். வருடாந்தம் 300, 000 மாணவர்கள் இந்த முறையினுள் சேர்ந்து கொள்கின்றனர். இரண்டு லட்சம் ஆசிரியர்களும் இங்கு பணியாற்று கின்றனர். மாணவர், ஆசிரியர் என்ற இரண்டு அணியினரின் அடிப்படையிலும் நோக்குமிடத்து ஏராளமான குடும்பங்களுடன் தொடர்புபட்டதாக பொதுக்கல்வி முறை விளங்குகின்றது. தாய்மொழிக்கல்வி, இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி என்ற கொள்கைகள் கல்வியை சனநாயகப்படுத்த உதவின. இதனடிப்படையில் அரசாங்க நிதிவளத்தை எல்லாத்துறையினரதும் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக் கும் ஒருவகையான சிறப்பான ஏற்பாடாகவும் இலங்கையின் பாடசாலை முறையை நோக்க வேண்டும்.

இந்த வகையில் பொதுக்கல்வித்திட்டமிடல் மிகவும் முக்கியத்துவமுடையது. கல்வியமைச்சின் திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டப் பிரிவு இதில் சிறப்பாக ஈடுபடு கின்றது. கல்வி அமைச்சின் மூலதன முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றுடன் தொடர்புபட்ட வகையிலேயே இத்திட்டமிடல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மாகாணமட்டத்தில் மாகாணக்கல்வி அமைச்சு அலுவலகம் திட்டமிடல் பணியில் ஈடுபடும்.

வலயமட்டத்திற்கான கல்வித்திட்டம் வலய கல்விப்பணிப்பாளரினால் மூன்று வருட காலத்திற்கான உருள் திட்டமிடலாக (Rolling Plan) தயாரிக்கப்பட்டிருந்தது.



தற்போது மாவட்டத்திற்கென செயலாளர் நியமிக்கப்பட்டிருப்பதால் இத் திட்டத்தை ஒருங்கிணைத்தல் மற்றும் வழிகாட்டல் பணிகளில் அவர் ஈடுபடு வார். இவ்வகைத் திட்டங்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் வருடாந்த அமுலாக்கத் திட்டத்திற்கு (Annual Implementation Plan) அது அடிப்படையாக விளங்கும்.

## திட்டமிடல் நிரல் ஒழுங்கு

இலங்கையின் கல்வித்திட்டமிடல் நிர்வாக பன்முகப்படுத்தலின் அடிப்படையில் ஐந்து மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

1. **தேசிய மட்டம்** - National Level

கல்வி அமைச்சர் தேசிய கல்வி நிறுவகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், பரீட்சைத் திணைக்களம் மற்றும் அவையொத்த சபைகள் என்பன தேசிய ரீதியாக மத்திய நிலையில் திட்டமிடலில் ஈடுபடுவன. கல்வி அமைச்சு இத் திட்டமிடற் பணியில் ஈடுபடும்.

2. **மாகாண மட்டம்** - Provincial Level

மாகாண அமைச்சும், மாகாணக்கல்வித் திணைக்களம் என்பன மாகாண மட்டத்தில் செயற்படுகின்றன. மாகாணக் கல்விப்பணிப்பாளர் திட்டமிடல் தொடர்பாக பின்வரும் கடமைகளை மேற்கொள்வார்.

அ. கோட்ட மட்ட திட்டங்களின் அடிப்படையில் மாகாண முதலீட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.

ஆ. கோட்ட மட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்ப மாகாண அபிவிருத் தித் திட்டத்தைத் தயாரித்தல்.

இ. மாகாண வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிப்பதற்கு மாகாணக்கல்விச் செயலாளருக்கு உதவுதல்.

ஈ. மாகாண வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டத்தைத் தயாரித்தல்.

உ. கல்வி மற்றும் பாடசாலைக்கட்டமைப்பு விடயங்களில் மாகாணக் கல்விச் செயலாளருக்கு உதவியளித்தல்.

ஊ. மாகாண பதவிநிலை ஒதுக்கீட்டு மட்டத்தைப் பேணுதலும் மனித வளத் தேவையைக் கணித்தலும்.

3. **வலய மட்டம்** - Zonal Level

வலயமட்டக் கல்விப்பணிப்பாளர் வலயதிட்டமிடல் தொடர்பாக பின்வரும் கடமைகளை மேற்கொள்வார்.

அ. மாகாணத் திட்டங்களினடிப்படையில் வலயமட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

ஆ. வலய மட்ட நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்தலும் நிறைவேற்றலும்.

இ. மாகாண முதலீட்டுத்திட்டம், அபிவிருத்தித் திட்டம், வருடாந்த நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றைத் தயாரிப்பதற்கு மாகாணக்கல்விப் பணிப்பாளருக்கு உதவுதல்.

ஈ. கோட்டமட்ட முதலீட்டுத்திட்டம், அபிவிருத்தித்திட்டம், வருடாந்த நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றைத் தயாரிப்பதற்கு கோட்டமட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளருக்கு உதவியும் ஆலோசனையும் வழங்குதல்.

உ. காலாண்டு அறிக்கைகள் மற்றும் வருடாந்த நிர்வாக அறிக்கை என்பவற்றைத் தயாரிப்பதற்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு உதவுதல்.

### 4. **கோட்ட மட்டம்** - Zonal Level

பெருமளவுக்கு பிரதேச சபை மட்டத்தில் காணப்படும் கல்வி நிர்வாகப்பிரிவு இதுவாகும். கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் பின்வரும் கடமைகளை மேற்கொள்வார்.

அ. பாடசாலைகளின் உட்கட்டமைப்புத் தேவைகளைத் தீர்மானித்தல்.

ஆ. பாடசாலைகளின் தளபாட மற்றும் உபகரணத் தேவைகளைத் தீர்மானித்தல்.

இ. கோட்டமட்ட முதலீட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.

ஈ. கோட்டமட்ட அபிவிருத்தித்திட்டத்தைத் தயாரித்தல்.

உ. வருடாந்த நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தலும் நிறைவேற்றலும்.

ஊ. பாடசாலைக்கட்டமைப்பு விடயங்களில் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு முன்மொழிவுகளை வழங்குதல்.

எ. பாடசாலைப் பதவிநிலை ஒதுக்கீட்டு மட்டத்தைப் பேணுதலும் ஆசிரியர் தேவைகளைக் கணித்தலும்.

ஏ. நிதித்திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவுத்திட்டம் என்பவற்றைத் தயாரித்தல்.

### 5. **பாடசாலை மட்டம்** - School Level

பாடசாலைக்கான வருடாந்த திட்டம் கோட்டமட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளரின் ஒப்புதலுக்குரியதாக பாடசாலை அதிபரினால் தயாரிக்கப்படும். பாடசாலையின் அளவுக்கேற்பவும் வளங்களுக்கு ஏற்பவும் இத்திட்டமிடல் அமையும். நுண்பாக திட்டமிடலாக பாடசாலைத் தலைவரான அதிபரினால் இது தயாரிக்கப்படும்.



## உயர்கல்விக்கான திட்டமிடல்

உயர்கல்வி அமைச்சர் உயர்கல்வி தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பொறுப்புடையவராக உள்ளபோதிலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தன்னாதிக்கமுள்ள சபையாக உயர்கல்வி விடயங்களில் ஈடுபடுகிறது. மானிய ஆணைக்குழு பல்கலைக்கழகம் தொடர்பாக ஆலோசனை, வழிகாட்டல், கட்டுப்பாடு என்பவற்றை மேற்கொள்ளும் அதிகாரம் பெற்றது. சுயமாக முடிவுகளை மேற்கொள்ள அதற்கு அதிகாரமுண்டு. உயர்கல்வி அமைச்சின் செயலாளர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப் பட்டிருந்தார்.

பல்கலைக்கழக அபிவிருத்திக்கென கூட்டுத்திட்டங்களைத் (Corporate Plans) தயாரித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. உயர் கல்வியின் தரத்தை மேலுயர்த்துவதற்கான வழிமுறைகளில் இத்திட்டம் கவனம் செலுத்தும். உயர்கல்விக்குத் திட்டமிடுதற்கென அமைச்சு மட்டத்தில் தனியான பிரிவு எதுவுமில்லை.

உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களும் உயர்கல்வி அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றன. தொழில்நுட்பக்கல்லூரிகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் உயர் தொழில்சார்ந்த நுட்பக்கல்விக்கற்கை நெறிகள் இலங்கை உயர்தொழில்நுட்பக்கல்வி நிறுவனங்களிடம் (1998 இலிருந்து) விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விடயங்களில் ஆலோசனை வழங்குவதற்கென தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்விக்கான குழு (TEVEL) ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் கல்விக் கொள்கைகள் வடிவமைப்பது தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக 1991இல் உருவாக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவினால் இக்குழு உருவாக்கப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. தொழில்நுட்ப, உயர்கல்வி தொடர்பான ஆலோசனைகளை திட்டமிடலின் போது இக்குழுவினர் வழங்குவர்.

## கல்வித்திட்டமிடல் வளர்ச்சி

Development of Education Planning

இலங்கையின் கல்வித்திட்டமிடலுக்கென நிரந்தரமானதும் வகை சொல்லக் கூடியதுமான மத்திய அமைப்பு எதுவும் இருக்கவில்லை. அரசாங்க மாற்றங்களுக்கு அமைவாக சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படும் போது அதன்படியான நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தும் போக்கே காணப்பட்டுள்ளது.

இலங்கையின் கல்வித் திட்டமிடல் தேசிய பொருளாதாரத் திட்டமிடலுடன் இணைந்ததாகவும் அதன் இலக்குகளுடன் தொடர்புபட்டதாகவுமே இருந்து வந்துள்ளது. சுதந்திரத்திற்கு முன்பே பொருளாதார திட்டமிடல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 1957இல் தேசியதிட்டமிடல் ஆணைக்குழு உருவாக்கப்பட்ட பின்பே சமூக தேவைகளுடன் இணைக்கும் வகையிலான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையின் ஒழுங்கான முக்கியமான திட்டமாக கருதப்பட்டது 195968 காலப்பகுதிக்குரியதாக தயாரிக்கப்பட்ட பத்தாண்டுத் திட்டமாகும். தேசிய திட்டமிடல் ஆணைக்குழுவின் முதலாவது திட்டமாக இது அமைந்தது. பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் பிரதான கருவி கல்வி என்பதை இத் திட்டமிடல் ஏற்றுக்கொண்டது. நாட்டு மக்களின் திறன்களையும், தொழில்நுட்ப தராதரத்தையும் மாத்திரம் கல்வி முன்னேற்றவில்லை. சமூக நிறுவனங்களைத் திருத்தியமைப்பதிலும், அபிவிருத்திக்குச் சார்பான வளப்பாங்குகளை விருத்தி செய்வதிலும் கல்வி முக்கியபங்குவகிப்பதை இத்திட்டம் கருத்திற் கொண்டிருந்தது. ஆனால் இத்திட்டம் பிரதமரின் திடீர் மறைவுடன் கைவிடப்பட்டுவிட்டது.

இதன்பின் குறுங்கால அமுலாக்க நிகழ்ச்சித்திட்டம் ஒன்று 196164 காலப் பகுதிக்குரியதாக கொண்டுவரப்பட்டது. திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் என்பதில் அதிக கவனம் செலுத்திய இத்திட்டம் மனிதவலுத் தேவையை மதிப்பீடு செய்தல் அதற்கான நிறுவனங்களை உருவாக்குதல் என்பன தொடர்பாக கல்வியிலும் அக்கறை செலுத்தி இருந்தது.

இலங்கையில் 1965 காலப்பகுதிக்கு முன்னராக நான்கு திட்ட ஆவணங்கள் சில முடிவுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் 1965இல் நாட்டின் பிரதம மந்திரியின் கீழ் செயற்படக்கூடியதாக பொருளாதார திட்டமிடும் அமைச்சு உருவாக்கப்பட்டதன் பின்புதான் ஒழுங்கான திட்டங்கள் ஏற்பட்டன. திட்டமிடும் அமைச்சு சமூக செலவுகள் பற்றியும் கவனம் செலுத்திய போது கல்வி தொடர்பான செயற்திட்டங்களிலும் ஆர்வம் காட்டப்பட்டிருந்தது.

1970இல் தொழில்வாய்ப்பு, திட்டமிடல் அமைச்சு உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து 1971ல் ஏற்பட்ட இளைஞர் அமைதியின்மையின் விளைவுகளை மதிப்பீடு செய்யும் வகையில் உலக தொழிலாளர் நிறுவன தூதுக்குழுவின் அறிக்கை அமைந்தது. டட்லி சீயர் தலைமையில் இலங்கை வந்து மதிப்பீடு செய்த குழுவினர் தம் அறிக்கையில் இளைஞர் தொழிலின்மை இலங்கையின் கல்வி முறையின் பொருத்தக்கேடான தன்மைகளுடன் நெருக்கமான தொடர்பு பட்டிருப்பதாக விளங்கினர். இது இலங்கையின் கல்விச் சீர்திருத்தத்திற்கும், புதிய திட்டமிடற் தேவைக்கும் அதிக அழுத்தத்தையும் புதிய கண்ணோட்டத்தையும் வழங்கியிருந்தது. இத்தகைய பின்னணியில் தான் ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப் பட்டது.

19721976 காலப்பகுதிக்குரியதாக ஐந்தாண்டுத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. நாட்டின் எரியும் பொருளாதாரப் பிரச்சினைகளாக அதிகரித்துச் செல்லும் தொழிலின்மை, மோசமடைந்து செல்லும் அந்நியச் செலாவணி நெருக்கடி என்பன இனம் காணப்பட்டன. இவ்விரு பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண உதவும் துறையாக கல்வித்துறை கவனத்திற் கொள்ளப்பட்டது. தொழில் வாய்ப்புப் பற்றிய மனப்பாங்குமாற்றம், தொழிற்திறன் விருத்தி, சுயதொழில் ஊக்கம் என்பவற்றை



விருத்தி செய்யக்கூடியதாக கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்ற கருத்து மேலோங்கியிருந்தது. இதனடிப்படையில் "புதிய பாதை" என்ற பெயரில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கையின் பொதுக்கல்வியின் நோக்கத்தையும் போக்கையும் குறிப்பிடத்தக்களவில் இச்சீர்திருத்தங்கள் மாற்றியமைத்திருந்தன. தொழிலின்மை கற்றோர் மட்டத்தில் அதிகரித்த போது விரக்தி, பயம், கையறுநிலை என்பன கற்றோரிடையே அதிகரித்தன. அவற்றை அகற்றும் வகையில் கல்வித்திட்டமிடலில் மனிதவலுத் திட்டமிடல் அணுகுமுறை கையாளப்பட்டது. பொருளாதார உற்பத்தித்திறனுக்கு பங்களிப்புச் செய்யும் முதலீடாகவே கல்விச் செலவு நோக்கப்படல் வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாட்டின் அபிவிருத்தித் தேவைகளுக்குப் பொருத்தமானதாக பிரயோக ஆய்வுகளை விரிவாக்கும் வகையில் உயர்கல்வி பன்முகப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தும் முக்கியத்துவம் பெற்றது. மூளைசாலிகளின் வெளியேற்றமும் கடந்தகால கல்வித்திட்டமிடலின் தோல்வியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 1974 இல் உருவாக்கப்பட்ட திட்ட அமுலாக்க அமைச்சும் உருவாக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் என்பவற்றைத் தயாரிப்பதில் உள்ள தடைகளை அகற்றுவதில் இது மிகவும் கூடியளவு கவனம் செலுத்தப்பட்டது.

1977ல் இலங்கையின் தாராளப் பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப் பட்டதுடன், பல சடுதியான மாற்றங்கள் ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து நிதித்திட்டமிடல் அமைச்சும் உருவாக்கப்பட்டிருந்தது. திட்டமிடல், நிதி, பாதீடு தயாரித்தல் என்பன ஒரே அமைச்சின் கீழ் வந்ததால் வினைத்திறன் அதிகரித்தது.

இக்காலப்பகுதியில் இயங்கியல் பண்புடையதாக உருள் திட்டம் (Rolling Plan) அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுத்துறை முதலீடு, தனியார்துறை செயற்பாடு என்பன பற்றிக் கவனம் செலுத்துவதாக பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்ட போது கல்வி போன்ற சமூகத்துறைகள் மீதும் கூடுதலாக கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதாரத்துறைகளின் சிறப்பான செயலாற்றத்திற்காக பல துறைசார் அமைச்சுக்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. ஆனால் அத்தகைய முயற்சிகள் கல்வித்துறை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அரசாங்கம் கல்வியின் முதல் நிலைச் செலவுகளைப் பொறுப்பேற்ற போதிலும் செலவு பயன் அணுகுமுறையை வலியுறுத்தியே வந்தது. செலவுகளைத் தாங்கிக் கொள்ளக் கூடியவர்களிடம் அவர்களது கல்விச் செலவைப் பொறுப்பேற்குமாறு விட்டுவிட வேண்டும் என்றும் கருதப்பட்டது. இதனடிப்படையில் அனுமதிக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. தனியார் மருத்துவக் கல்வியை தொடங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

1981 காலப்பகுதியில் கல்வியமைச்சும் ஒரு தொகுதிச் சீர்திருத்தங்களை உருவாக்கி பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், பாதீடு என்பவற்றினூடாக

வளங்களை ஒதுக்கீடு செய்து அவற்றை நிறைவேற்ற வேண்டுமென விரும்பியது. இதில் கல்வி நிர்வாகம் தொடர்பாக பல புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டன. கொத்தணிமுறையை ஏற்படுத்தி பற்றாக்குறையான நிதி மற்றும் மனித வளங்களில் சிக்கனங்களை ஏற்படுத்த விரும்பப்பட்டது.

அதிகரித்துச் செல்லும் உயர்கல்விக்கான சமூகத் தேவையைக் கவனத்திற் கொண்டு உயர்கல்வியின் தராதரத்தை மேம்படுத்துவது தொடர்பாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு கவனம் செலுத்தியது. இதே காலப்பகுதியில் அறிஞர்கள், ஆய்வாளர் தொழில்நுட்ப நிபுணர்கள் கொண்ட விஷேட (Special Task Force) செயலணி ஒன்றும் உருவாக்கப்பட்டது. இச்செயலணி தேசிய ரீதியிலான விஞ்ஞான, தொழில்நுட்ப கொள்கையை உருவாக்கியிருந்தது.

1981 இலிருந்து மாவட்ட அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டபோது மாவட்டத்துக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள், மாவட்ட வரவு செலவுத் திட்டங்கள் என்பன தயாரிக்கப்பட்டன. இதில் மாவட்ட கல்வி அபிவிருத்தி மீதும் கவனம் செலுத்தப்பட்டது.

1991 இல் பொதுக்கல்வி தொடர்பாக கொள்கை வகுப்பதில் ஆலோசனை கூறுவதற்கு தேசிய கல்வி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. தொழில் நுட்பக்கல்வி தொடர்பான மதியுரைகளை வழங்குவதற்கு தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. உயர்கல்விக்கான திட்டமிடல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கூட்டுத்திட்டத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



# அத்தியாயம் 6

## மக்கள் திட்டம்
## கிராமியமட்ட கல்வித்திட்டமிடல்

People's Plan
Education Planning for Rural Level

கிராமிய மக்களின் கல்வி மட்டத்தை உயர்த்துவதற்கு மரபு ரீதியாக பின்பற்றப்பட்டு வந்த மேலிருந்து கீழான அணுகுமுறை (Top Down Approach) வெற்றியளிக்காமையினால் அதற்குப் பதிலாக மக்கள் பகுப்புத்திட்டமிடல் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இது கீழிருந்து மேல் நோக்கிய அணுகுமுறையை (Bottom up approach) வலியுறுத்துகின்றது. சாதாரண கிராமிய மக்களுக்கு உள்ளூர் மட்டத்திலான சிறிய நிறுவனங்கள் மூலமாக அதிகாரம் வழங்கி அவர்களது வாழ்வின் எல்லா நிலைகளிலும் அவர்களது செயற்பாட்டை விரைவுபடுத்தி பயனுறுதித்தன்மையை அதிகரிக்கச் செய்வதே இத்திட்டமிடலாகும். இது மக்கள் திட்டம் (People's plan) என்று சிறப்பித்து அழைக்கப்படுகிறது.

### கேரள அனுபவம்

கல்வியை பரவலாக்குதல் கல்வியின் தரத்தை உயர்த்துதல் என்ற இலக்குகளுடன் கிராமிய மட்டத்தில் மக்கள் பங்களிப்புடன் திட்டமிடுதலில் வெற்றிபெற்ற பிரதேசமாக கேரள மாநிலம் விளங்குகிறது.

உலக வங்கி அதன் செயற்பாட்டின் வெற்றியை மதிப்பிட்டு பாராட்டியுள்ளதோடு மற்றைய நாடுகளுக்கும் முன்மாதிரியாக அமைவதெனக் குறிப்பிடுகின்றது.

இந்தியாவில் பல அடிப்படைகளில் சிறப்புப் பெற்றதாக இந்த மாநிலம் விளங்கி வருகிறது. இங்கு ஆண்களின் ஆயுள் நீட்சி 69 ஆகவும் பெண்களின் ஆயுள் நீட்சி 74 ஆகவும் காணப்படுகின்றது. இது இந்தியாவின் சராசரி ஆயுள் நீட்சியைவிட ஆண்களைப் பொறுத்து 10 வருடங்களாலும் பெண்களைப் பொறுத்து 15 வருடங்களினாலும் உயர்வானது. இந்தியாவின் சராசரி வருடாந்த வளர்ச்சி வீதம்

3.8%மாகக் காணப்படும்போது கேரள மாநிலத்தின் பொருளாதார வருடாந்த வளர்ச்சி வீதம் 6.2 வீதமாக (1987 1992) காணப்பட்டது. இங்கு 104 பெண்களுக்கு 100 ஆண்கள் என்ற வகையில் ஆண் பெண் விகிதாசாரம் அமைகின்றது.

1819 இல் திருவாங்கூர் ஆட்சியாளர் கல்விக்கான செலவு முழுவதையும் தாமே ஏற்றுக்கொள்வதாக அறிவித்திருந்தனர். இதன் தொடர்ச்சியாக 1991 அளவில் அனைவருமே எழுத்தறிவு பெற்றிருந்தனர். கடுமையான சாதிய முறைகள் காணப்பட்ட போதிலும் பெண் கல்விக்கெதிராக ஒழுங்குபடுத்தப்பட்ட சமூக எதிர்ப்பியக்கம் எதுவும் காணப்படவில்லை. இதன் காரணமாக பெண் கல்வியும் உயர்ந்துள்ளது.

இந்த மாநிலத்தில் 1996ல் பரீச்சார்த்த முயற்சியாக தொடங்கப்பட்ட மக்கள் பங்களிப்புத் திட்டமிடல் இப்போது இம்மாநில மக்களின் வாழ்வு முன்னேற்றச் செயன்முறையின் பிரிக்கமுடியாத பொறிமுறையாகி வருகின்றது. கேரளத்தில் 90 கிராமிய பஞ்சாயத்துக்கள் 152 தொகுதிப் பஞ்சாயத்துக்கள் 14 மாவட்டப் பஞ்சாயத்துக்கள் 55 மாநகரசபைப் பகுதிகள் மூன்று கோப்பரேசன் பிரதேசங்கள் ஆகியவற்றில் பல்வேறு பொருளாதார மற்றும் சமூக துறைகளின் முன்னேற்றத்திற்காக இவ்வகைத்திட்டமிடல் கடந்த மூன்று வருட காலமாக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. கல்விச் செயற்திட்டங்களிலும் இது குறிப்பிடத்தக்களவு வெற்றி பெற்றுள்ளது. இக்கேரள மாநில நடைமுறை அனுபவங்கள், செயலாற்றம் என்பவற்றிலிருந்தே மக்கள் பங்களிப்புத் திட்டமிடல் கோட்பாடு வடிவமைக்கப்பட்டு செம்மைப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. வளர்முக நாடுகளுக்கான முன் மாதிரியாகவே இது விளங்குகின்றது. கேரளாவின் மூன்று மில்லியன் மக்கள் அனுபவங்களின் வழியாக மக்களின் பங்களிப்புத் திட்டமிடலின் அடிப்படைகளை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

## மக்கள் பங்களிப்புத் திட்டமிடல்

People's Participation Planning

திட்டமிடல் செய்முறையைப் பன்முகப்படுத்தும் உபாயத்தின் கீழ் குறுங்காலத்தில் மக்களுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கும் அவர்கள் கல்வித்திட்டமிடல் தொடர்பான எல்லாப் படிநிலைகளிலும் ஊக்கத்துடனும் சுயவிருப்பத்திடனும் செயற்படுதற்கும் இத்திட்டமிடல் வழிவகுக்கிறது.

இவ்வகைத்திட்டமிடல் பற்றி தெளிவாக விளங்கிக்கொள்வதற்கு பின்வரும் அம்சங்கள் விளக்கப்படுகின்றன.

## திட்டம் தயாரித்தல்

மக்கள் பங்களிப்புத்திட்டமிடல் தயாரித்தற் செய்முறை பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்.



1. செயற்திட்ட அதிகாரிகள் செயற்திட்ட எண்ணக்கரு மற்றும் நோக்கங்கள் பற்றி மக்களுக்கு பிரச்சார மூலம் விளக்குவதற்கு முயற்சி செய்வார். இதற்காக கூட்டங்கள் கூட்டப்படும். மக்கள் முழுமையாக இத்தகைய கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு வசதியாக கிராம சபைகள் மற்றும் உள்ளூர்ச் சபைகள், நிகழ்ச்சித் திட்டம் பற்றி மக்களுக்கு விளக்குவதற்கு விடுமுறை நாட்களில் கூட்டப்படும். தொண்டர்கள் மக்களின் வீடுகளுக்குச் சென்றும் விளக்கமளிப்பர். தொடக்க நிலையிலான கூட்டங்கள் பொதுமக்களின் அமைப்புக்களினால் கூட்டப்படும். வெகுசன சாதனங்கள் மூலம் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படும்.

2. செயற்திட்டங்களில் மக்கள் நேரடியாக நன்மை பெறுவது பற்றி உணர்த்தப்படும். அவர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்கு குழுமட்டத்திலான கலந்துரையாடல் ஊக்குவிக்கப்படும். அவ்வாறான குழுக்களின் சராசரியாக 2550 பேர் வரை இடம் பெறுவர். இத்தகைய குழுமட்டத்தில் கலந்துரையாடுவதற்கு உதவி வழங்குவதற்கென வள ஆளணியினர் பயிற்றப்படுவர்.

3. ஒவ்வொரு உள்ளூர் கிராமிய மட்ட நிர்வாக சபைக்கும் திட்ட விபரங்கள் மிக எளிய மொழியில் அச்சிடப்பட்டு ஆவணமாக, உரிய காலத்தில் வழங்கப்படும். மாகாண திட்டமிடும் சபை கவனமாக இதனை வழங்கும்.

4. செயற்திட்டங்களுக்கு ஏற்றதாக கிராமிய மட்டத்தில் முகாமைத்துவ சபைகள் (Management Societies) ஏற்படுத்தப்படும். இச்சபைகளில் பயனாளிகளான பல்வேறு சமூகப் பிரிவினரும் இடம் பெறுவர். பெண்கள், ஏழைகள், இளைஞர், விவசாயிகள் சமூகரீதியில் பின்தங்கியோர் போன்ற பலரும் இடம்பெறுவது உறுதிப்படுத்தப்படும். இவ்வாறு பல்திறத்தினரும் பங்குகொள்ளாவிடின் இத்தகைய கல்விச் செயற்திட்டத்திற்கென முதலீடு செய்யப்படும் பணம், நேரம், ஊழியம், பணமல்லாத வளங்கள் போன்ற அனைத்தும் விரயமாகி விடும்.

5. மக்கள் பலரும் பல பிரிவினரும் விருப்பத்துடன் பங்கேற்பதும், மனம் திறந்து தம் கருத்துக்களை வெளியிடுவதும் இயன்றளவு அதிகமாக ஊக்குவிக்கப்படும். இதனை விருத்தி செய்யும் வகையில் கிராமிய மட்டசபைகள், கருத்தரங்குகள், ஆய்வுகள், செயலமர்வுகள் போன்றவற்றை அடிக்கடி நடாத்துமாறு ஊக்குவிக்கப்படும்.

6. அரசாங்க சார்பில் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முகவரின் பிரதிநிதிகள் கிராமிய சபை மட்டத்திலான எல்லாக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு உதவுவர்.

இத்தகைய அடிப்படையிலேயே கிராமிய மட்ட திட்டங்கள் தயாரிக்கப்படும்.

## திட்டம் நடைமுறைப்படுத்துதல்

பயனாளிகளான மக்கள் பங்களிப்புச் செய்யும் வகையில் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். செயற்திட்டத்தின் தன்மையைப் பொறுத்து வெவ்வேறு மட்டங்களில் மக்கள் நடைமுறைப்படுத்தும் பணிகளில் ஈடுபட முடியும்.

நடைமுறைப்படுத்தப்படும் பணிகளினால் தாம் நேரடியாகவே பயன்கள்பெற முடியும் என மக்கள் உணரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டால் தான் பூரணமாக பங்களிப்புச் செய்வர். அல்லது மக்கள் "தொழிலாளர்" என்ற நிலையில் மாத்திரமே கலந்து கொள்வர்.

நடைமுறைப்படுத்துதல் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படும் கூட்டங்களில் மக்கள் கலந்து கொள்வதோடு, கல்வி செயற்திட்டங்கள் தொடர்பான குறிக்கோள் கள், இலக்குக் குழுவினர், தகவல், முறைமையியல், மதிப்பீடு போன்ற பல நடவடிக்கைகள் பற்றிய முடிவுகள் மேற்கொள்ளும் நிலையிலும் மக்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் கலந்துகொள்ள வேண்டும். மேற்பார்வைப் பணிகளிலும் மக்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களும் போதியளவில் ஏற்படுத்தப்படல் வேண்டும். செலவுகளைப் பகிர்ந்து கொள்வதிலும் சில கட்டங்களில் அவர் களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டால் அவர்களின் பொறுப்புணர்வு அதிகரிக்கும்.

கிராம சபைகள் மக்களின் பணிகள் தொடர்பாக கிரமமாக தகவல்கள் திரட்டி அதனடிப்படையில் மக்களின் நடத்தைகளையும் மாற்றியமைத்தல் அவசியம்.

கிராமசபைகள் தவறு ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைத் தடை செய்யும் சட்டங்கள் மற்றும் விதிகளை ஆக்கிக்கொள்வதற்கு இடமளிக்கப்படும்.

தேவையான பணிகள் தொடர்பாக மக்களுக்கு பயிற்சியளிப்பதில் கிராம சபைகள் தேவையான செயற்திட்ட அதிகாரிகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும்.

## தடைகள்

(Hurdles)

கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை சாதாரண மக்களான கிராமிய மக்கள் மட்டத்தில் பல நிலைகளிலும் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக சில உளவியற் தடைகளும், நடைமுறைப் பிரச்சினைகளும் காணப்படுகின்றன. பின்வருவன முக்கியமான தடைகளாகும்.

1. திட்டமிடும்போது முடிவுகளை மேற்கொள்வது தொடர்பான செயன் முறையில் யார் முக்கியமான பங்கேற்பது என்ற பிரச்சினையுண்டு. அபிவிருத்திப் பணியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களுக்கா அல்லது உள்ளூர் மக்களின் பிரதிநிதிக்கா முதன்மையான உரிமை வழங்கப்பட வேண்டும் என்பது பிரச்சினையாகும்.



2. மக்கள் தமது சொந்த நடத்தைகளை மாற்றாது அவ்வாறு மாற்றுவது பற்றிய முடிவுகளைத் தாமாக மேற்கொள்ளாது அரச செயற்திட்ட முகவர்களின் சேவையை எதிர்பார்க்கும் நிலைமை காணப்படுகிறது. இது முரண்பாடான நிலைமையாகக் காணப்படுகின்றது.
3. பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் ஒவ்வொரு சிறிய குழுவினரும் அடிக்கடி கேள்விகள் கேட்கும்போது செயற்திட்ட அலுவலர் அவர்களை வழிப்படுத்துவதில் மிகவும் அதிக பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும்.
4. செயற்திட்டத்தில் பங்கேற்கும் மக்கள் அல்லது பயனாளிகளுக்கு சிலவகைப் பணிகளில் போதியளவு பயிற்சி அவசியமாகின்றது. ஆனால் அத்தகைய பயிற்சியை எந்த நிலையில், எந்த வகையில் ஒழுங்குபடுத்துவதென்ற பிரச்சினையும் உண்டு.
5. முடிவுகளை மேற்கொள்வது தொடர்பாக செயற்திட்ட அலுவலர் மக்களிட மிருந்து பயனுள்ள கருத்துக்களையும், பங்களிப்பையும் எதிர்பார்ப்பதுண்டு. நீண்டகால அனுபவத்தின் பின் அவர்களின் பங்களிப்பு நிச்சயமாக சிறப்பான தாக இருக்குமெனினும் குறுங்காலத்தில் முடிவுகள் மேற்கொள்வது தொடர் பாக அவர்களை பங்கேற்கச் செய்வது மிகவும் சிரமமானதாக உணரப் பட்டுள்ளது.

## அடிப்படை கோட்பாடுகள்

கல்விச் செயற்திட்டங்களை வினைத்திறனுடனும், பயனுறுதிமிக்கதாகவும் பயன்படுத்துவதற்கு இந்த "மக்கள் திட்டம்" என்ற பன்முகப்படுத்தல் பொறிமுறை மிகவும் பொருத்தமானதாக அமைந்தது. இது அடிப்படையில் எட்டு தூண்களின் மேல் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அவை,

1. **தன்னாதிக்கம்** - Autonomy

   தொழிற்பாடு, நிதி, நிர்வாகம் ஆகியவற்றில் சுயாதீனமாக தொழிற்படுதல்.

2. **துணையமைப்புகள்** - Subsidiary

   ஒவ்வொரு பணியும் அதற்கு உரிய மட்டத்திலேயே செயற்படும். எல்லா வற்றையும் உயர்நிலை அமைப்புச் செய்ய வேண்டியதில்லை. கீழ் மட்டத்தி லேயே பல பணிகளை சிறப்பாக செய்யமுடியும். அது இயலாத நிலையில் மட்டுமே உயர் அமைப்பிடம் கையளிக்கப்படும்.

3. **பங்களிப்பு பற்றிய வரையறை** - Role Clarity

   ஒவ்வொருவருக்குமான பங்கு தெளிவாக தீர்மானம் செய்யப்பட்டிருத்தல்.

4. **இணைந்து செல்லும் தன்மை** - Couple Mentarity

   பல்வேறு வகைத் தொழிற்பாடுகளையும் மேற்கொள்ளும் போது இரட்டிப்பு ஏற்படாது தவிர்த்துக் கொள்ளுதல். அதாவது ஒருவர் செய்தவற்றையே மற்றவரும் செய்வதைத் தவிர்த்தல்.

5. **சட்டங்கள், விதிகள் தொடர்பாக சீரான தன்மை**

Uniformity of Norms and rules

கையாளப்படும் நிபந்தனைகள், முறைகள், விதிகள் தொடர்பாக பேதங்கள் முரண்பாடுகள் இல்லாதவாறு பார்த்துக்கொள்வதும் அதனை உறுதி செய்வதும்.

6. **இயன்றளவு கூடுதலான மக்களின் பங்கேற்பு**

Maximum direct participation of people

கல்விசார் செயற்திட்டப் பணிகளில் நேரடியாக மக்கள் பங்கு கொள்வ தற்கான வாய்ப்புக்களை இயன்றளவு அதிகரித்தல். இது மிகவும் கவனமாக தீர்மானிக் கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

7. **வகை கூறல்** - Accountability

கல்விச் செயற்திட்டம் தொடர்பான எல்லா அம்சங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக பொறுப்புணர்வுடன் வகை சொல்லப்படும். செயலாற்றம் தொடர்பாக தொடர்ச்சியாகவே சமூகமட்டத்தில் கணக்குப் பரிசோதனை மேற்கொள்ளப்படும். அவ்வாறான பரிசோதனைக்கு கொள்கையளவிலும் நடைமுறையிலும் பூரண ஆதரவு வழங்கப்படும்.

8. **தகவல் தொடர்பாக வெளிப்படையாக இருத்தல்.**

Transparency through right to information

கல்விச் செயற்திட்ட தயாரிப்பு, நடைமுறைப்படுத்தல், மதிப்பீடு போன்ற எல்லாக்கட்டங்கள் தொடர்பான தகவல்களில் எவ்வித ஒளிவுமறைவும் அனுமதிக்கப்படமாட்டாது. பதிலாக மிகவும் வெளிப்படையாக எல்லா விபரங்களும் பகிரங்கப்படுத்தப்படும்.

இத்தகைய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பன்முகப்படுத்தும் இச்செய்முறை உபாயமானது உள்ளூர் மட்டத்தில் கிராமிய மட்டத்தில் செயற்படும் நிர்வாக அமைப்புக்கு தமது தேவைகளின் அடிப்படையில் முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதற்கு பூரண சுதந்திரம் வழங்குவது மிக சிறப்பான அம்சமாகும்.

## அகல்விரிவுப் பிரதேசத்திட்டம்

Comprehensive Area Plan - CAP

ஒவ்வொரு உள்ளூர் அமைப்பும் தனக்குரிய எல்லாவற்றையும் உள்ளடக்கியதான பிரதேசத்திட்டம் (CAP) ஒன்றை சிறப்பாகத் தயாரிப்பதன் மூலம் நேரடியாக உதவி நன்கொடையைப் பெறமுடியும். அபிவிருத்திக்கான உள்ளூர் மட்டத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட திட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பிணைக்கப்படாத உதவிகள் வழங்கப்படும்.



தற்போது இத்தகைய திட்டங்களுக்கென கடன்கள், தன்னார்வ ஊழியம், கொடைகள் என்ற பல வடிவங்களில் மேலதிக வளங்கள் வழங்கப்படுகின்றன. இந்தியாவில் கேரள மாநிலத்தில் மாத்திரமே பஞ்சாயத்துக்களும், மாநகர சபை களும் எல்லாவற்றையும் உள்ளடக்குகின்ற பிரதேசத் திட்டத்தை தயாரித்து வருகின்றன.

## மக்கள் பங்கேற்பு

People's Participation

மக்கள் திட்டம் என்பது திட்டத்தின் எல்லாப்படிநிலைகளிலும் எல்லாப் பணி நிலைகளிலும் மக்கள் நேரடியாகவே முழுமையான ஊக்கத்துடன் ஈடுபடுதல் ஆகும். திட்டங்கள் மைய நிலைப்படுத்தப்படல் பயனற்றது; அவை இயன்றளவு மிகவும் கூடுதலான மக்கள் பங்களிப்பை தூண்டுவதாயமைதல் அவசியம். மக்கள் பங்கேற்பது என்பது மக்கள் தமக்கென பிரதிநிதிகளை தெரிவு செய்வதல்ல.

சாதாரண மக்கள் ஒரு ஒழுங்கான கால இடைவெளியில் கிரமமான முறையில் கிராம சபைகளில் ஒன்று கூடும் போதுதான் மக்கள் பங்கேற்புக்கு வாய்ப்பு உண்டா கும். அலுவலர் அல்லாத சாதாரண மக்கள், தொண்டர் போன்றோர் அறிக்கை களைத் தயாரிக்க வேண்டும்; செயற்திட்டங்களை வடிவமைக்க வேண்டும்; உள்ளூர்மட்ட திட்டங்களை வரைதல் வேண்டும். அத்தகைய சூழ்நிலையில் தான் மக்கள் பங்களிப்பு ஏற்படமுடியும்.

மக்களின் அபிவிருத்தியை உண்மையாகவே உருவாக்க வேண்டுமாயின் உத்தியோகத்தர்கள் எவ்வாறு சாதாரண மக்களின் உதவியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதைக் கேரள அனுபவம் வெளிப்படுத்தியுள்ளது. இதற்கு உத்தியோகத்தர்களின் மனமாற்றம் தேவை. அரசியல் ரீதியான விருப்பங்கள் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சார்பானதாக மாற்றமடைய வேண்டும். இந்தியாவில் மேற்கு வங்காளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களும் பன்முகப்படுத்தப்பட்ட திட்டமிடலின் கீழ் உள்ளூர்மட்ட சுதந்திரமான அரசுநிறுவனங்களை ஒன்றி ணைக்க முதலில் முயன்றன. ஆனால் மரபுவழி படிநிலை அதிகார அணியினர் மாற்றங்களை ஏற்க விரும்பவில்லை. இதன் காரணமாக அங்கு வெற்றியளிக்க வில்லை.

## ஒளிவு மறைவற்ற தன்மையை உறுதிப்படுத்தல்

(Ensuring Transparency)

பன்முகப்படுத்தல் செயற்பாடு ஊழல்களையும் மேலிருந்து கீழ் நோக்கி கசிய விடுவதாக அமைதல் கூடாது. இதற்கு சிறந்த வழி ஒளிவு மறைவற்ற தன்மையை உறுதிப்படுத்துவதாகும். செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகள், கூட்ட விபரங் கள் போன்ற எல்லாம் எளிய மொழியில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும். கேரளாவில் இளைப்பாறிய சிரேஷ்ட அலுவலர்கள் 4000 பேர் வரை 14 மாவட்டங்களிலும் திட்ட தயாரிப்புப்பணிகளில் ஈடுபட்டிருந்தனர். எந்தவொரு

கிராமிய மட்டத்திலும் நிபுணத்துவமும் அனுபவமும் பெற்ற பொறியியலாளர், கணக்காளர் போன்றோர் இளைப்பாறிய பின் இத்தகைய திட்டப்பணிகளில் ஈடுபடுவதற்கு ஊக்கமளிக்கப்படல் அவசியம்.

ஒளிவுமறைவற்ற தன்மையை செயற்திட்டங்களில் உறுதிப்படுத்தும்போது மக்கள் நேர்மையாக இயங்குவதற்கு முன்வர வாய்ப்புக்கள் ஏற்படும். மக்களது நடத்தையிலும் கண்ணோட்டத்திலும் புதிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும். நீண்ட காலத்தில் கல்வியின் பயன்கள் குறுங்காலத்தில் வெளிப்படுதற்குரிய சூழலை இது ஏற்படுத்தும். மக்களின் இப்புதிய விழுமிய மாற்றங்கள் படிப்படியாக நிறுவனமயப்படுத்தப்பட்டுவிடும்.

கேரள மாநிலத்தில் ஆரம்பக்கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், கல்லூரி மட்டத்திலான உயர்கல்வியைத் தூண்டுதல் போன்ற நோக்கங்களோடு மக்கள் பங்களிப்புத்திட்டமிடல் ஏற்பட்டது.

இலங்கையில் கிராமிய மட்டத்தில் பாடசாலையில் சேரும் மாணவர் தொகையை அதிகரித்தல், இடைவிலகல் வீதத்தைக் குறைத்தல், பெண்களின் உயர்கல்வியை கிராமிய மட்டத்தில் உயர்த்துதல், சமூக ரீதியில் பின்னடைந்தோருக்கும் உடல் ஊனமுற்றோருக்குமான கல்வி வாய்ப்பை அதிகரித்தல் போன்ற பல இலக்குகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு இந்த மக்கள் பங்களிப்புத் திட்டத்தை சிறப்பாகக் கையாளமுடியும்.

கேரளாவில் இத்தகைய திட்டமிடலைப் பயன்படுத்துகின்ற 300 மாதிரி பஞ்சாயத்துக்கள் தற்போது செயற்படுகின்றன. இவற்றைக் குறைந்தது 500 பஞ்சாயத்துக்களாக அதிகரிக்க வேண்டுமென அவை தீர்மானித்து இயங்கி வருகின்றன.

**அநுகூலங்கள்**

Advantages

“மக்கள் பயன்களை அனுபவிப்போர் மாத்திரமே” என்ற நோக்கில் கற்பிதமான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு நிர்வாக பணித்துறை உயர் மட்டத்திலிருந்து மேற்கொள்ளப்படும் விதப்புரைகளின் படியே கடந்தகால திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. இவை பெருமளவில் நிதி ரீதியிலும், கால அடிப்படையிலும் விரயமாக காணப்பட்டன. பயன் விளைவுகளும் ஏற்படவில்லை. மக்கள் வேறு சிலரால் தரப்படும் திட்டங்களை ஈடுபாடு எதுவுமின்றி பார்க்கும் பார்வையாளராகவே இருந்தனர்.

இதற்கு மாறாக தம் தேவைகளைத் தாமே நிறைவேற்றுதல், செய்வதன் மூலம் கற்றுக்கொள்ளுதல் என்ற புதிய சிந்தனைகளுடன் மக்கள் பங்களிப்புத் திட்டமிடல் அறிமுகமாயிற்று. திட்டத்தை அடையாளம் காணுதல், தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் போன்ற எல்லா நிலைகளிலும் பயனாளிகளான மக்களையே பயன்படுத்தி கிராமிய கல்வித்தரத்தை முன்னேற்றுவதே இத் திட்டமிடல் ஆகும்.



இதன் அநுகூலங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. மக்கள் பிரச்சினைகளை வெளியேயிருந்து கற்பனையாக மதிப்பிடாமல் பாதிக்கப்படும் மக்களிடமிருந்தே கண்டறிவதால் மிகச்சரியான விளைவுகளை ஏற்படுத்த முடிகிறது.
2. தாமதம், தவறான செயல், திரும்பவும் செய்தல், திருத்தியமைத்தல் என்பன தவிர்க்கப்படுவதால் அவை தொடர்பான செலவுகளை குறைத்துக் கொள்ள முடிகிறது.
3. மக்கள் தமது செயற்திட்டங்களை தாமே செய்வதாக உணரும் வாய்ப்பு ஏற்படுவதால் விரயமும் தாமதமும் தவிர்க்கப்படும். இதன் காரணமாக மக்களுக்கான பயன்கள் பல மடங்கு அதிகரிக்க முடிகிறது.
4. பல்வேறு செயற்திட்ட கட்டமைப்புக்களை வடிவமைப்பதில் செயற்திட்ட அதிகாரிகள் விட்ட தவறுகளை இனங்காண்பதற்கும், திருத்துவதற்கும் போதிய வாய்ப்புக்களை இத்திட்டமிடல் தருகின்றது.
5. நாட்டு மக்கள் அளவுக்கதிகமாக அரசாங்கத்தில் தங்கியிருக்கும் போக்கினைக் குறைத்துக்கொள்ள இத்திட்டமிடல் உதவுகிறது. ஆளணி, நிதி, பௌதிக வளங்கள் என்பன மக்களினால் சுயவிருப்புடன் வழங்கப்படுவதால் அரச வளங்களை மக்கள் எதிர்பார்க்கமாட்டார்கள். செயற்திட்ட பராமரிப்பு, பாதுகாப்பு என்பனவும் மிகவும் சுலபமாகிவிடும்.
6. செயற்திட்டம் தொடர்பாக பல்வேறு மட்டங்களிலும் நிலவக்கூடிய ஊழலைத் தவிர்க்க இப்புதிய திட்டமிடல் மாதிரியே மிகச்சிறந்தது. தம்மைத்தாமே நிர்வகிக்கும் இந்த முறையில் ஊழல் அகன்று போகும்.
7. ஆராய்ச்சியாளர்கள், செயற்திட்ட அலுவலர்கள் போன்ற உயரணியினர் சாதாரண கிராமிய மக்களுடன் இணைந்து பணியாற்றும் புதிய கலாச்சாரம் வளர்த்தெடுக்கப்படுகிறது. மக்களிடம் புதிய சிந்தனை, புதிய கண்ணோட்டம், புதிய நடத்தை ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றது.
8. செயற்படும் ஆய்வாளர்கள் மக்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும் அவர்களிடமிருந்தே கற்றுக்கொள்ள விரும்புவர். மக்கள் சூழலிலிருந்து புதிய அறிவை தேடிக்கொள்வர். சுதேசிய தொழில் நுட்பங்கள் செம்மைப்படுத்தப்படவும் அவர்கள் துணை செய்வர். புதிய ஆய்வுமுறை ஊக்குவிக்கப்படும்.
9. மக்கள் இணைந்து செயற்படும் போதுதான் கூட்டுறவு, கூட்டுச் செயற்பாடு என்பவற்றின் நன்மைகளை உண்மையாகவே அனுபவிப்பர். நடைமுறைகளிலிருந்து கூட்டு நடத்தையின் பலாபலன்களைக் கற்றுக்கொள்வர். இதனடிப்படையில் கிராமிய மட்டத்திலான குழு முரண்பாடுகளை தாமாகவே

நன்மைகளுக்காக களைந்துகொள்ள முன்வருவர். இதனால் கிராமிய சமூகம் மேலும் ஒருபடி உயர்ந்து சிறப்பான நடத்தையுடனான உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கு நகர்ந்து செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது.

இத்தகைய பல அனுகூலங்களும் கல்விச் செயற்திட்டங்களை பூரணமான மக்கள் பங்களிப்புத்திட்டமிடலின்படி நடைமுறைப்படுத்தும் போதே கிடைக்கும் என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.



# அத்தியாயம்

# 7

# சுயதொழில் வாய்ப்புக்கான கல்வித்திட்டம்

**அரசாங்கமும் தொழில் வாய்ப்பும்**

மூன்றாம் உலக நாடுகளில் அரசாங்கம் கல்வி வழங்குவதில் பொறுப்புடன் இயங்குவது போல கற்றோருக்கான தொழில்வாய்ப்பை வழங்குவதிலும் தலைமைப் பொறுப்பை ஏற்று வந்துள்ளது. பட்டதாரிகள், உயர்தரக்கல்வியைப் பெற்றோர் மட்டுமன்றி க.பொ.த. (சாதாரண) மட்டத் தகுதி உடையோரும் அரச துறைகளில் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து வந்தனர். அரசாங்கங்கள் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு தொடர்பான தொழில்வாய்ப்புக்களை மாத்திரமன்றி, அரச முதலீட்டில் தொழிற்படும் விவசாய, கைத்தொழில் சேவைத்துறை நிறுவனங்களிலும் தொழில் வாய்ப்பை உருவாக்கி வந்தன. இதனால் தொழில் வாய்ப்பு வழங்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உரியதாகவே கருதப்பட்டது. தொழிலின்மை நெருக்கடி அதிகரிக்கும்போது பொருளாதாரப் பிரச்சினை என்பதைவிட அரசியல் பிரச்சினையாகவே அது நோக்கப்பட்டது. அரசாங்கம் தொழில்வாய்ப்பு வழங்குவதில் அக்கறை காட்டியமைக்கு பின்வரும் காரணங்கள் கூறப்பட்டன.

1. மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பேணவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்குரியது. அது மிகவும் அடிப்படையான கடமையாகும். வாழ்க்கைத்தரம் என்பது குடும்பங்களின் வருமானங்களில் தங்கியிருப்பதால் வருமானங்களை உறுதிப்படுத்த தொழில் வாய்ப்பை வழங்குதல் அவசியம்.

2. நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கென ஏராளமான நிதியை அரசாங்கம் செலவிடுகிறது. மக்களின் நல்லெண்ணத்தை மேம்படுத்தவும், வறுமையிலிருந்து விடுவிக்கவும், மக்களின் உழைப்பாற்றலை மேம்படுத்துதற்கான முதலீடுகளை உயர்த்தவும் நலவாழ்வுப் பணிகளில் செலவிடுகிறது. உணவுமானியம், சுகாதார மற்றும் நலத்துறை மானியங்கள், கல்விமானியம், வறுமை நிவாரணம் போன்ற பலவகைச் செலவுகளுக்கும் பூரணமான பயன்பாட்டை ஏற்படுத்துவதற்கு இயன்றளவு தொழில் வாய்ப்பை வழங்கவேண்டும்.

3. ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை அரசாங்கம் இலவசக் கல்வியை வழங்குவதோடு புலமைப்பரிசில், மகாபொல கொடுப்பனவுகள் போன்ற பலவற்றையும் வழங்கி வருகின்றது. இவ்வாறு தான் செலவிட்ட அரசநிதி ஒரு பயன்பாட்டை ஏற்படுத்துவதற்காக இயன்றளவு கற்றோருக்கான தொழில் வாய்ப்பை வழங்குகின்றது.

4. இளைஞர்கள் வேலையின்றி இருப்பதால் அரசாங்கத்திற்கும் பொருளா தாரத்திற்கும் பல நெருக்கடிகள் ஏற்படுகின்றன. அரசியல் சமூக அமைதி யின்மைகள் ஏற்படுகின்றன. இவற்றைத் தணிப்பதற்கும் அமைதியைப் பேணுவதற்கும் இயன்றளவு தான் தொழில்வாய்ப்பைக் கொடுப்பது அவசியம் என்றும் அரசாங்கம் கருதி வருகின்றது.

பொதுவாக மக்களைப் பொறுத்தவரை நிரந்தரமான தொழில், உறுதியான வருமானம், ஓய்வூதியம், தொழில்சார்ந்த துணைச்சலுகைகள் போன்ற பல எதிர்பார்ப்புக்களை விரும்புவதுண்டு. ஆகக் குறைந்தது கல்வித் தகைமைகள் தத்தம் பிரதேசங்களில் பெறக்கூடிய தொழில் வாய்ப்புக்களைத் தருவனவாகவும் அரச துறைகள் கருதப்பட்டன.

இத்தகைய பின்னணியில் கல்வி கற்றோர் தேசிய பரீட்சைகளில் தராதரம் பெறுதல் மாத்திரம் போதுமானதென்று கருதிப் பாடசாலைமட்டக்கல்விக்கு மாத்திரம் கேள்வி ஏற்படுத்தி வந்தனர். இச்சமுதாயக் கேள்வியை மாத்திரம் மனதிற் கொண்டு கல்வி திட்டமிடப்படும் போக்கு இலங்கையில் மட்டுமன்றி பொதுவாகவே மூன்றாம் உலக நாடுகளில் பெரும்பாலானவற்றில் காணப் பட்டது.

ஆனால் தற்போதைய தேசிய மற்றும் சர்வதேசிய நிலைமைகளில் புதிய மாற்றங் களினால் தொழில் உலகு தன் நோக்கையும் போக்கையும் வெகுவாக மாற்றி யுள்ளது. கல்வித்திட்டமிடுவோர் தம் கண்ணோட்டத்தையும் திட்டமிடற் செய்முறையையும் வெகுவாக மாற்றவேண்டியதாகிவிட்டது. மக்களின் அறிவை யும், திறன்களையும் தொழில் வாய்ப்பு தொடர்பான விருப்பத் தெரிவுகளையும் மாற்றியமைக்கக் கூடியதாகவும் கல்வித் திட்டமிடலை வடிவமைக்க வேண்டிய நெருக்கடி நிலைமை வலுப்பெற்று விட்டது.

## புதிய மாற்றங்களும் திட்டமிடலும்

1990 களைத் தொடர்ந்து வந்த பத்தாண்டு காலத்தில் உலகரீதியாகவே பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இத்தகைய மாற்றங்கள் வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமன்றி வளர்முக நாடுகளிலும் ஏற்பட்டு வந்துள்ளன. இந்த மாற்றங்கள் திட்டமிடுதல் தொடர்பாக புதிய சிந்தனையை உருவாக்கியுள்ளது. அத்தகைய மாற்றங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. தொழில்வாய்ப்பு உருவாக்கத்தில் நகர்வு ஏற்படலாயிற்று. பெருமளவு மூலதனமும், நவீன தொழில்நுட்பமும் கொண்ட நிறுவனங்கள் ஐரோப்பிய



வட அமெரிக்க நாடுகளிலிருந்து வளர்முக நாடுகளுக்கு இடம்பெயர்ந்தன. இவற்றுடன் இணைந்த சேவைகளை வழங்கும் சுயதொழில் முயற்சியாளருக் கான வாய்ப்புக்கள் அதிகரித்தன. அமெரிக்க வெளிநாட்டு முதலீடுகள் ஆசியாவில் 1.5 மில்லியன் தொழில் வாய்ப்புகளையும் இலத்தீன் அமெரிக்கா வில் 1.3 மில்லியன் தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்கியிருந்தன.

2. வளர்ச்சியடைந்த நாடுகளைவிட குறைந்த கூலி நிலவுகின்ற நாடுகளில் வினைத்திறன் அதிகமாகக் காணப்படலாயிற்று. அமெரிக்கா தனது கணினி மென்பொருளுக்கான ஊழியத்தை இந்தியாவிட (பெங்களூர்) மிருந்தும் ஆடைத்தொழிலுக்கான ஊழியத்தை துருக்கியிடமிருந்தும் எதிர்பார்த்தது. இதனால் இந்நாடுகளில் கணினி மென்பொருள், ஆடை தயாரித்தல் தொழில் களில் சிறிய சுயதொழில் நிறுவனங்களுக்கு தேவை அதிகரித்தது.

   சிக்கலான வேலைகளைச் செய்யக்கூடிய சுயதொழில் நிறுவனங்களுக்கான கேள்வி இந்தியா, ஜமேக்கா போன்ற நாடுகளிலும் அதிகரித்தது. ஹங்கேரியின் சிறிய சுயதொழில் நிறுவனங்கள் ஜப்பானிய கார் உற்பத்திகளுக்கு வேண்டிய மின்குமிழ் வகைகளை மலிவாக உற்பத்தி செய்தன.

3. இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு சேவைத்தொழில்களில் ஏராளமான சுயமுயற்சி நிறுவனங்களுக்கு கேள்வி ஏற்படலாயிற்று. தொலைத்தொடர்பு, பொறியியல், கணினி நிகழ்ச்சித் திட்ட தயாரிப்பு, காப்புறுதி, விமானச்சீட்டுப் பதிவு போன்ற பலதுறைகளுக் கான கேள்வி மிக வேகமாக அதிகரித்தது. அமெரிக்கா போன்ற வளர்ச்சி யடைந்த நாட்டின் தொலைத்தொடர்பு சேவையுடன் தொடர்புபடும் வகையில் டப்ளின் ஏராளமான சுயதொழில் நிறுவனங்களைக் கொண்டிருந்தது.

4. வளர்ச்சியடைந்த நாடுகளில் வினைத்திறன் சிலதுறைகளில் அசாதாரணமாக அதிகரித்துள்ளது. வளர்முக நாடுகளில் சில நிறுவனங்கள் உலக ரீதியில் அசாதாரண அங்கீகாரம் பெற்றுள்ளன. அயர்லாந்தின் லிமெரிக் (Limerick) பல்கலைக்கழகம், பெங்களூர் இந்திய விஞ்ஞான நிறுவனம் (Bangalore) போன்றன இவ்வாறு குறிப்பிடத்தக்கன. இதனால் ஐக்கிய அமெரிக்காவில் ஏற்படும் அரைவாசிச் செலவில் இவை பல பொருட்களை உருவாக்கு கின்றன. இவ்வாறு திறமை, குறைந்த கூலி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகளுக்கு பொருட்களை உற்பத்திசெய்யும் சுயதொழில் நிறுவனங்கள் வளர்ந்து வருகின்றன.

5. உலகின் நகர்மய நாடான (City State) சிங்கப்பூர் உலகின் மிகப்பெரிய கம்பனி களின் பிராந்திய தலைமை அலுவலகங்களுக்கு வாய்ப்பளித்தது. ஆசிய நாடுகளின் மலிவான உற்பத்திகளை அவை பெறுவதற்கு ஊக்கமளித்து வருகின்றது. மோட்டோரோலோ, தொம்ஸன் போன்ற நிறுவனங்களை இவ்வாறு ஊக்குவிப்பதால் ஆசிய நாடுகளின் ஏராளமான சிறிய பொருட்களை ஆக்கும் சுயதொழில் முயற்சி நிறுவனங்கள் வளர்ந்து வருகின்றன.

உலகம் கைத்தொழில் யுகத்திலிருந்து தகவல் யுகத்திற்கு மாறுவதுடன் தொடர் புடையதாக சுயதொழில் நிறுவன வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. அறிவுசார் ஊழியருக்கும் (Knowledge workers) சேவைத்துறை ஊழியருக்கும் (Service workers) அசாதாரண கேள்வி அதிகரிக்குமிடத்து சுயதொழில் நாட்டமும், வளர்ச்சியும் வளர்ந்து வருகின்றன.

இத்தகைய பின்னணியில் சுயதொழில் நிறுவனங்களை அதிகரிப்பதற்கு கல்வித்திட்டமிடல் கவனம் செலுத்த வேண்டும்.

### சுயதொழில் முயற்சியாளருக்கான கல்வி

சுயதொழில் நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் நாட்டின் தொழில் வாய்ப்பு தொடர்பான நெருக்கடியை மாத்திரமன்றி உற்பத்தி தொடர்பான சிக்கல்களையும் குறைக்க முடியும். இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் சுயதொழில் நிறுவனங் களின் அநுகூலங்கள் பற்றி விதந்துரைக்கப்படுகிறது. சுயதொழில் நிறுவனத் தினருக்கான கல்வி தொடர்பாக பின்வருவன முக்கியமானவை.

1. குடும்பங்களைச் சார்ந்த நிறுவன மாதிரியில் இயங்கக்கூடிய சிறுதொழில் முயற்சிகளாக இவை வளர்ச்சியடையும் கிராமிய அபிவிருத்திக்கு இவை உதவும். இதனால் கூலிக்கமர்த்தப்படும் ஊழியர் குறைந்து போகும். முதலீட்டுக்கான வெகுமதியும், உழைப்புக்கான கூலியும் இணைந்து கிடைக்கும். இக்கருத்தையும் நன்மையையும் மக்களுக்கு உணர்த்தக்கூடிய செயன்முறைகளை கல்வி மேம்படுத்த வேண்டும்.

2. சுயமுயற்சியாளருக்கு கிடைக்கும் வருமானம் பற்றிய தெளிவான எண்ணக் கருவை மக்களிடம் தெளிவுபடுத்தும் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும். முதலீடு செய்யும் துணிவு, முயற்சியாண்மைத் திறன், இடர் ஏற்கும் மனோபாவம் என்பவற்றின் தொகுப்பு விளைவே வருமானம் என்பதை விளக்கி துணிவு, திறன், மனோபாவம் என்பவற்றை மேலுயர்த்துவதில் கல்வி நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.

3. கற்ற இளைஞர்கள் பெரிய தனியார் நிறுவனங்களில் அல்லது அரச துறை களில் தொழில் வாய்ப்பு பெறும்போது இரண்டாம் அல்லது மூன்றாம் அடுக்கு நிலையிலேயே தொழில் கிடைக்கும். அவர்களின் புதிய எண்ணங்கள் மதிப்பளிக்கப்படமாட்டா. முடிவுகளில் அவர்கள் பங்கேற்க முடியாது. இதன் காரணமாக இயலுமையில் மிகச்சிறிய விகிதத்தை மாத்திரமே தமது தொழில் வாய்ப்பில் கையாள முடிகிறது.

   சுயதொழில் முயற்சியில் கற்றோர் ஈடுபட திட்டமிடல் ஊக்குவித்தால் இக்குறைபாடுகளை பரந்தளவில் அகற்ற முடியும்.

   கற்றோரின் ஆற்றல், புத்தூக்கம், துணிவு, ஆர்வம் போன்ற எல்லாவற்றையும் குறுங்காலத்தில் தேச அபிவிருத்திக்கு ஏற்றதாக நிறைவாக பயன்படுத்த வேண்டுமானால் சுயமுயற்சி ஊக்குவிப்புக்கு உரியதாக கல்வி திட்டமிடப் படல் வேண்டும்.



4. சுயதொழில் ஊக்கம் தொழில் நிதியின் கிடைப்புத்தன்மையுடன் தொடர்புடை யதாக நோக்கப்படுவதால் கல்வித்திட்டமிடலின் போது நிதி நிறுவனங்கள், வங்கிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றுடன் தொடர்புபட்ட வகையில் சுயதொழில் ஊக்க கல்வி நிகழ்ச்சித் திட்டங்களையும், செயற் திட்டங்களையும் திட்டமிட வேண்டும்.

5. கல்வி, அறிவு விருத்தி என்பதாக மட்டுமன்றி தொழில்நுட்ப அறிவின் பரவலாக்கம், முயற்சியாண்மைப் பயிற்சி, காப்புறுதிக்கல்வி என்பவற்றுடன் இணைந்த வகையில் திட்டமிடப்படல் வேண்டும்.

6. சம்பளத்திற்கான தொழில் வாய்ப்புக்களின் வசதிகளையும், சிறப்பு அநுகூலங் களையும் மேம்படுத்துவதற்குப் பதிலாக தொழில் முயற்சி இலாப வருமானம் பெறுவோர்க்கான பின்னணி வசதிகளை உட்கட்டமைப்பையும் கல்வித் திட்டமிடல் வற்புறுத்த வேண்டும்.

7. சிறப்பான முயற்சியாண்மைக்கல்விச் செயற்திட்டங்களைத் தயாரிப்பதில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். பின்வரும் வகுப்பினருக்கான முயற்சியாண்மைக் கல்வியை முன்னெடுத்தல் வேண்டும்.
   - பட்டதாரிகளுக்கான சுயதொழிற்கல்வி
   - படித்த இளைஞர்குழுக்களுக்கான சுயதொழிற்கல்வி
   - கிராமிய இளைஞருக்கான சுயதொழிற்கல்வி
   - கிராமிய மகளிருக்கான சுயதொழிற்கல்வி
   - உடல் ஊனமுற்றோருக்கான சுயதொழிற்கல்வி
   - மரபுவழி தொழிற்துறை குடும்பத்தினருக்கான சுயதொழிற்கல்வி
   - சிறிய மற்றும் நடுத்தர தொழில்களுக்கான இத்தகைய கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் கல்வி பயிற்சி கல்வி பயிற்சி என்ற தொடர் ஒழுங்கு செயன்முறைகள் கொண்டதாக திட்டமிடப்படுதல் அவசியம்.

8. சேவைத் தொழில்களில் உயர்தராதர சேவை (High Quality Service) என்பதை பராமரித்தலுக்குரியதான கலைத்திட்ட வடிவமைப்பும், அமுலாக்க கவனமும் தேவை.

9. நீண்ட நேரம் பணியாற்றல் வாடிக்கையாளரில் தனித்தனியாக கவனம் செலுத்துதல், பெரிய வேலையை குறித்த நேரத்துள் செய்து முடித்தல் போன்ற எல்லாவற்றையும் மேற்கொள்ளும் ஆற்றலை வளர்க்கும் கலைத்திட்டம் தயாரிக்கப்படல் அவசியம்.

10. ஒரு வேலையைச் சரியாகச் செய்தல், வினைத்திறனுடன் செய்தல், தவறு களைத் திருத்துதல், தரத்தை அளவிடல், தரத்தை மேம்படுத்தல் என்ற எல்லாப் பணிகளிலும் தகுதியும் ஆர்வமும் விருத்தி செய்யப்படும் வகையில் கல்வித் திட்டமிடல் அமைதல் அவசியம்.

11. அனுபவனுள்ள தொழில் முயற்சியாண்மையாளர் புதிய முயற்சியாண்மை யாளருக்குக் கற்பித்தல் வேண்டும். தொடர்ச்சியாகக் கற்றல், கற்பித்தல் என்ற இரண்டையும்இணைப்பதற்குக்கல்வித்திட்டமிடல் முயற்சித்தல் வேண்டும்.

இத்தகைய பல்வேறு அம்சங்களிலும் கவனம் செலுத்தும் கல்வித்திட்டமிடல் பற்றி அக்கறைகாட்டுதல் கற்றோர் தொடர்பான பிரச்சினைகளைக் குறைக்கவும், தேசிய முன்னேற்றத்தைத் தூண்டவும் நிச்சயம் உதவும்.

## பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்கு திட்டமிடல்

இலங்கை போன்ற வளர்முக நாடுகளின் அபிவிருத்தி தொடர்பாக பெண்களின் பங்கேற்பு ஆண்களின் பங்கேற்பிலிருந்து வேறுபட்டதாகவே விளங்குகிறது. ஆனால் பெண்ணிய ஆய்வாளரும், நிறுவனங்களும் ஆண்களைப் போலவே பெண்களுக்கான கல்வி மற்றும் தொழில் வாய்ப்புத் தேவைகள் சமனானவை என்றும் அவர்களுக்கு சமமான கல்வி வாய்ப்புக்களையும் பயிற்சியையும் வழங்க வேண்டுமென்றும் வற்புறுத்தி வருகின்றனர். இது நியாயமானதும் அபிவிருத் திக்கு அவசியமானதுமாகும்.

பெண்களிடையிலும் பொருளாதார தகுதியடிப்படையில் வேறுபாடுகள் உள்ளன. பெண்களுக்கான ஐக்கிய நாடுகள் தாபன நிதியம் (UNIFEM) கடந்த தசாப்த கால அனுபவத்தின்படி வறிய பெண்களுக்கு விஷேடமான தேவை உண்டென்றும் அவை முயற்சியாண்மை மேம்பாட்டுக்கல்வி தொடர்பாகவும் கவனிக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளது.

பெண்கள் தமக்குரிய பல்வகைப் பங்களிப்பை குடும்பமட்டங்களில் நிறைவேற்றிக் கொண்டே வீடுகளில் குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபட்டும் வருகின்றனர். இலங்கை போன்ற வறிய நாடுகளில் தம் குடும்ப அங்கத்தினரின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக தமக்குரிய அளவில் சுயதொழில் முயற்சிகளை நடாத்த விரும்புகின்றனர். வீட்டுப்பணிகளினூடாக பெற்றுக்கொண்ட திறன்களை அடிப்படையாகக் கொண்ட வியாபார மற்றும் தொழில்களில் தமது சூழலிலேயே ஈடுபட்டு வருகின்றனர். தமது அயலவர் களுக்கு சமைத்த உணவுப்பொருட்களை விற்கும் நிலையங்களை நடாத்துவது அவர்களுக்கு எளியதாயுள்ளது.

இத்தகைய மாதிரி முயற்சியாண்மைப் பணிகளில் பெண்களுக்கு உள்ள பிரச்சினை களை அகற்றும் வகையில் கல்வித்திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். இந்த வகையில் பின்வருவனவற்றை கல்வித்திட்டமிடலாளர் கவனத்திற் கொள்ள வேண்டும்.

1. குடும்ப மட்டப் பணிகள் என்பதிலிருந்து வியாபார அல்லது தொழில் நிறுவன முயற்சியொன்று எத்தகைய அடிப்படைகளில் வேறுபடும் என்பது பற்றி தெளிவான பயிற்சியை வழங்குவது பற்றித்திட்டமிட வேண்டும்.



நிறுவன கணக்குகளை எளிய முறையில் பேணுவதற்கான கற்பித்தல் மற்றும் பயிற்சி ஏற்பாடுகள் அவர்களது தொழில் முயற்சி பற்றிய கண்ணோட்டத்தை மாற்றும் தொழில் பற்றி கவனமாக நடந்து கொள்ளவும் தம் தொழிலில் மேலும் நேரத்தை செலவிடவும் தம் வருமானம் கணிசமானதென உணர்ந்து கொள்ள வும் இது உதவும். இதனால் குடும்பமட்ட முடிவுகளை மேற்கொள்வதில் தம் உரிமைகளை வற்புறுத்தும் துணிவும் வளர்ந்து வரும்.

2. தமது உழைப்பிற்கான பணப்பெறுமதி பற்றி எதுவும் தெரியாதவர்களாக பெண்கள் உள்ள நிலையில் தமது உற்பத்திகளை குறைந்த விலைக்கே விற்று நட்டம் அடைகின்றனர். சரியான கல்வி, பயிற்சி வழங்குவதன் மூலம் இப் பிரச்சினையை அகற்ற வேண்டும். அவர்களது உழைப்பின் மனித மணித்தி யாலப் பெறுமதியை தாமே மதிப்பிடுவதற்கு திட்டமிடுவோர் உதவுதல் வேண்டும்.

3. பெண் முயற்சியாளருக்கு வரவு செலவுத்திட்டம் தயாரித்தல், நிதிப்பகுப் பாய்வு செய்தல் என்பன பற்றிய அறிவை வழங்க வேண்டும். அத்துடன் நிறுவனக் கடன்களைப் பெறும் விருப்பத்தையும், தகுதியையும் அதிகரிக்கக் கூடிய கல்வியையும், பயிற்சியையும் திட்டமிட்டு வழங்க வேண்டும்.

4. பெண்கள் தம்மளவில் நடாத்தக்கூடிய தொழில் முயற்சிகள் சிறிய தொழில் களே; சில்லறை வியாபாரம், சிறிய உற்பத்திகள் என்பவற்றிலேயே அவர்கள் அதிகம் ஈடுபடுகின்றனர். இதனால் பெண் முயற்சியாளர்களை முன்னேற்று வதற்கு உதவும் வகையில், உற்பத்தி அபிவிருத்தி, உற்பத்தித்திறன், தொழில் நுட்ப அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் என்பன தொடர்பாக போதுமான பயிற் சியை வழங்க வேண்டும். கல்வித்திட்டமிடல் இதில் தனித்தன்மையான நிகழ்சித்திட்டங்களை உள்ளடக்க வேண்டும்.

5. பெண்களுக்கு கல்வி, பயணம், வெகுசனசாதனம் என்பன தொடர்பாக அநுகூலங்களை எவ்வாறு அதிகரித்துக் கொள்வதென்பது பற்றிய அறிவு அதிகம் இல்லை. நாகரீக மோகம், தரம், பயன்பாடு தன்மை என்பவற்றுடன் தம் உற்பத்திகளை இணைப்பதன் மூலம் எவ்வாறு உயர்ந்த விலையைப் பெறலாம் என்பதையும் கற்பித்தல் வேண்டும். உரிய நடைமுறைப் பயிற்சியையும் வழங்க வேண்டும்.

6. தொழில்நுட்பம் தொடர்பான அறிவிலிருந்தும், திறன்களைத் தேடுவதிலிருந் தும் பெண்கள் பெரிதும் விலகியே உள்ளனர். இதனால் பெருமளவு இலாபத்தை இழந்தும் விடுகின்றனர். இதனால் எளிய தொழில்நுட்ப கருவிகளை பெண்கள் தாமாக இயக்குவதற்கு உரிய பயிற்சியை செறிவாக வழங்குவதற்கு கல்வித் திட்டமிடலில் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். வியட்நாமில் பெண் கள் எளிய மீன் பதப்படுத்தல் நுட்பக் கருவியை இயக்கும் பயிற்சியினால் அதிக இலாபம் பெற்றனர். தொழில் நுட்பத்தை உச்சமாகப் பயன்படுத் தினர்.

ஏனைய பொறிமுறைகளைக் கையாள் வதிலும் அசாதாரண துணிவையும் பெற்றனர்.

இதனால் கல்வித்திட்டமிடல் இவற்றில் கவனம் செலுத்தவேண்டும்.

7. பெண்கள் தமக்கிடையிலான வியாபார முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலமும் அதிக நன்மைகளைப் பெறமுடியும். கனடாவில் பெண்கள் மென்பொருள் தொழில்நுட்பத்துறையில் இவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளனர். இவ்வாறு பெண்களுக்கான கூட்டுத்தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்கு அடிப் படையான கல்வி மற்றும் பயிற்சிகளை திட்டமிட்டு வழங்க வேண்டும்.

8. தொழில் நிபுணர் குழுக்களை வைத்து மகளிர் சுயதொழில் முயற்சிக்கான அடிப்படை விடயங்களை விளக்கும் செயலமர்வுகளை (Business Workshops) திட்டமிட்டு நடாத்த வேண்டும். இதன் மூலமாக பெண்களின் அறிவை மாத்திரமன்றி தொழில் வல்லாண்மையையும் அதிகரிக்க முடியும். மாதாந்த செயலமர்வுகள் என்ற வகையில் பத்து மாதங்களுக்கு மகளிருக்காக நடாத்திய தொழில் முயற்சிச் செயலமர்வுகள் கனடாவில் ஏராளமான நன்மைகளைத் தந்துள்ளன.

9. கிராமிய பெண்களுக்கான சுய தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு சமுதாயத் தலைவர்கள், வங்கிகள், உயர்தொழில் ஆலோசகர்கள், அனுபவம் மிக்க முயற்சியாண்மையினர் போன்றோரின் வழிகாட்டலை ஒழுங்கு படுத்துவது அவசியம். இத்தகைய பயிற்சி ஏற்பாடு பற்றியும் கல்வித் திட்ட மிடல் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

## இலங்கை நிலைமை

இலங்கையில் திறந்த பல்கலைக்கழகத்தில் சிறு தொழில் முயற்சியாண்மை யினருக்கான கற்கை நெறி இடைநிலைக் கல்வித் தகுதியுடைய மாணவருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இது சான்றிதழ்க் கற்கை நெறி (Certificate course) யில் தொடங்கி டிப்ளோமாக்கற்கை நெறி (Diploma course) வரை இட்டுச்செல்லும். நீண்ட காலத்தில் பட்டப்படிப்புக்கும் அது வழிகாட்டும்.

அவ்வாறே பெண்கள் விரும்புகின்ற துறையான முன்பள்ளி ஆசிரியர் (Pre-School teacher) தகுதியைப் பெறுவதற்கு உதவுகின்ற வகையில் முன்பள்ளிக் கல்வி (Pre-School Education) சான்றிதழ்க் கற்கை நெறியாக முதல் நிலையில் அறிமுகப் படுத்தப்பட்டு, இரண்டாம் நிலையில் டிப்ளோமா கற்கை நெறிக்கும், பின்பு பட்டப்படிப்புக்கும் இட்டுச்செல்லும். நகரம் கிராமம் என்ற வேறுபாடுகளின்றி எல்லா இடங்களிலும் சுயதொழில் முயற்சியாக தொடங்கக்கூடியனவாக முன் பள்ளிக் கல்வி நிலையங்கள் விளங்குகின்றன. தாய், தந்தை இருவரும் தொழில் புரியும் குடும்பங்கள் இவற்றைக் கல்வி நிலையங்களாக மட்டுமன்றி குழந்தை பராமரிப்பு நிலையங்கள் போலவும் கருதுவதால் அதிக கிராக்கி உண்டு. அரச



சார்பற்ற நிறுவனங்களும் இவ்வகை ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகளை நடாத்தி வருகின்றன. தனியார் நிறுவனங்களும் இவ்வகை ஆசிரியருக்கான பயிற்சி நெறிகளை நடாத்தி வருகின்றன. தனியார் நிறுவனங்களும் கட்டணங்கள் அறவிட்டு இவ்வகைப் பயிற்சியை வழங்கி வருகின்றன. எனினும் தேசிய ரீதியில் முன்பள்ளிக் கல்விக்கான மத்திய மேலாண்மைச் சபை எதுவுமிருக்கவில்லை. தற்போதைய 1997 இன் புதிய கல்விச் சீர்திருத்தத்திலேயே முன்பள்ளிக் கல்விக்கான தேசிய குழு ஒன்றை சனாதிபதி செயலணி உருவாக்கியுள்ளது. இது வரை கல்வித்திட்டமிடலில் இது கவனிக்கப்படாத துறையாகவே இருந்து வந்தது.

இவ்வாறே இலங்கையின் தொழிலாளர் கல்வியும் (Workers Education) குறிப்பிடக் கூடியது. தொழிலாளர்கள் தாம் வாழ்வில் தவறவிட்ட வாய்ப்புக்களின் நட்டங் களை ஈடுசெய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குவதாக தொழிலாளர் கல்வி வடிவமைக் கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சான்றிதழ்க் கற்கைநெறி, டிப்ளோமா கற்கை நெறி, பட்டப்படிப்பு என்ற படிமுறையில் தொழிலாளர் கல்வித்தகைமையை உயர்த்திக்கொள்ள முடியும். இத்தகைய தகுதி பெற்றால் கூலிக்கு வேலை செய்வோர் என்ற நிலையில் இருந்து தம்மை சுயதொழில் முயற்சி யாளர் என்ற நிலைமைக்கு உயர்த்திக்கொள்ள முடியும். இதனால் வாழ்க்கைத்தரமும் உயரும், புதிய உற்பத்தி முயற்சிகளும் பெருக்க மடையும். கொழும்பில் இத்தகைய தொழிலாளர் கல்வி நிறுவனமுண்டு. பேராதனை, யாழ்ப்பாண பல்கலைக்கழகங் களிலும் இத்தகைய கல்வி வழங்கும் தனியான அலகுகள் செயற்பட்டு வருகின்றன.

திறந்த பல்கலைக்கழகம் அண்மைக்காலத்தில் ஆடைத்தொழில், சில்லறை வியாபாரம் போன்ற பல புதிய தொழில்களில் சுயமுயற்சியாளரை உருவாக்கும் கற்கை நெறிகளை தொடக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பல்வேறு கற்கைநெறிகள் அக் கற்கைநெறிகளை நடாத்தும் நிறுவனங் கள், அவற்றில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தொடர்பாக எதிர்கால கல்வித்திட்ட மிடலில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். இவற்றுக்கும் பிரதேசங்களில் தொழிற்படும் கைத்தொழில், விவசாய, வியாபார மற்றும் சேவை நிறுவனங் களுக்குமான தொடர்புகளை வலுவானதாக்குவதிலும் கவனம் செலுத்தி அதற்கேற்ற நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

## தென்படும் மாற்றங்கள்

ஊக்கமும், வினைத்திறனும் மிக்க உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உதவியும் ஊக்கமும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் கல்வித்திட்டமிடலில் இருத்தல் வேண்டும். தென்னாபிரிக்காவில் கேப்டவுனில் இயங்கும் டிறிப்பில் டிறஸ்ட் நிறுவனம் (Triple Trust Organisation) சமூக ரீதியில் ஒடுக்கப்பட்ட மக்களிடையே தொழிலின்மையைக் குறைப்பதற்கு மிகுந்த ஊக்கத்துடன்

செயற்பட்டது. 17, 000 பேருக்கு பயிற்சியளித்து சுய முயற்சி நிறுவனங்களை அல்லது சுய தொழில் முயற்சிகளை தொடங்க அது உதவிற்று. இந்நிறுவனம் புதிய கற்பித்தல் மற்றும் பயிற்சிக்கான சாதனங்களையும் வடிவமைத்து 13 வயதுக்கு மேற்பட்டோரை இலக்காகக் கொண்டு தொழில் முயற்சி நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ச்சியாக நடாத்தக்கூடிய திறன்களையும், ஆர்வத்தையும் விருத்தி செய்தது. இதன் அனுபவம் பின்வரும் அம்சங்களை வெளிப்படுத்தியது.

1. பாட உள்ளடக்கம் கவனமாக, பொருத்தமாக தீர்மானிக்கப்படல் வேண்டும்.

   வியாபார, தொழில் முயற்சிக் கோட்பாடுகள், அவற்றை உள்ளடக்கும் நடைமுறைகள் என்பன சேர்க்கப்பட வேண்டும். இதில் திறன்கள், நம்பிக்கைகள் வளர்க்கப்படுவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. சாதாரண கல்வியிலிருந்து இவை வேறுபட்டன.

2. Logistics

3. கற்பித்தல் முறைமையியல்

தொழில் அனுபங்களைப் பெறுவதற்கு பாவனை முறை (Simulation Method) அதிகம் கையாளப்பட்டது. அத்துடன் கற்றுக் கொண்டிருக்கும்போதே தொழில்களை தொடங்கி, நடாத்த ஊக்கமளிக்கப்பட்டனர் அதன் வழியாக பல விடயங்கள் போதிக்கப்பட்டன.

ஆசிரியர்களுக்கு தனித்தன்மையான பயிற்சியை வழங்க வேண்டியிருந்தது. இவர்கள் உதவிபுரிவோராகவும் (Facilitator) மாணவரை உற்சாகப்படுத்துவோராகவும் குழுநிலைக் கலந்துரையாடலை வழி நடத்துவோராகவும் பணியாற்ற வேண்டியிருந்தது. இவை பற்றி ஆசிரியர்கள் அதிகம் அறிந்திருக்கவில்லை. வழக்கமான கற்பித்தற் கடமைகளிலிருந்து இவை வேறுபட்டிருந்தன.

இவற்றின் அனுபவங்களை இலங்கையின் கல்வித்திட்டமிடலில் உள்வாங்க வேண்டும். தென்ஆபிரிக்க அரசாங்கம் அண்மைக்காலத்தில் தன்நாட்டு கல்வி முறையை சீர்திருத்தியது; பல பழைய அம்சங்களை அகற்றியது; பல புதிய அம்சங்களைப் புகுத்தியது. அவ்வாறு அறிமுகப்படுத்தியதில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் முயற்சியாண்மை (Entreppreneurship) என்ற பாடம் கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டமையாகும். மாணவர்கள் மனத்துணிவுடன், பயன்படக்கூடிய பொருட்களையும் வளங்களையும் உள்ளீடாக்கி சுயதொழில்களைத் தொடங்குவதற்கு இப் புதியபாடம் ஊக்கமளிக்கின்றது. தொழில் வாய்ப்புக்காக அரசாங்கத்திலோ, கூட்டு நிறுவனங்களிலோ இளைஞர் தங்கியிருப்பதைத் தவிர்ப்பதற்கு இப்புதிய பாட அறிமுகம் பயன்படும்.

தொழில் அனுபவம் பெறக்கூடிய பயிற்சி முறை, பாவனை முறை விளையாட்டாக (Simulation game) வடிவமைக்கப்பட்டிருந்தது. இது பெஸ்ட் கேம் (Best game)



என்றழைக்கப்பட்டிருந்தது. வியாபாரம், செலவு, சிக்கனம், பயிற்சி (B-Business, E-Expenses, S-Serving, T-Trading BEST) என்பவற்றை அது தெளிவுபடுத்தி வற்புறுத்தியது. முடிவுகளை மேற்கொள்ளவும், அதன் வெற்றி தோல்வியை மதிப்பிடவும் மாணவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இத்தகைய மாதிரி தொழில் நடாத்த வங்கிகள் மாணவர்களுக்கு கடன் வழங்கியிருந்தது. இந்த பெஸ்ட் கேம் முறை தற்போது 16 நாடுகளில் உள்ளது. பல பெரிய நிறுவனங்கள் உலக ரீதியில் இதில் ஆர்வம் காட்டியுள்ளன. இப்புதிய கற்பித்தல் மற்றும் நவீன பயிற்சி முறை பற்றி பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டு வருகின்றது.

இலங்கை இத்தகைய புதிய அணுகுமுறைகளையும், அனுபவங்களையும் நன்கு ஆராய்ந்து இலங்கையின் வளங்கள், தேவைகள், பிரச்சினைகள் என்பவற்றுக்கு ஏற்றதாக பாடசாலைகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில்பயிற்சி நிறுவனங்கள், பல்கலைக்கழக மட்டங்களில் முயற்சியாண்மைக் கல்வியை விருத்தி செய்தல் வேண்டும். இதற்கு கல்வித்திட்டமிடல் முன்னுரிமையளிக்க வேண்டும்.

# அத்தியாயம்

# 8

# கல்விச்செலவும் நிதியிடலும்

## Education Cost and Financing

கல்வித்திட்டமிடலில் கல்விச் செலவு பற்றிய பகுப்பாய்வு மிகவும் முக்கிய மானதாகும். ஒரு நாட்டின் கல்வி முறையில் பல்வேறு மட்டங்களில் நிதியிடுதல் தொடர்பாக சமனற்ற நிலைமை காணப்படுகின்றதா? என்பதைக் கண்டறி வதற்கும், பல்வேறு மாகாணங்கள் அல்லது மாவட்டங்களிடையே சமமின்மை காணப்படுகின்றதா? என்பதை அளவீடு செய்வதற்கும் கல்விச் செலவு பற்றிய பகுப்பாய்வு உதவுகின்றது. ஒரு நாட்டின் கல்விச்செலவு அதிகரித்துச் செல்வதை அல்லது குறைந்து செல்வதை பாதிக்கின்ற சிறப்பான காரணிகள் எவை என்பதைக் கண்டறிவதற்கும் இவ்வகை ஆய்வு பயன்படுகின்றது.

கல்வித்திட்டங்களைத் தயாரிக்கும் போதும் அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளை தீர்மானிக்கும் போதும் செலவு தொடர்பான பல்வேறு சிறப்பான அம்சங்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளன.

பல்வேறு வகையான கல்விக்கும் ஏற்ப செலவினங்களும் வேறுபடுவதுண்டு. பொதுவாக அவற்றை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

- முன்பள்ளிக்கல்வி
- ஆரம்பக்கல்வி
- இடைநிலைக்கல்வி
- மூன்றாம் நிலைக்கல்வி என்றும்
- தொழிற்கல்வி
- தொழில்நுட்பக்கல்வி
- உயர்தொழிற்கல்வி (வாண்மைக்கல்வி)
- ஆசிரியர் கல்வி
- விஞ்ஞானமும் ஆராய்ச்சியும் என்றும்



பல பாகுபாட்டு அடிப்படையில் செலவினங்கள் கணிப்பிடப்பட்டு, கையாளப் படுகின்றன.

தேவைக்கேற்ப திட்டமிடற் படிமுறைச் செயற்பாடுகளுக்குரிய வகையிலும் கல்விச் செலவினங்கள் வகையீடு செய்யப்படுவதுண்டு. கல்விமுறையின் தொழிற்பாடு கல்வி நிறுவனங்களிலேயே தங்கியுள்ளது. கல்வி நிறுவனங்களின் சிக்கலான தன்மையைத் தீர்மானிக்கின்ற முக்கியமான அம்சமாகவும் கல்விச் செலவு அமைகின்றது. கல்விப்பொருளியலாளர்கள் கல்விச் செலவை ஒரு மனித முதலீடாக அங்கீகரித்துள்ள நிலையில் கல்விச்செலவு பற்றிய அவதானம் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

### திட்டமிடலில் செலவின் முக்கியத்துவம்

திட்டமிடற் பொறிமுறைச் செயற்பாட்டில் மற்றும் மதிப்பீட்டில் ஈடுபடுவோரைப் பொறுத்து கல்விச்செலவு பற்றிய பகுப்பாய்வு பின்வரும் அடிப்படைகளில் அதிக முக்கியத்துவம் உடையது.

1. கல்வித்துறைக்கு மட்டுமன்றி இதனுடன் தொடர்புபட்டதான உபதுறை களுக்குத் தேவையான வளங்கள் பற்றிய மதிப்பீட்டைச் செய்வதற்கு அது உதவுகின்றது.
2. கல்வித்துறையினுள்ளே பல்வேறு துறைகளுக்கும் ஒதுக்கப்படும் வளங்கள் எந்தளவுக்கு உத்தம மட்டத்திற்கு உரியனவாக ஒதுக்கீடு செய்யப்பட்ட என்பதை தீர்மானிப்பதற்கு பயன்படுகின்றது.
3. கல்வித்துறையின் பல உபதுறைகளுக்கிடையிலும் எந்தளவுக்கு திருப்தி கரமான முறையில் பகிரப்பட்டன என்பதை மதிப்பிட உதவுகிறது.
4. ஒரு நாட்டின் கல்விமுறை எந்தளவு வினைத்திறனுடன் செயற்படுகின்ற தென்பதை சிறப்பாக வெளிப்படுத்தும் குறிகாட்டியாக கல்விச்செலவுப் புள்ளிவிபரங்கள் காணப்படுகின்றன.
5. கல்வி முறையில் முழுமையாக அல்லது ஏதேனும் ஒரு மட்டத்தில் செலவு பயன் தன்மை எவ்வாறு காணப்படுகிறதென்று மதிப்பீடு செய்துகொள்ளவும் செலவு விபரங்கள் அவசியமாகின்றன.
6. நவீன நலன்புரி அரசாங்கங்கள் கல்வித்திட்டமிடலில் சமவாய்ப்பு எண்ணக் கருவை வலியுறுத்தி வருகின்றன. அவ்வாறு பிராந்திய ரீதியில் அல்லது இனத்துவ ரீதியில் சமத்துவத்தை ஏற்படுத்தும் வகையில் வள ஒதுக்கீடுகளை மாற்றியமைப்பதற்கு செலவுப் புள்ளிவிபரங்களே அடிப்படையாகின்றன.
7. திட்டமிடல் செய்முறை தொடர்பான பல்வேறு பணிகளுக்கும் வழிகாட்டு வதற்கு செலவுப் புள்ளிவிபரங்கள் அவசியமாகின்றன. எதிர்வுகூறல், செயற் திட்டம் தயாரித்தல், பகுப்பாய்வு செய்தல், தீர்மானம் மேற்கொள்ளல், கொள்கை உருவாக்குதல் போன்ற பல்வேறு தேவைகளுக்கும் கல்விச் செலவுப் புள்ளிவிபரங்கள் உதவுகின்றன: வழிகாட்டுகின்றன.

8. கல்விப் பிரதேசங்களுக்கிடையிலும், பிரதேசத்திற்குள்ளேயும் நீண்ட காலத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பாக ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை மிகத் துல்லியமாக கணித்துக் கொள்வதற்கும் செலவுப் புள்ளிவிபரங்களே வழிகாட்டுகின்றன.

9. ஒரு நாட்டின் கல்வித்துறையின் உற்பத்திசார் செய்முறையின் தன்மையை அதாவது மூலதனச் செறிவானதாக காணப்படுகிறதா? அல்லது ஊழியச் செறிவானதாக காணப்படுகிறதா? என அறிந்துகொள்ள கல்விச்செலவின் சேர்க்கை முறையில் தென்படும் மாற்றங்கள் உதவுகின்றன. கல்விச் செலவுகளைத் தீர்மானிக்கும் காரணிகள். செலவுத் தொகை, மாற்றங்களை பாதிக்கும் காரணிகள் என்பவற்றை அறிவதன் மூலம் இது சாத்தியமாகும்.

## செலவுப் பாகுபாடு

Taxonomy of Cost

கல்விச்செலவு அடிப்படையில் பிரதானமாக இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றது. அவை,

1. நிறுவன மட்டச் செலவுகள் (Institutional Costs)
2. தனியார் செலவுகள் (Private Costs)

## நிறுவன மட்டச்செலவுகள்

கல்வியை வழங்கும் நிறுவனங்களுக்கு அத்தகைய தொழிற்பாடு தொடர்பாக ஏற்படும் செலவுகள் நிறுவனமட்டச் செலவுகளாகும்.

பொதுவாக எல்லா நாடுகளிலும் கல்விச்செலவு பற்றிய கணிப்பீடுகளை மேற்கொள்ளும்போது இவ்வாறான நிறுவனமட்டச் செலவுகளை மாத்திரமே கல்விச்செலவு என்று கணிக்கின்றனர்.

கோதாரி (Kothari 1966) என்ற இந்திய ஆய்வாளர் நிறுவனமட்டச் செலவுகளை நேரடியான செலவு, மறைமுகமான செலவு என இரண்டாக வகைப்படுத்தினார். நேரடியான செலவு என்பதில் அரசாங்கம், நிறுவனங்களின் கொடைகள், அறக்கொடைகள், நம்பிக்கை நிதியம் போன்றவற்றால் மேற்கொள்ளும் செலவுகளையும் தனியார் செய்யும் செலவுகளையும் உள்ளடக்கினார். மாறாக மறைமுகச் செலவு என்பதில் நிறுவனம் தொடர்பான வட்டிக் கொடுப்பனவு, பெறுமானத் தேய்வு, மேற்பார்வைச் செலவு, மற்றும் நானாவித விடயங்களுக்கான செலவுகளை உள்ளடக்கினார். கல்வி கற்கும் காலத்தில் இழக்கப்படுகின்ற வருமானங்களை சந்தர்ப்பச் செலவு என வகைப்படுத்தும்போது இவையெல்லாவற்றையும் (நிறுவன, தனியார், மற்றும் சந்தர்ப்ப செலவுகள்) கல்விக்கான காரணிச் செலவு (Factor Cost of Education) என்றார்.

பொதுவாக இன்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்படி நிறுவனமட்டக் கல்விச்செலவு இருவகைப்படும்.



1. கட்புலனாகும் செலவுகள் (Visible Costs)
2. சந்தர்ப்பச் செலவுகள் (Opportunity Costs)

## கட்புலனாகும் செலவுகள்

வெளிப்படையாக மேற்கொள்ளப்படுகின்ற எல்லாவகைச் செலவுகளையும் இது குறிப்பிடுகின்றது இச் செலவுகள் இருவகைப்படுத்தப்படுகின்றன.

அ. மீண்டெழும் செலவுகள் (Recurring Costs)

ஆ. மீண்டெழாத செலவுகள் (Non - Recurring Costs)

### அ. மீண்டெழும் செலவுகள்

கல்வி நிறுவனங்கள் தொடர்ந்து செயலாற்றுவதற்கு அவசியமான சேவைகளையும், பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கும், பராமரிப்பதற்கும் ஏற்படும் செலவுகள் இவையாகும். மாணவர் தொகை, பராமரிக்கப்படும் கல்விமட்டங்களின் எண்ணிக்கை, கற்கை நெறிகளின் எண்ணிக்கை, பேண விரும்புகின்ற மாணவ ஆசிரியர் விகிதம், மதிப்பீட்டு நடைமுறைகள், புறக்கலைத் திட்ட செயற்பாடுகளின் தன்மையும் அளவும், புலமைப்பரிசில் நடைமுறைகள் என்பவற்றுக்கேற்ப இச்செலவுகள் அதிகரித்துச் செல்லும்.

இதில் ஆசிரியர் மற்றும் பணியாளர் சம்பளங்கள் முக்கியமானவை. இவற்றுடன் மின்சார, குடிநீர் செலவுகள், உதவிக்கொடுப்பனவுகள், பெறுமானத்தேய்வு போன்றன அடங்குகின்றன. இந்திய ஆரம்பப்பாடசாலைகளின் மீண்டெழும செலவுகளில் 98% வரை ஆசிரியர் சம்பளங்கள் காணப்படுவதாக கணிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் இலவச மதிய உணவு, பாடநூல்கள், ஆய்வுகூட இரசாயனம், விளையாட்டு உபகரணம் சார் செலவுகளும் இதில் அடங்குகின்றன.

### ஆ. மீண்டெழாத செலவுகள்

இவற்றை நிலையான மூலதனச் செலவுகளாக கருதமுடியும், பாடசாலைக் கட்டிடம், தளபாடம், உபகரணங்கள், ஆய்வுகூடம், விளையாட்டுமைதானம், போன்றவற்றை உருவாக்குதல், கொள்வனவு செய்தல் அல்லது நவீன மயமாக்குதல் என்பவற்றுக்கான செலவுகளாக இவை காணப்படும். கல்வி நிறுவன செயற்பாடுகளின் அதிகரிப்பிற்கேற்ப குறுங்காலத்தில் இவை மாற்றமடைய மாட்டா. ஆனால் மிக நீண்ட காலத்தில் கல்வி நிறுவனங்கள் அசாதாரண வளர்ச்சியை அடையும் காலத்தில் இச் செலவுகளிலும் மாற்றம் ஏற்படும்.

இவ்விருவகைச் செலவினங்களையும் கூட்டுவதால் நிறுவனமட்ட கட்புலனாகும் செலவுகளைக் கணிக்கமுடியும்.

## சந்தர்ப்பச்செலவுகள்

ஒரு குறிப்பிட்ட கல்வி நிறுவனம் தன் வளங்களைக் குறித்த கல்விகற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதன் காரணமாக அதேவளங்களைக் கொண்டு

நிறைவேற்றி இருக்கக்கூடிய பலவற்றை இழந்திருக்கும். வேறுபல அநுகூலங்களை இழந்திருக்கும். அவ்வாறான இழப்புக்கள் அல்லது நட்டங்கள் சந்தர்ப்பச் செலவுகள் எனப்படும். இவற்றை எளிய முறையில் கணிக்கமுடியாது.

### தனியார் செலவுகள்

கல்வி கற்பதில் ஈடுபடுகின்ற பிள்ளைகள் மற்றும் நபர்களுக்கோ அவர்களின் பெற்றோருக்கோ கல்வி பெறுதல் தொடர்பாக ஏற்படும் செலவுகளே தனியார் கல்விச் செலவுகள் எனப்படும்.

கல்வித்திட்டமிடல் தேவைகளுக்கு தனியார் செலவுகளைக் கருத்திற் கொள்ள வேண்டியதில்லை என்று பொதுவாக கருதப்பட்டது. இதனடிப்படையில் கல்விச் செலவு மதிப்பீட்டாளர் தனியார் செலவுகளை கணிப்பதில் நீண்டகாலமாக ஆர்வம் காட்டியிருக்கவில்லை. 1960 களைத் தொடர்ந்த காலப்பகுதியிலேயே தனியார் கல்விச் செலவினைக் கணிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது.

சூல்ட்ஸ் (1981) என்பாரின் கருத்தின்படி கல்விதொடர்பாக நிறுவனங்களின் பங்களிப்பைவிட பெற்றோர் மற்றும் மாணவர் பங்களிப்பு ஒப்பீட்டு ரீதியில் மிகவும் அதிகமாகும். பெற்றோர் தம் வருமான அதிகரிப்பு விகிதாசாரத்திலும் கூடுதலான கல்வியில் செலவிட்டு வருவது அறிப்பட்டது.

கல்விப் பொருளியலாளர்கள் நிகழ்காலத்தில் தனியார் கல்விச்செலவுகள் தொடர்பான அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஒரு நாட்டின் அரசாங்கம் கல்விதொடர்பான தனது கொள்கைகளையும் முடிவுகளையும் மேற்கொள்ளும்போது நிச்சயமாக தனியார் கல்விச்செலவு பற்றியும் அதனை தனிப்பட்டவர்கள் எந்தளவுக்குத் தாங்கிக்கொள்ள விரும்புகிறார்கள் என்பது பற்றியும் அறிந்திருக்கவேண்டும். தனிப்பட்டவர்களின் செலவுகளைத் தாங்கும் தகுதி விருப்பம் என்பவற்றின் அடிப்படையிலேயே கல்விக்கு எந்தளவு வளங்களை ஒதுக்கவேண்டும் என்பதைச் சரியாகத் திட்டமிடமுடியும். அரசாங்கம் பாடசாலைக் கல்விச் செயற்பாடு தொடர்பாக பல முடிவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பாடசாலைக் கட்டணம் புலமைப்பரிசில் உதவி நன்கொடைகள், கட்டணக்குறைப்பு ஏற்பாடுகள் போன்றன பற்றி தெளிவான கொள்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதற்கு தனியார் கல்விச்செலவு பற்றிய தகவல்கள் அவசியமாகின்றன. இவைபற்றிய சரியான கணிப்பீடுகள் இல்லாத நிலையிலேயே பாடசாலையில் மாணவர் சேர்தல் தொடர்பாக எதிர்பார்க்கைக்கும் உண்மை நிலைக்குமிடையே அதிக இடைவெளி காணப்படுவதாக விளக்கப்படுகின்றது. இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் பெருமளவு மாணவப் பருவத்தினர் பள்ளிக்குச் சமூகமளிக்காதிருப்பதற்கும் கூடிய வீதத்தினர் இடைவிலகுவதற்கும் திட்டமிடலின்போது தனியார் கல்விச் செலவுகளைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாமையும் முக்கிய காரணமென ஆய்வாளர் கண்டறிந்துள்ளனர்.



தனியார் கல்விச்செலவுகள் இருவகைப்படுகின்றன.

1. கட்புலனாகும் செலவுகள் (Visible Costs)
2. சந்தர்ப்பச் செலவுகள் (Opportunity Costs)

### கட்புலனாகும் செலவுகள்

சுலபமாக அளவிடக்கூடிய பல்வேறு செலவுகளும் கட்புலனாகும் செலவுகளாக கருதப்படுகின்றன. படிக்கும் பிள்ளைகளின் படிப்பு சார்ந்த செலவுகளும் (Tution costs) படிப்பு சாராத செலவுகளும் (Non- Tution costs) இதில் உள்ளடக்கப் படுகின்றன.

#### அ. படிப்புச் செலவு

பிள்ளைகள் கல்வி கற்கும் காலத்தில் கொடுக்கின்ற படிப்புக்கட்டணம் மற்றும் வேறுவகையான கட்டணங்கள் தொடர்பான செலவுகள் இவையாகும். கல்வி மட்டத்தைப் பொறுத்தும், கல்விகற்கும் நிறுவன தராதரத்தைப் பொறுத்தும் இச்செலவு வேறுபடும். அரசாங்கப் பாடசாலைகளில் இச்செலவு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகும். வசதிகளும், தரமும், அந்தஸ்தும் கொண்ட பெரிய பாடசாலைகளில் கற்கும் மாணவரின் இத்தகைய செலவுகள் மிகவும் கூடுதலாகக் காணப்படும்.

#### ஆ. படிப்பு சாராத செலவு

மாணவர்கள் படிப்பதற்கு துணையாக பயன்படும் புத்தகங்கள், எழுதுகருவிகள், தங்குமிடம், போக்குவரத்து, சீருடை மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான செலவுகள் எல்லாம் படிப்பு சாராத செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றன.

மாணவர்கள் கற்கும் கற்கை நெறி, கல்வி மட்டம், கல்வியைத் தொடரும் கால அளவு என்பவற்றைப் பொறுத்து இச்செலவு அதிகரித்துச் செல்லும். மீளக்கற்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படின் இச்செலவுகளும் அதிகரிக்கும். நாயர் (1981) என்பவரது கருத்தின்படி ஒரு மாணவன் தனது கல்வி மட்டத்தை திருப்திகரமாக நிறைவேற்றுமிடத்து இவ்வகைச்செலவு சிக்கனமானதாக அமையுமென்று அதனைப் பயனுறுதிமிக்க செலவு (Effective costs) என்றும், மாறாக சித்திபெறாது மீளக்கற்கும் நிலையில் இவ்வகைச்செலவு அசாதாரணமாகக் கூடிவிடுமென்றும் அதனை மேலதிகச் செலவு (Excess cost) என்றும் விளக்குகிறார்.

சமகாலத்தில் ஒரு குடும்பத்திலிருந்து பல பிள்ளைகள் பாடசாலை செல்ல வேண்டிய நிலைமை காணப்படும் போது பெற்றோரைப் பொறுத்து இவ்வகைச் செலவு மிக அதிகமாகிவிடும்.

### சந்தர்ப்பச்செலவுகள்

மாணவன் ஒருவன் கல்வி கற்கும்போது அவன் கல்வி கற்பதற்குச் செலவிடும் நேரம் என்ற பெறுமதிமிக்க வளம் தொடர்பானதாக சந்தர்ப்பச் செலவு விளக்கப் படுகின்றது.

கல்வி கற்கும் மாணவன் கற்கும் காலத்தை (வருடங்களை) வேறு தொழில்கள் அல்லது பணிகள் செய்வதற்கு பயன்படுத்தியிருக்க முடியும். ஏனெனில் ஒன்றுக்கு மேற்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய மாற்றுப்பயன்பாடு நேரத் திற்கு உண்டு. அவ்வாறு கல்வி கற்பது தவிர்ந்த வேறு வேலைகளில் செலவிட்டி ருந்தால் பெற்றிருக்கக்கூடிய நலன்களை (வருமானம், ஓய்வு, புகழ், வெகுமதி) எல்லாம் இழக்கவேண்டி ஏற்படும். அவ்வாறான இழப்பு கல்வியின் பயன்களுடன் ஒப்பிடவேண்டியதாகும். அவ்வாறு "இழக்கப்படுகின்ற நலன்கள்" தான் சந்தர்ப்பச் செலவு என்று விளக்கப்படுகின்றது.

இத்தகைய பல்வேறு வகையான செலவுகளும் திட்டமிடலின் தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தனியார் செலவுகளை மேற்கொள்ளக்கூடிய தகுதி யுடன் உள்ள சூழ்நிலைகளிற்றான் நிறுவனமட்ட கல்விச்செலவு களையும் பயனுறுதிமிக்கதாக்க முடியும். இவ்வாறு தனியார் கல்விச் செலவுகளும் நிறுவன மட்ட செலவுகளும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன. இவை இரண்டும் இசைந்து செல்லாவிடில் வகுப்பறைகள் வெறுமையாகிவிடும் அல்லது மிகவும் நெருக்கடி மிக்கதாகிவிடும்.

### முறைசாராக் கல்விச் செலவு

Educational costs of Non-formal Education)

எல்லா நாடுகளிலும் கல்விச் செலவு பற்றிய எண்ணக்கரு என்பது முறைசார் கல்வி பற்றியதாகவே காணப்படுகின்றது. பெருமளவு நிதி, பெற்றோர், மாணவர் ஆகியோருடன் அது தொடர்புபட்டிருப்பது இதற்கு முக்கிய காரணமாகும்.

பொதுவாக முறைசாராக் கல்விச் செலவுகளில் திட்டமிடுவோர் கவனம் செலுத்துவதில்லை இச் செலவுகள் பற்றிய பதிவுகளும் அதிக ஒழுங்கு முறையில் பேணப்படுவதில்லை என்றும் குறை கூறப்படுகின்றது.

முறைசார் கல்வியுடன் ஒப்பிடும்போது முறைசாராக் கல்விக்கான செலவுகள் மிகவும் குறைவாகும். ஆசிரியர் தொடர்பான செலவு உள்ளிட்ட நிறுவன மட்ட செலவுகள் மாத்திரமன்றி தனியார் செலவுகளும் மிகவும் குறைவாகவே காணப் படுகின்றன.

முறைசாராக் கல்வியில் அடங்கும் கற்கை நெறிகளும், கற்பித்தல் முறைகளும், மாணவர் இயல்புகளும் செலவை குறைந்த மட்டத்தில் பேண உதவுகின்றன.

முறைசாராக் கல்வி அதன் பண்புகளின்படி பகுதி நேரக் கற்கை முறையாக இருப்ப தால் வருமான இழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை. இதனால் சந்தர்ப்பச் செலவு புறக்கணிக்கத்தக்க அளவிலேயே காணப்படுகின்றது.

முறைசாராக் கல்விச் செலவு ஒப்பீட்டு ரீதியில் குறைவானதாக உள்ள போதிலும், இதிலும் ஆசிரியர் சம்பளம் தொடர்பான செலவு மிகவும் கூடுதலாகவே காணப்படு கின்றது. இந்தியாவின் அனுபவத்தில் முறைசார் ஆரம்பக்கல்விக்கான செலவில்,



ஆசிரிய சம்பளம் 93% (1976ல்) மாகக் காணப்பட்டபோது முறைசாராக் கல்வியில் 94% மாக காணப்பட்டதாக ஆய்வுகள் (Tilak 1984) தெரிவிக்கின்றன. மற்றொரு ஆய்வானது முறைசார் ஆரம்பக்கல்வியின் தலா கல்விச்செலவு வருடாந்தம் ரூபா 140 ஆக இருந்தபோது முறைசாராக் கல்வியில் ரூபா 50 மாத்திரமே எனக் கணிக்கப் பட்டிருந்தது. முறைசாராக் கல்வி செயற்திட்டத்தின் மூலம் மாணவர்களின் சந்தர்ப்பச் செலவில் 1.6 2.0 மில்லியன் ரூபாவரை சேமிக்க முடிந்ததாக பேராசிரியர் திலக் விளக்கியுள்ளமை கவனிக்கத்தக்கது.

### கல்வியின் அலகுச் செலவு

Units cost of Education

ஒரு குறிப்பிட்ட கல்விக்காலத்தில் (பொதுவாக ஒரு கல்வி ஆண்டில்) எந்த ஒரு கல்வி மட்டத்திலும் சராசரியாக ஒரு அலகுக்குரிய செலவு எவ்வாறிருக்கும் என்று கணிப்பது இதுவாகும்.

தலா மாணவனுக்கான கல்விச் செலவு எனவும் இதனை கணிக்க முடியும். இதன்படி ஆரம்பக்கல்வி மட்டம் அல்லது இடைநிலைக்கல்வி மட்டம் ஆகிய ஏதாவதொரு நிலையில் சராசரியாக ஒரு மாணவனுக்கு ஏற்படும் செலவு அலகுச் செலவாக இருக்க முடியும்.

இத்தகைய அலகுச்செலவு ஒரு கல்வி நிறுவனத்தைவிட மற்றொரு கல்வி நிறுவனத்தில் வேறுபடமுடியும். அதனை தீர்மானிக்கும் காரணிகளாக பின்வரு வன அமைகின்றன.

1. மாணவர் சேரும் விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு கல்வி நிறுவன அளவு.
2. ஆசிரிய மாணவ விகிதம்.
3. ஆசிரியர்க்கான சராசரிச் செலவு.
4. தலா மாணவருக்கு ஏற்படுகின்ற படிப்பு சார்ந்த செலவும் படிப்பு சாராத செலவும்.

தலா கல்விச் செலவு பல்வேறு கல்வி மட்டங்களுக்கேற்ப வேறுபடும். இந்தியா வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு வேறுபாடு களைக் காணமுடியும்.

**தலா மாணவருக்கான கல்விச்செலவு 1975 1976**

| கல்வி மட்டம் | நடைமுறை விலையில் செலவு (ரூபா) |
|---|---|
| ஆரம்பக்கல்வி | 95.90 |
| இடைநிலைக்கல்வி | 257.70 |
| உயர்கல்வி | 5 993.60 |

Source : Tilak and Varghese (1983)

வெவ்வேறு மட்டங்களுக்கேற்ப ஒரு மாணவனுக்கான கல்விச்செலவு இங்கு வேறுபடுகின்றது.

திட்டமிடும்போது தலா மாணவனுக்கான கல்விச் செலவை அடிப்படையாகக் கொண்டு மொத்தக் கல்விச்செலவைக் கணிக்க முடியும்.

உதாரணமாக :

1. தலா மாணவனுக்கான கல்விச்செலவு = 1 200 ரூபா
2. சேரக்கூடிய மொத்த மாணவர் தொகை = 4 000 பேர்
3. மொத்தக்கல்விச்செலவு1 200 × 4 000 = ரூபா 4 800 000/=

வருடாந்த மொத்தச் செலவு அதிகரிப்புப் பற்றிக் கணிக்கும்போது விலை மட்ட (கல்வி சார் பண்டங்களின் சராசரி விலைகள்) மாற்றங்களையும் கவனத்திற் கொள்ளவேண்டும். விலைமட்டம் 6% அதிகரிப்பதாகக் கணித்தால் அதே வீதத்தினால் செலவு அதிகரிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படும். செலவு மாற்றங்களில் விலை மட்டங்களுக்குள்ள தொடர்பு பெயரளவுச் செலவு : உண்மைச்செலவு என்பவற்றால் தெளிவாக விளக்கப்படுகிறது.

திட்டமிடல் செலவுகளைக் கணிப்பீடு செய்யும்போது பொதுவாக பின்வரும் செலவுக்கணிப்பு முக்கியமானதாயமையும்.

1. கல்விமட்டம் மற்றும் கல்விவகை அடிப்படையில் தலா மாணவ செலவு கணிக்கப்படல்.

   உதாரணமாக :

   ஆரம்பக்கல்வி மட்டம், இடைநிலை மட்டம், உயர்கல்வி மட்டம், தொழிற் கல்வி, தொழிநுட்பக்கல்வி, ஆசிரியக்கல்வி

2. தலா செலவுகளை கணிக்கும்போது பாடசாலைக் கட்டிடம், ஆய்வுகூடம், பயிற்சிப்பட்டறை என்பவற்றினடிப்படையில் தலா சதுர மீற்றருக்கான செலவையும் கணிக்கமுடியும். அவ்வாறே தலா ஆசிரியருக்கான செலவையும் கணித்துக் கொள்ளவேண்டும்.

பொதுவாக ஒரு பாடசாலையில் தலா கல்விச்செலவை மற்றொருவகைப் பாடசாலையில் கல்விச்செலவுடன் ஒப்பிட்டால் அவற்றில் செல்வாக்குச் செலுத்தும் வேறுபட்ட காரணிகளை இனங்காண முடியும். கிராமிய இடைநிலைப் பாடசாலையின் தலா மாணவன் கல்விச் செலவுடன் ஒப்பிட்டு நோக்கமுடியும். இவ்வாறே இரண்டு மாவட்டங்களில் அல்லது மாகாணங்களிற் காணப்படும் தலா கல்விச் செலவையும் ஒப்பிட்டு நோக்கமுடியும்.

## பெயரளவு கல்விச்செலவு

Nominal cost of Education

ஒரு நாட்டின் கல்விச் செலவைக் கணிப்பிடும் போது தலா கல்விச் செலவை அல்லது மொத்தக் கல்விச் செலவை நடைமுறையில் காணப்படுகின்ற விலைகளின் அடிப்படையில் கணிப்பது பெயரளவு கல்விச் செலவு எனப்படும்.



இரண்டு வருடங்களுக்கிடையில் செலவுகள் உண்மையில் மாறாதிருக்கும் நிலையில் விலைகள் உயர்ந்து சென்றால் நிச்சயமாக கல்விச்செலவு அதிகரிக்கும். இது விலை அதிகரிப்பினால் மாத்திரம் ஏற்பட்ட செலவு அதிகரிப்பாகும். ஒவ்வொரு வருடத்தின் செலவையும் அந்தந்த வருடங்களிற் காணப்படுகின்ற விலைகளினடிப்படையில் கணிப்பது இதுவாகும்.

மிகவும் எளிதான கணிப்புமுறை என்பதோடு நடைமுறையில் மக்களின் செலவு எவ்வாறு அதிகரிக்கிறது என்பதையும் குடும்பங்களின் வருமான அதிகரிப்புடன் இவை ஒத்துச்செல்கின்றனவா என்பதையும் மதிப்பீடு செய்ய இவை உதவுகின்றன.

ஆனால் பெயரளவு கல்விச்செலவுகளை அடிப்படையாகக் கொண்டு உண்மையாக செலவுகளில் நிகழ்ந்த மாற்றத்தை மதிப்பிட முடியாது.

## கல்வியின் உண்மைச் செலவு

Real cost of Education

தொடர்ச்சியாக பல வருடங்களுக்கான கல்விச்செலவுகளைக் கணிப்பிடும்போது யாதாயினும் ஒரு வருடத்தை அடிப்படையாக எடுத்துக்கொண்டு அந்த வருட விலைகளே (விலைகள் மாறாமல் அப்படியே உள்ளன என்ற எடுகோளின் அடிப்படையில்) தொடர்ந்திருப்பதாக கருதி செலவுகளை கணிக்கும் முறை இதுவாகும்.

இரு வருடகாலப்பகுதியில் கல்விச்செலவு உண்மையாக என்ன சதவீதத்தில் அதிகரித்தது என்பதைக் கணிப்பதற்கு இந்த முறை உதவுகின்றது.

ஆனால் ஒவ்வொரு வருடமும் மக்கள் செலவிட்ட பண அளவுகளை மிகவும் சரியாக (அடிப்படை வருடம் தவிர) இவை காட்டமாட்டா. தேவை கருதி இவ் வகைச் செலவையும் கணித்துக் கொள்கின்றனர். இடைவிலகுவோர் பாதிப்பை இதில் கழிக்க வேண்டுமென்ற கருத்துமுண்டு. பின்வரும் அட்டவணை இவற்றைத் தெளிவுபடுத்தும்.

**பெயரளவு மற்றும் உண்மைக்கல்விச்செலவுகள்**

தலா கல்விச் செலவு 1975 1976 (இந்திய ரூபாய்கள்)

| கல்வி மட்டம் | பெயரளவு செலவு | உண்மைச் செலவு |
|---|---|---|
| ஆரம்பக்கல்வி | 95.90 | 55.20 |
| இடைநிலைக்கல்வி | 257.90 | 148.90 |
| உயர்கல்வி | 5993.60 | 3664.50 |

Source : Tilak and Varghese (1983)

## கல்விச் செலவு பற்றிய அனுபவங்கள்

தென்கிழக்காசியாவின் சிறந்த கல்விப் பொருளியலாளரான பேராசிரியர் திலக் (Jandhyla B. G. Tilak) இந்தியாவில் பல்வேறு காலகட்டங்களிலும்

மேற்கொள்ளப்பட்ட பல அளவீடுகளையும் ஆய்வுகளையும் பகுப்பாய்வு செய்துள்ளார். அதனடிப்படையில் செலவு பொருளாதார திட்டமிடல் தொடர்பு பற்றிய பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். அவற்றில் சிறப்பானவை பின்வருவன.

1. தலா மாணவரின் கல்விச் செலவு மாநிலங்களின் பொருளாதார அபிவிருத்தியுடன் நேரடியான தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை.

2. தனியார் கல்விச் செலவு குடும்பங்களின் வருமான மட்டத்தில் தங்கியுள்ளது.

   வறிய மற்றும் பின்தங்கிய குடும்பங்களின் வருமானம் குறைவாயிருப்பதால் கல்விக்கான அவர்களின் தனிப்பட்ட செலவும் குறைவாவே காணப்படும்.

   கிராமங்களைவிட நகர்ப்புற குடும்பங்களின் கல்விக்கான தனிப்பட்ட செலவுகள் குறைவாகவே காணப்படும்.

3. சமூக ரீதியில் பின்தங்கிய மக்களின் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டுமாயின் நிறுவனமட்ட செலவுகளை உயர்த்துவதால் அதிகபயன் ஏற்படாது, பதிலாக தனியார் செலவுகளை அதிகரிக்கும் வகையில் பெற்றோர் வருமானங்களை உயர்த்த வேண்டும்.

4. கல்விச் செலவின் பங்கீட்டைப் பொறுத்து ஆரம்பக் கல்விக்கும் உயர் கல்விக்குமிடையே சமனற்ற போக்கே நிலவுகிறது. இது வளர்முக நாடுகள் பெரும்பாலானவற்றுக்குப் பொருந்தும்.

5. இடைநிலைக்கல்வி மற்றும் உயர்கல்விக்குச் செலவிடுவதைத் தவிர்த்து ஆரம்பக்கல்விக்குக் கூடுதலாக செலவிடுவதால் வளர்முக நாடுகளில் கல்வியின் விளைவு வீதத்தை அதிகரிக்க முடியும்.

6. தனியார் கல்விச் செலவுகள் வளர்முக நாடுகளில் மிகவும் அதிகமாயுள்ளன. இலவசக்கல்வி இருப்பது போல் பொய்த் தோற்றமிருந்தாலும் நிறுவனமட்டச் செலவுகளுக்கு சமனாக அல்லது சில நிலைமைகளில் அதைவிடவும் கூடுதலாக தனியார் கல்விச் செலவு உயர்வாயுள்ளது.

7. பெரும்பாலான நாடுகள் பெயரளவு கல்விச் செலவுகளின் அடிப்படையில் நிறுவனமட்டச் செலவுகளை மாத்திரம் கவனத்திற் கொண்டு கல்விச் செலவுகள் பெரியளவில் அதிகரிப்பதாக் புள்ளி விபரங்களை வெளியிடுகின்றன. ஆனால் உண்மையான கல்விச் செலவு அதிகரிப்பு மிகவும் குறைவானதே.

8. குடும்பங்களின் வருமானம்சார் கல்விக்கான கேள்வி நெகிழ்ச்சி ஒன்றிலும் கூடியதாகும். வருமானம் அதிகரிக்கும் விகிதாசாரத்தைவிட பெற்றோர் கல்விக்குச் செலவிடும் விகிதாசாரம் அதிகமாகவேயுள்ளது. ஆனால் நிறுவனங்களின் செலவின் அதிகரிப்பு அந்தளவுக்கு இல்லை.



9. கல்விச் செலவுகளில் கட்டிடம், தளபாடம், உபகரணம் போன்ற பௌதீக மூலதன ஆக்கத்துடன் ஒப்பிடும்போது ஆசிரியர் சம்பளங்கள், செலவுப்படிகள் மீதான செலவுகள் மிகவும் கூடுதலாகவுள்ளன. எல்லா கல்விமட்டங்களிலும் இதேபோக்கு காணப்படுகின்றது. எனினும் கல்வி மட்டம் உயர்ந்து செல்லும் போது ஆசிரியர் கொடுப்பனவுசார்ந்த செலவு விகிதம் குறைந்தே செல்கின்றது. கல்வி ஊழியச்செறிவான தன்மையுடையதென்பதை இது விளக்குவதாயுள்ளது.

10. நாடுகளில் வாழும் நலிவுற்ற மக்கட் பிரிவினரின் கல்விச் செலவு வசதி மிக்கவர்களைவிட மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. நகர்ப் புறத்தோரைவிட கிராமிய மக்களும் சமூக ரீதியில் உயர்ந்தோரைவிட, பின்தங்கியோரும் குறைவாகவே செலவிடுவது வளர்முக நாடுகளில் பொதுவானதாகும்.

11. முறைசாராக் கல்விச் செலவுகள் தனியார் செலவு மற்றும் நிறுவன செலவு ஆகிய இரண்டைப் பொறுத்தும், முறைசார் கல்விச் செலவுகளைவிட குறைவானது. இதனால் இக்கல்வியை விரிவுபடுத்துவதும் விரும்பத்தக்கது.

12. கல்விச்செலவு பெருமளவுகு பாடசாலையின் அளவு ஆசிரியர்களின் சராசரிச் சம்பள அளவு, ஆசிரிய மாணவ விகிதாசாரம் என்பவற்றைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறது.

இதனடிப்படையில் கல்வித்திட்டமிடுவோர் செலவு பற்றிய அணுகு முறை மற்றும் கணிப்பீடு என்பவற்றில் புதிய கண்ணோட்டங்களைப் பின்பற்ற வேண்டும். பொதுவாக பின்வரும் அம்சங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

- அரசாங்கங்கள் கல்விக்காக நிதி ஒதுக்கீடு செய்யும்போது வருடாந்த சனத் தொகைப் பெருக்கம் மாணவர் பாடசாலையில் சேரும் விகிதம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு செலவுகளை அதிகரிக்க வேண்டும்.
- கல்விச் செலவு பற்றிய எண்ணக்கருவில் நிறுவனமட்ட செலவுகளே கவனத் திற் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் ஆய்வு முடிபுகள் தனியார் செலவில் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளன. இதன் காரணமாக ஒழுங்கான அடிப்படைகளில், கால இடைவெளியில் தனியார் கல்விச் செலவுகளைக் கணிக்க வேண்டும். தனியார் செலவு, நிறுவனமட்டச் செலவுகளுடன் தொடர்புபடும் வகை மாதிரிகளை கண்டறிவதிலும் கல்வித்திட்டமிடலாளர் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.
- மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கம் என்ற இரண்டுக்கும் கல்விக்கு செலவிடுவது தொடர்பாக மிகவும் தெளிவான கொள்கையைத் தீர்மானிப்பதற்கு திட்டமிடலாளர் வழிகாட்டி உதவவேண்டும்.

| | |
|---|---|
| மத்திய அரசாங்கம் | உயர்கல்வி |
| மாகாண அரசாங்கம் | இடைநிலைக்கல்வி |
| உள்ளூராட்சி சபைகள் | முன் ஆரம்ப மற்றும் ஆரம்ப கல்வி |

என்ற பாகுபாட்டு முறையில் பிரதான செலவுகளை மேற்கொள்ளலாம். வளங்களை அவற்றுக்கெனத் திரட்டலாம். இவற்றில் கல்வித் திட்டமிடலாளர் கூடிய கவனத்துடன் பங்களிப்புச் செய்யவேண்டும்.

- கல்வி விலைச்சுட்டெண் (Educational Price Index) ஒழுங்காக கணிப்பிட வேண்டும். அதனடிப்படையில் கல்விக்கான முதலீடுகள் பற்றிய முடிவுகளைத் தீர்மானித்தல் வேண்டும். பல்வேறு கல்வி மட்டங்களுக்கும் ஏற்ப வெவ்வேறு கல்வி விலைச் சுட்டெண்களைக் கணிப்பதற்கு கல்வித்திட்டமிடலாளர் தொடர்ச்சியாக கவனம் செலுத்தவேண்டும்.
- கல்விக்கான செலவுகள் திறைசேரியிடமிருந்து (பொதுவாக) பெறப்படுகின்றன. திறைசேரி வரி மூலமாகவும் வரி அல்லாத வழிகளிலும் தன் நிதியை சேகரிக்கின்றது. ஆனால் கல்வி முதலீட்டு நிதி குடும்பங்களிடமிருந்தும் திரட்டப்பட வேண்டும். இவை பற்றிய கணிப்பீடுகள் தேசிய வருமானத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். இதற்கு கல்வித் திட்டமிடலாளர் உதவுதல் வேண்டும்.

## நிதியிடல்

(Financing)

கல்விச் செலவுகளில் நிறுவனமட்டச் செலவுகள் பெருமளவுக்கு அரசாங்கங்களினாலேயே நிதியிடப்பட்டு வருகின்றன. ஒரு நாட்டின் தேசிய உற்பத்தியின் அளவைப் பொறுத்தே அரசாங்கம் கல்வியில் நிதியிடக்கூடிய அளவு தங்கியுள்ளது. அத்துடன் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அல்லது குறிப்பிட்ட சமூகத்தில் மக்கள் கல்வியை விரும்பும் அளவு அதற்குக் கொடுக்கும் மதிப்பு மற்றும் முன்னுரிமையின் அளவுக்கு ஏற்பவே கல்வியில் நிதியிடுகிறது. ஆனால் சில நாடுகளில் அரசாங்கங்கள் குறுகிய காலத்துள் மக்களின் எழுத்தறிவு மற்றும் பொதுவான கல்வி மட்டங்களை அதிகரிக்க விரும்புமிடத்து தனது கொள்கையடிப்படையில் அதிக நிதியை தன்னிச்சையாக ஒதுக்குவதுண்டு. சீனா, ரஷ்யக் குடியரசு போன்றன இவ்வாறு இன்றும் கூட தீர்மானம் எடுக்கின்றன.

பொதுவாக மக்களின் தேவையிலும் பார்க்க கூடுதலாகவும் செலவிடக்கூடாது; பற்றாக்குறையாகவும் செலவிடக்கூடாது; உத்தமமாக செலவு செய்தல் வேண்டும் என்று கருதப்படுகின்றது.

பொதுவாக கல்வியைப் பன்முகப்படுத்துவதாலும் கல்வி செயற் திட்டங்களில் மக்கள் பங்களிப்பை அதிகரிப்பதாலும் மத்திய அரசாங்கம் தன் நிதியிடும் பங்கைக் குறைத்துக் கொள்ளலாம் என்று கூறப்படுகிறது. உயர்கல்வி நாட்டின்



விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி, ஆராய்ச்சி என்பவற்றைத் தூண்டுவது; தேசிய ரீதியாக மக்களையும், வளங்களையும், சர்வதேச தொடர்புகளையும் தீர்மானிக்கின்ற பிரதான முடிவுகளை மேற்கொள்ளும் பணித்துறை உயர் அலுவலர்களை உருவாக்குவது என்ற அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் உடையது; தேசத்தின் உயர்நிலை ஆற்றலையும், பொருளாதார வெற்றிகளையும் தீர்மானிக்கக் கூடியது. இதனடிப்படையில் மத்திய அரசாங்கம் அதன் தராதரத்தைப் பேணுவதற்காக உயர்கல்வியில் நிதியிட வேண்டும் என்ற கருத்து உண்டு.

மாகாணங்களில் புவியியல் மற்றும் பொருளாதார வள அமைவு என்பவற்றின் அடிப்படையிலும், சமூகங்களின் வளர்ச்சி வேறுபாடுகளின் அடிப்படையிலும் இடைநிலைக்கல்வி தொடர்பான முடிவுகளை மாகாண அரசாங்கங்கள் மேற்கொள்ளலாம். தனித்தன்மை, சமத்துவம், துரித வளர்ச்சி, இயங்கியல் தன்மை என்பன தொடர்பான தனது கொள்கை முடிவுகளுக்கு ஏற்ப நிதியிடல் பற்றி தீர்மானிக்க முடியும் என்று விளக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மற்றும் பிரதேச சபை நிர்வாகப்பிரதேசங்கள் மேலும் சிறிய புவியியற் பிரதேசங்களாகும். மக்கள் தொகையும் குறைவு, சிற்றின அணுகுமுறையின்படி ஒவ்வொரு குடும்பத்தினதும், பெற்றோரினதும் உண்மை நிலைமைகளையும் அவற்றின் தேவைகளையும் இச்சிறிய நிர்வாக அமைப்புகளினால் கண்டறிய முடியும். இதனால் முன்பள்ளிக் கல்வி மற்றும் ஆரம்பக்கல்விக்கு இவை தாமாக நிதியிடுதல் விரும்பத்தக்கதாகும்.

எனினும் எல்லா மட்டங்களையும் நிலைக்குத்தாக இணைக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை வடிவமைக்கும்போது எல்லோரும் நிதியிடுவது பற்றி தெளிவான முடிவுகளை மேற்கொள்ள முடியும்.

தற்போது நாடுகளின் சில வகையான தேசிய மற்றும் பிராந்திய கல்விச் செயற்திட்டங்களில் சர்வதேச நிறுவனங்களும், சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் நிதியிடுவது அதிகரித்து வருகிறது. அரசசார்பற்ற நிறுவனங்கள் கல்வியில் நிதியிடும் மூன்றாவது (அரசாங்கம் தனியார் துறைக்கு அடுத்து) சக்தியாக வளர்ந்து வருகின்றது. அண்மைக்காலங்களில் நாடுகள் கல்வி போன்ற சமூகத்துறைகளின் தேவைக்கு நிதியிடுவதற்கென திரட்டு நிதியை (Consolidated Fund) யும் பராமரித்து வருகின்றன. அரசின் சில வருமானங்கள் தவிர செல்வந்தர்களின் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கொடைகளையும் இது உள்ளடக்கியுள்ளது. தொடர்ந்து வளர்ந்து வரும் நிதியாக பேணப்படும் இத்தகைய திரட்டு நிதியிலிருந்தும் கல்விக்கு நிதியிடப்படுகின்றது.

கல்வியைப் பெறுகின்ற பயனாளிகளே தமது கல்விக்கு நிதியிடவேண்டும் என்று தற்போது வலியுறுத்தப்படுகின்றது. கல்வி தற்போது ஒரு பண்டமாக கருதப்படுகிறது. கல்வியை வழங்குவோரும் அதனைப் பெறுவோரும் அதிகரித்து ஒரு

பொருளாதார உள்ளீட்டு வெளியீட்டுத் தகுதியைக் கல்விக்கு ஏற்படுத்தி விட்டனர். இதன் காரணமாக ஒவ்வொரு பெற்றோரும் தமது பொருளாதார வசதிகளுக்கும், கல்வி அபிலாஷைகளுக்குமேற்ப நிதியிட முன்வந்துள்ளனர். இப்போக்கு அதிகரிக்குமிடத்து கல்வியில் தராதர வேறுபாடுகளும் வாய்ப்பு வேறுபாடுகளும் அதிகரிக்கும் சந்தர்ப்பங்கள் எழுகின்றன. ஆனாலும் பயனாளிகள் பொறுப்பேற்கும் தன்மை வலுப்பெற்றால் அரசாங்கம் சமூக, பொருளாதார, இனத்துவ ரீதியில் புறக்கணிக்கப்பட்ட மக்கட் பிரிவினர் கல்விக்குத் தான் நிதியிடக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்குமென்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இவ்வாறு நிதியிடும் வசதிகள், ஏற்பாடுகள் என்பவற்றுக்கேற்பவே கல்விச் செலவுகளின் பயன்கள் உண்மையில் சமூகத்தின் எப்பிரிவினரைச் சென்றடையும் என்பது நிச்சயிக்கப்படுகின்றது. இந்த அடிப்படையிற்றான் கல்விச் செலவும் நிதியீட்டமும் கல்வித்திட்டமிடலில் முக்கியத்துவம் பெறுகின்றது.

CONCEPT DESIGN & PRINT BY KRIBS

ISBN 955-1013-73-5

9 789551 013738

lbd publication

விலை : ரூபா 150.00